Koviloor Digital Library

தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள்

அருளிய

வைராக்கிய சதகம்

மூலமும் - உரையும்



Acc. No: 28114
R65-V 8-3

உரை:
வேதாந்த ஆசிரியர்
வீரபாண்டி
பெ. ராதாகிருஷ்ணன்

இந்நூல் முதல் பகுதி சாத்திர வடிவாகவும் பிற்பகுதி தோத்திர வடிவாகவும் உள்ளது. பின் பகுதியான ஐம்பது பாடல்களும் தத்துவ கருத்துகளுடன் தில்லை நடராஜப் பெருமானைப் போற்றி வணங்குவதாக உள்ளது. கோவிலூர் திருமடத்தில் ஆரம்பம் முதல் பாட நூலாக அச்சிடப்பட்டு வந்துள்ளது.

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் - 630 307 (காரைக்குடி அருகில்)

Koviloor Digital Library

Koviloor Digital Library

வைராக்கிய சதகம்

(மூலமும் உரையும்)

வேதாந்த ஆசிரியர்

வீரபாண்டி பெ. ராதாகிருஷ்ணன்

தற்போது முதற் பதிப்பாகக் கோவிலூர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகளின்

திருவுளப்பாங்கின் வண்ணம் வெளியிடப்பட்டுள்ளது.

கலாக்ஷேத்திரா பப்ளிகேஷன்ஸ்

நிர்வாக அலுவலகம்:	விற்பனை நிலையம்:
கோவிலூர் மடாலயம்,	கோவிலூர் மடாலயம்,
கோவிலூர் 630 307.	52, குப்பையா தெரு,
(காரைக்குடி அருகில்)	மேற்கு மாம்பலம்,
போன்: 04565 – 236846	சென்னை – 33.
E-mail: koviloormutt@gmail.com	போன்: 044 – 24743081

Koviloor Digital Library

முதற் பதிப்பு : மே 2017
பக்கங்கள் : 104
விலை : ₹70/-

சென்னையில் கிடைக்குமிடம்

கோவிலூர் மடாலயம்
52, குப்பையா தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–33.
போன்: 044 – 24743081

நிர்வாக அலுவலகம்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் – 630 307.
(காரைக்குடி அருகில்)
தொலைபேசி: 04565 – 236846
E-mail: koviloormutt@gmail.com

கலாக்ஷேத்ரா அச்சகம்
கோவிலூர் – 630 307.

Koviloor Digital Library

ஆசியுரை

ஸ்ரீ ல ஸ்ரீ மெய்யப்ப ஞான தேசிக சுவாமிகள்
கோவிலூர் ஆதீனம்.

கோவிலூர் மடாலயத்தில் இருநூறு ஆண்டுகளாக வேதாந்தம் போதிக்கப்படுகிறது. ஒரு பல்கலைக்கழகத்தினுடைய பாடத்திட்டம் போல 16 நூல்களை வரிசைக்கிரமமாகப் போதித்து வேதாந்த ஞானத்தை ஊட்டுகிறது.

வைராக்கிய சதகம் ஐந்தாவது நூலாகப் போதிக்கப்படக் கூடியது. கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் அனைத்தும் எளிய கருத்தாழம் மிக்க செய்யுள் வடிவத்திலேயே உள்ளன. வைராக்கிய சதகம் பேரூர் ஆதீனம் ஆதிகுரு முதல்வர் சாந்தலிங்க சுவாமிகளால் எழுதப் பெற்றது. இதற்கு, சிதம்பர சுவாமிகள் தொடங்கிப் பலர் உரை எழுதியுள்ளார்கள். இன்றைய வேதாந்த மாணவர்களுக்குப் புரியும் வண்ணம் வீரபாண்டிக் கிராமத்தில் வேதாந்தம் போதித்து வரும் ஞானாசார்யார் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஓர் எளிய விரிவான உரையை எழுதியுள்ளார்கள். இந்த உரை வேதாந்தம் கற்க விரும்புவோருக்கு மிக்க உதவியாக இருக்கும்.

ஞான வைராக்கியத்தை வலுப்படுத்துகின்ற வைராக்கிய சதகமும் ராதாகிருஷ்ணன் அவர்களுடைய தெளிந்த உரையும் அன்பர்கள் அனைவருக்கும் பயன்படுவதாகுக.

ஆசீர்வாதங்கள்.

ஸ்ரீசற்குருநாதன் துணை.

ஏப்ரல் 2017

Koviloor Digital Library

கோவிலூர் மடாலய வெளியீடுகள்

திருமூலர் அருளிய திருமந்திரம் ரூ.750.00
மூல பாட ஆய்வுப் பதிப்பு – மூன்று பகுதிகள்
பதிப்பாசிரியர் – டாக்டர் சுப. அண்ணாமலை

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் - முதல் பாகம் ரூ. 50.00
நாநா சீவ வாதக் கட்டளை – கீதாசாரத் தாலாட்டு
சசிவன்ன போதம் ஆகிய மூன்றும் அடங்கியது.

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் - இரண்டாம் பாகம் ரூ.100.00
மகாராஜா துறவு – வைராக்கிய சதகம் –
வைராக்கிய தீபம் ஆகிய மூன்றும் அடங்கியது.

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் - மூன்றாம் பாகம் ரூ.200.00
இலட்சணா விருத்தி – வேதாந்த சூடாமணி –
கைவல்ய நவநீதம் ஆகிய மூன்றும் அடங்கியது.

கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் - நான்காம் பாகம் ரூ.300.00
விவேக சூடாமணி – அஞ்ஞவதைப் பரணி,
ஈசுவரகீதை ஆகிய மூன்றும் அடங்கியது.

சிவபூஜா விதியும் விளக்கங்களும் (படங்களுடன்) ரூ.200.00
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

ஸ்ரீ–ல–ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருளிய
கைவல்லிய நவநீதம் ரூ.150.00
ஸ்ரீ–ல–ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய உரையுடன்

ஸ்ரீமத் பகவத் கீதை மூலமும்
ஸ்ரீ பொன்னம்பல சுவாமி உரையும் ரூ.150.00

சைவாகம - லேக - ஸர்வஸ்வம் ரூ. 20.00
S. அருணசுந்தரம்

காரணாகமத்தில் ஸ்நாந விதி - மூலமும் உரையும் ரூ. 15.00
உரையாசிரியர் சிவஸ்ரீ M. சுந்தர குருக்கள்

Koviloor Digital Library

ஓம் தத் ஸத்

சிவமயம்

கணபதி துணை

வைராக்கிய சதகம்

மூலமும் உரையும்

1. வாழி நெஞ்சமே சென்றிடேல் நின்று இதோர்
வார்த்தை எற்கு உரை செய்வாய்
கீழ் யாம் இயற்று உயர் தவத்து இவ்வுடல்
கிடைத்தது அன்றோ மற்று ஈது
ஊழிக்காலம் இங்கு இருக்குமோ நீயும் ஓர்ந்து
உளை எனின் உள போழ்தே
சூழும் ஏழ் பவம் துடைத்தல் செய்யாய் இதென்
தொழுது அரன் துணைத்தாளே.

இதன் பதப்பொருள்

வாழி நெஞ்சமே - *நீ நீண்டகாலம் வாழ்க மனமே!* **சென்றிடேல் நின்று** - *நீ பஞ்ச விஷயங்களில் சென்று கொண்டே இருக்கின்றாய். அங்ஙனம் செல்லாமல் நின்று,* **இதோர் வார்த்தை எற்கு** - *இது ஒரு சொல் எனக்கு,* **உரை செய்வாய்** - *சொல்லுவாய்,* **கீழ்யாம் இயற்று** - *இப்பிறவிக்கு முன்பிருந்த அளவற்ற மானிடப் பிறவிகளில் செய்த,* **உயர் தவத்து** - *மேலான புண்ணிய தபோ பலத்தினால்,* **இவ்வுடல் கிடைத்ததன்றோ** - *அரிதாகிய இம்மானிட சரீரம் கிடைத்தது.* **ஈது ஊழிக்காலம்** - *இந்தத் தேகம் கற்பகாலம்,* **இங்கு இருக்குமோ** - *அழியாமல் இருக்குமோ? இருக்காது,*

Koviloor Digital Library

நீயும் ஓர்ந்துளை - இதனை நீ விசாரித்து அறிந்து கொள்ளாய், **எனின் உள போழ்தே** - அங்ஙனம் அறிந்து கொள்வாயானால் இத்தேகம் இருக்கும் போதே, **அரன்துணைத்தாள் தொழுது** - அனுகூலமாயுள்ள சிவனது திருவடியை வணங்கி, **சூழும் ஏழ் பவம்** - உன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற ஏழுவகையான பிறப்பையும், **துடைத்தல் செய்யாய்** - நீக்குதல் செய்யாய், செய்யாமல் இருக்கிறாய். **இதென்** - அஃது இல்லாமல் உமது காரியம் என்னவோ புதுமையாய் உள்ளது என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

நீ நீண்ட காலம் வாழ்க மனமே! நீ பஞ்ச விஷயங்களில் சென்று கொண்டே இருக்கின்றாய். அங்ஙனம் உலக விஷயங்களில் செல்லாமல் நின்று பதில் எனக்குச் சொல்வாய். இப்பிறவிக்கு முன்பு இருந்த அளவற்ற மானிடப் பிறவிகளில் செய்த மேலான புண்ணிய தபோ பலத்தினால் அரிதாகிய இம்மானிட சரீரம் கிடைத்தது. இந்தத் தேகம் கற்பகாலம் அழியாமல் இருக்குமோ? இருக்காது. இந்தத் தேகம் கிடைப்பது அரிது என்றும் இது நிலையற்றது என்பதையும் விசாரித்து அறிந்து கொள். அங்ஙனம் அறிந்து கொள்வாயானால் இந்தத் தேகம் இருக்கும் போதே பிறவாநிலையாகிய மோட்சத்தையடைய அனுகூலமாயுள்ள(உதவியாயுள்ள) சிவனது திருவடியை வணங்கி உன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற ஏழுவகையான பிறப்பையும் நீக்குதல் செய்வாய். அங்ஙனம் மோட்சமடைவதற்கான உபாயத்தைக் கடைப்பிடிக்காமல் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்? இது என்னவோ புதுமையாய் விசித்திரமாய் உள்ளது என்று மனதைப் பார்த்து விவேகம் கூறிற்று.

விளக்கம்

காரியம் ஆகவேண்டியிருப்பின் பகைவனிடமும் சென்று அவனைப் புகழ்ந்து, கெஞ்சி, காரியத்தைச் செய்து முடிப்பது போன்று விவேகமும் மனதினைப் பார்த்து "வாழி நெஞ்சமே" என்றும், இப்பிறவிபோனாலும் அடுத்த பிறவியில் ஆத்ம ஞானத்தை அடைந்து கொள்ளலாம்

Koviloor Digital Library

என்றும் மனம் சொல்ல அதற்கு விவேகம், மானிடப்பிறவி கிடைப்பது அரிதாம் என்பதை "உயர் தவத்தால் இவ்வுடல் கிடைத்தது அன்றோ" என்றும், வயதான பிறகு இறைவனது திருவடியை (ஆத்ம ஞானம்) அடைந்து கொள்ளலாம் என்று மனம் கூற "ஊழிக்காலம் இங்கு இருக்குமோ" என்றும் விவேகம் கூறிற்று.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்பது திருக்குறள்.

ஏழுவகையான பிறப்பு

1. தாவரம் 2. நீர் வாழ்வன 3. ஊர்வன 4. பறப்பன 5. நடப்பன 6. மனிதன் 7. தேவர்கள்

கற்பகாலம் - ஊழிக்காலம் - *நான்கு யுகம்*

1. கிருதயுகம் 2. திரேதாயுகம் 3. துவாபரயுகம் 4. கலியுகம்.

▲

2. தாளையே தரம் அறிகிலா(து)எமக்கு
எளிதரு சிவப்பிரகாசற்கு
ஆள் யாம் எனத்திரிந்து அவன் பணிபுரிந்து
அரிய வீடு அடைகில்லாய்
கேள் ஐயோ மனையாதிய அளற்றிலே
கிடந்து உழைந்தனை நெஞ்சே
நாளை ஓலையும் தூதரும் வரின் இவர்
துணைகொலோ நவில்வாயே.

இதன் பதப்பொருள்

தாளையே தரம் அறிகிலாது - *சிவனது திருவடியின் மகிமையை அறியாமல் இருக்கின்றாய்,* **எமக்கு எளிதரு சிவப்பிரகாசற்கு** - *ஆத்ம ஞானத்தை உபதேசித்து, சுலபமாகப் பக்குவமடையச் செய்யும் வல்லமையுடைய எனது குருவாகிய சிவப்பிரகாசற்கு,* **ஆள் யாம் எனத்திரிந்து** - *நானே பணிவிடைகளைச் செய்வதில் மிகச் சிறந்தவன்*

Koviloor Digital Library

எனும் அளவிற்குச் சிவப்பிரகாசரிடம் நிழலைப் போல இருந்து, **அவன் பணிபுரிந்து அரிய வீடு** - குருவினது ஏவல் பணிவிடைகளைச் செய்து கிடைப்பதற்கு மிகவும் அரிதாகிய மோட்சத்தினை, **அடைகில்லாய்** - அடையாமல் இருக்கின்றாய், **மனையாதிய அளற்றிலே** - மனைவி, மக்கள், பொருள்களாகிய குடும்பச் சேற்றின்கண், **கிடந்து உழைந்தனை** - வீழ்ந்து உழைந்து கொண்டிருக்கின்ற, **நெஞ்சே ஐயோ கேள்** - மனமே! ஐயோ நீ கேட்பாயாக, **நாளை ஓலையும் தூதரும் வரின்** - இனி நாளைக்கு இயமனது தூதர்களும், சித்ர குப்தனது மரண ஓலையும் வருங்காலத்து, **இவர் துணைகொலோ நவில்வாயே** - இந்த மனைவியாதியாகிய சீவர்கள், துணையாக இருப்பார்களோ? பதில் சொல்வாயாக என்று விவேகம் கூறிற்று. (அறிகிலாது - பாராது, திரிந்து (திருவுளத்திற்குப் பாங்காக) நடந்து கொண்டு)

பொழிப்புரை

சிவனது திருவடியின் (ஆத்ம ஞானத்தின்) மகிமையை அறியாமல் இருக்கின்றாய். அடியேனைத் தகுதியுள்ளவன், தகுதியற்றவன் என்று பாராது ஆத்ம ஞானத்தினை உபதேசித்துச் சுலபமாகப் பக்குவமடையச் செய்யும் வல்லமையுடைய எனது குருவாகிய சிவப்பிரகாசற்கு அடியேனாக இருந்து பணிவிடைகளைச் செய்து கிடைப்பதற்கு மிகவும் அரிதாகிய மோட்சத்தினை அடையாமல் இருக்கின்றாய். மனைவி மக்கள் பொருளாகிய குடும்பச் சேற்றின்கண் வீழ்ந்து உழைந்து கொண்டிருக்கின்ற மனமே! ஐயோ! நாளைக்கு இயமனது தூதர்களும், சித்ரகுப்தனது மரண ஓலையும் வருங்காலத்து. இம்மனைவியாதியான சீவர்கள் துணையாக இருப்பாரோ? பதில் சொல்வாயாக என விவேகம் கூறிற்று.

விளக்கம்

தாள் என்பது சிவனது திருவடி. அதாவது ஆத்ம ஞானத்தைக் குறிக்கின்றது. இந்நூலாசிரியராகிய சாந்தலிங்க சுவாமி தனது குருவாகிய சிவப்பிரகாசற்கு நான்கு விதப் பணிவிடைகளைச் செய்தும் ஆத்ம ஞானத்தை அடைந்தும் பணிவிடைகளைச் செய்யவில்லை என்றும்

Koviloor Digital Library

மோட்சமடையவில்லை என்றும் தன்னைத்தாழ்மையுடன் சொல்கின்றார். ஞான சற்குருவிற்குப் பணிவிடைகளைச் செய்தால் சாதன சதுட்டய சம்பத்துக் கைகூடும். சாதன சதுட்டய சம்பத்து கிடைத்தால் ஆத்ம ஞானம் உண்டாகும். சாந்தலிங்க சுவாமி தனது குரு சிவப்பிரகாசற்குப் பணிவிடைகளைச் செய்து ஆத்ம ஞானத்தையடைந்தார். தீவிர முமுட்சுக்கள் குருவிற்குப் பணிவிடைகளைச் செய்து ஆத்ம ஞானத்தை அடைய வேண்டும் என்பது கருத்து.

இதற்கு உதாரணம். சசிவர்ண போதம்

நன்றாய் முனிதாள் வழிபாடதனால் நாநா
விதமான பிறப்பினைவிட்டு
ஒன்றாகிய வீடுணர் உத்தமர்கட்கு உள சாதன
நான்கும் உதித்தனவே

மேலும் சசிவர்ணன் தனது குருவாகிய மாநந்தி பராயணருக்கு

இவனே திருமேனி தனக்கு உரியான்
என உற்றனன் உம்பனொடே

எனும் அளவிற்கு ஏவல் பணிவிடைகளைச் செய்தான். மோட்சமடைவது மிகமிகக் கடினம் என்பதனை "அரியவீடு" என்றார்.

அளற்று (சேற்று) நிலத்திலே கால் வைத்தால் ஒரு காலை அடி எடுத்து வைக்கும் போது அடுத்த கால் கீழே இறங்கும். இதைப்போல் மற்றொரு காலும் இறங்கும். மாறி மாறி இறங்கும். மேலே ஏறி வர முடியாது. அதைப் போல மனைவி மக்கள் பொருளாகிய விஷயங்களில் ஒரு விஷயத்திலிருந்து விடுபடும் போது இன்னொரு விஷயம் வரும். மாறி மாறி விஷயங்கள் வந்து கொண்டே இருக்கும். உலக விஷயங்களிலிருந்து விடுபட முடியாது. அதனையே "மனையாதிய அளற்றிலே" என்றார்.

இறக்கும் போது மனைவி, மக்கள், பொருள் நம்முடன் வருவார்களா? இல்லை. இறக்கா வண்ணம் காப்பாற்றுவார்களா? இல்லையே! அதனையே "துணை கொலோ" என்றார்.

Koviloor Digital Library

சாந்தலிங்க சுவாமி தனது குரு (சிவப்பிரகாசர்க்கு) நான்கு பணிவிடைகளைச் செய்து பக்குவமாகி ஜீவன் முத்தர் ஆனார். "பணிபுரிந்து அரியவீடு அடைகில்லாய்" என்பது நூலைச் சிரவணம் (படிக்கும்) செய்யும் அதிகாரிகளுக்காகக் கூறப்பட்டதே தவிர ஆசிரியருக்கு இல்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். எல்லா மகான்களின் உபதேசங்களும் தனக்குத் தான் என்று சொல்வார்களே தவிர அஞ்ஞானிகளாகிய உங்களுக்குத் தான் என்று சொல்வதில்லை. முமுட்சுகள் அதைப் புரிந்து கடைப்பிடித்து உய்வடைய (பக்குவமடைய) வேண்டும் என்பது கருத்து.

குருவிற்குச் செய்யும் நான்கு பணிவிடைகள்

1. ஆப்தம் - குருவிற்கு உபயோகமுள்ளதைக் கேட்காமல் செய்வது
2. அங்கம் - குருவினது உத்தரவு கேட்டுச்செயல்படுவது
3. தானம் - குருவினது நிலம், மனை, மடம் முதலியவற்றைக் காத்தல்.
4. சற்பாவம் - குருவைச் சிவசொரூபமாகப் பார்த்தல்

▲

3. நவிலின் இம்மனை மக்களுக்கு ஒரு துணை
 நாமலது இலையென்றே
கவலையுற்று அரன் தாள் மறந்தனை
 யுனைக்காலனார் கொடு போயின்
குவலயத்து அடைந்து இவரை நாடொறும்
 புரந்திடுவையோ குறிக்குங்கால்
சவலை நெஞ்சமே சிவனலாது
 உயிர்க்குயிர்தானும் ஓர்துணையாமே.

இதன் பதப்பொருள்

இம்மனை மக்களுக்கு - மனைவி, மக்கள் முதலியோர்க்கு, **ஒருதுணை நாமலது இலை என்றே** - இணையற்ற துணை நாம் அல்லாமல் வேறு எவரும் இல்லையே என்று, **கவலையுற்று அரன் தாள் மறந்தனை** - எண்ணி வருத்தமடைந்து இறைவனது திருவடியை மறந்தாய், **நவிலின் உனைக்காலனார் கொடுபோயில்** - இங்ஙனம் நீ கருதிக் கொண்டு சொல்வாயாயின் உன்னை

Koviloor Digital Library

யமன் கொண்டு போய் விட்டால், **குவலயத்து அடைந்து இவரை நாடொறும் புரந்திடுவையோ -** *மீண்டும் பூமியின் கண் வந்து குடும்பத்தைப் பார்த்து மனைவி மக்களாகிய சீவர்களைத் தினமும் காக்கத் தான் கூடுமோ?,* **குறிக்குங்கால் சவலை நெஞ்சமே -** *உண்மையாக விசாரித்துப் பார்க்குமிடத்து அற்ப ஆசைகளையுடைய மனமே,* **சிவனலாது உயிர்க்கு உயிர்தானும் ஓர்துணையாமே -** *சீவர்களுக்குச் சிவனே துணையல்லாமல் சீவர்களாகிய உயிர்களுக்குச் சீவர்கள் துணையாவாரோ? துணையாக மாட்டார்கள் என்று விவேகம் கூறிற்று,* **சவலை -** *பேதமை.*

பொழிப்புரை

மனைவி, மக்கள் முதலியோர்க்கு இணையற்ற துணை நாம் அல்லாமல் வேறு எவரும் இல்லையே என்றாய் மனமே! மனைவி மக்களைக் காப்பாற்ற எனைத் தவிர வேறு யாருமில்லையே என்று எண்ணி வருத்தமடைந்து சிவனது திருவடியை மறந்தாய். இங்ஙனம் நீ கருதிக் கொண்டு சொல்வாயாகின் உன்னை யமன் கொண்டு போய் விட்டால் மீண்டும் பூமிக்கு வந்து குடும்பத்தைப் பார்த்து மனைவி மக்களாகிய சீவர்களைத் தினமும் காக்கத்தான் கூடுமோ? அல்லது நலமாய் இருக்கிறீர்களா என்று தான் விசாரிக்கத்தான் கூடுமோ? உண்மையாக விசாரித்துப் பார்க்குமிடத்து ஆசையினாலும் அறியாமையினாலும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மனமே! சீவர்களுக்குச் சிவனே துணையல்லாமல் சீவர்களாகிய உயிர்களுக்கு, உயிர்களாகிய சீவர்கள் துணையாவாரோ? துணையாகமாட்டார்கள் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

மனைவி மக்களுக்கு என்னைத் தவிர வேறு துணையே இல்லை என்று நினைத்து நான் தான் குடும்பத்தைக் காப்பாற்றுகிறேன். நான் இல்லை. என்றால் என் குடும்பத்தைக் காப்பாற்றுவார் யார்? என்று பரிதவித்தலை, "கவலையுற்று" என்றார்.

(எ.கா) "ஒருதுணை நாமலது" என்பதற்கு உதாரணம் சிவானந்தபோதம்.

Koviloor Digital Library

அவரெல்லாம் இருக்க இப்போது உன்னை யெமன்
அழைத்து விடில் யாது செய்வாய் அழகு நெஞ்சே
இவர்களுக்குப் பிழைக்கும் வகை திரும்பி வந்தே
ஏதுவாய் முடிப்பதுண்டோ எண்ணிப் பாராய்
தவறி நீ கடம் விட்டுப் போகும் போது
தாம் கூட மாண்டாரோ பிழைப்பில்லாமல்
அவரவர்க்குச் சிவன் துணையென்று எண்ணிடாமல்
ஐயத்தால் இப்படியே அலைவுற்றாயே.

(எ.கா)

"சிவனலாது உயிர்க்கு உயிர்தானும் ஓர் துணையாமே"

என்பதற்கு உதாரணம் மகாராஜா துறவு

"அனைவருக்கும் நாயகன் ஓர் மேலாம் ஈசன்
அன்னவனையே தேடிப் போகின்றேன் என அரசற்கு
அரிவை சாற்றும்"

▲

4. துணையதாய் எமைத்தொடர்தரு தொடர்பரன்
தொல் கழல் துணையல்லாது
உள் நைவு செய்தடும் இகலது அஞ்ஞானம் என்று
உள்ளவாறு உணராய் மற்று
இணையில் நெஞ்சமே பகையிவர் உறவு இவர்
என வினை வழியே வந்து
அணைவ சீவரை யுனி முனிவாதிய
அடுத்து எனைக் கெடுத்தாயே.

இதன் பதப்பொருள்

எமைத் தொடர்தரு துணையதாய் - *சிருட்டிகால முதல் ஒவ்வொரு பிறவி தோறும் எனக்குத் தொடர்ந்து துணையாக இருக்கின்ற,* **தொடர்பு அரன் தொல்கழல் துணை** - *அந்தந்தப் பிறவி தொறும் தொடர்ந்து வருகின்ற பழமையான இறைவனது திருவடியே துணையாய் உள்ளது.* **அல்லாது உள்நைவு செய்து அடும்** - *அங்ஙனம் துணையாக இல்லாமல் உள்ளத்தை வருத்தத்தையடையச் செய்து நாசம் பண்ணுகின்ற,*

Koviloor Digital Library

இகலது அஞ்ஞானம் என்று - *பகையாவது அறியாமை என்று,* **உள்ளவாறு உணராய்** - *உண்மையான நிலையினை அறியாமல் இருக்கின்றாய்,* **இணையில் நெஞ்சமே** - *இழிவில் உனக்கு நிகரில்லாத மனமே!* **பகை இவர் உறவு இவர்** - *இவைகள் பகைவர்கள் என்றும் இவர்கள் உறவினர் என்றும்,* **வினைவழியே வந்து அணைவசீவரை** - *முன்செய்த வினைகளின் (சஞ்சிதம்) பிரகாரம் வந்து பொருந்திய சீவர்களை,* **உனி முனிவர்திய அடுத்து, எனைக் கெடுத்தாயே** - *நல்லது செய்யும் சீவர்களிடத்து விருப்பமும் கெடுதல் செய்யும் சீவர்களிடத்து வெறுப்பும் அடைகின்றாய். அந்தக் கருத்தினை என்னையும் ஏற்கச்சொல்லி உன்னோடு கூடிய என்னையும் கெடுத்தாய் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

உலக உற்பத்தியானதிலிருந்து எண்ணில் அடங்காத பிறவி எடுத்துக் கொண்டு வருகின்ற என்னை அந்தந்தப் பிறவிகள்தோறும் எனக்குத் தொடர்ந்து வந்து உறவாகிப் பழமையான இறைவனது திருவடியே துணையாய் இருக்கின்றது. அங்ஙனம் துணையாக இல்லாமல் உள்ளத்தை வருத்தத்தையடையச் செய்து நாசம் பண்ணுகின்ற பகையாவது யாதெனின் அஞ்ஞானம் என்று உண்மையான நிலையினை அறியாமல் இருக்கின்றாய். கீழானவைகளில் உனக்கு ஒப்பில்லாத மனமே! முற்பிறவிகளில் செய்த சஞ்சித கர்மங்களின் வினைப்பயனாய் வந்து பொருந்திய சீவர்களை இவர்கள் பகைவர்கள் என்றும் இவர்கள் உறவினர்கள் என்றும், நன்மை செய்யும் சீவர்களிடத்து விருப்பமும், தீமை செய்யும் சீவர்களிடத்து வெறுப்பும் அடைகின்றாய். உன்னைப் பொருந்தியிருக்கின்ற என்னையும் இவர் நன்மை செய்கிறார் என்றும், இவர் தீமை செய்கிறார் என்றும், இவர்களே நன்மை, தீமைக்குக் காரணம் என்று உனது அபிப்பிராயத்தை என்னையும் ஏற்றுக் கொள்ளும்படி வைத்து என்னையும் கெடுத்தாயே! மனமே! என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

என்றென்றும் சீவர்களுக்குத் துணை இறைவனது திருவடியே. என்றென்றும் சீவர்களுக்குப் பகை அஞ்ஞானமே.

Koviloor Digital Library

துணையாய் இருக்கும் இறைவனது திருவடியால் ஆனந்தமும் அஞ்ஞானத்தால் துக்கமும் பிறவியும் உண்டாகின்றது. அவரவர் முன்னிருந்த மானிடப்பிறவிகளில் செய்த புண்ணியத்தினால் இன்பமும், பாவத்தினால் துன்பமும் அடைகிறார்கள். இன்பமும், துன்பமும் அவரவர் வினைக்கு ஏற்றவாறு இறைவன் மற்ற உயிரினங்கள் மூலமாகக் கொடுக்கின்றார். அங்ஙனம் இருக்க, மனது நன்மை செய்பவர்களிடம் விருப்பமும் தீமை செய்பவர்களிடம் வெறுப்பும் அடைகின்றது.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது பெரியோர் வாக்கு.

சிவனது திருவடியை (ஆத்ம ஞானத்தை) அடைந்தவர்க்கு ஆனந்தமும், அஞ்ஞானத்தில் உள்ளவர்க்குத் துன்பமும் உண்டாகிறது என்பது கருத்து. எனவே யாரிடத்தும் விருப்போ, வெறுப்போ கொள்ளக் கூடாது என்பது கருத்து.

அஞ்ஞானம் என்பது ஆத்மாவை அறியாமல் இருப்பது அதாவது தன்னுடைய உண்மையான நிலையை (ஆத்மாவை) அறியாமல் இருப்பது. நான் யார்? என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமையாம். ஆத்ம ஞானம் என்பது தன்னையறிதலாம். ஆத்மாவை அறிதலாம்.

▲

5. கெடுவதாம் பொருள் செல்வமே பல்வகைக்
கிலேசம்மற்று அது தன்னை
விடுவதே சுகம் எனவும் ஓர்ந்திலை முனம் விடுத்து
உளோர்க்கு உனைப்போலும்
நெடிய யூகமது இல்லையோ சொல்லுதி
நெஞ்சமே இனிப்பற்றற்று
அடைது மேல் அரன் அருளையே
பொருள்என அருஞ்செல்வமது தானே.

இதன் பதப்பொருள்

கெடுவதாம் பொருள் செல்வமே - பொருட்செல்வம் அழிந்து போகக்கூடியது. **பல்வகைக் கிலேசம்** - பல்வேறு வகைப்பட்ட

Koviloor Digital Library

துன்பத்தினைக் கொடுக்கக் கூடியது. **அதுதன்னை விடுவதே சுகம் எனவும் ஓர்ந்திலை** - *அந்தப் பொருளினைக் கைவிடுவதே இன்பம் எனவும் அறிந்தாயில்லை,* **முனம் விடுத்துள்ளோர்க்கு உனைப் போலும்** - *முற்காலத்தில் பொருளைக் கைவிட்டுத் துறவு போன பெரியோர்களுக்கு உன்னைப் போன்று,* **நெடிய யூகமது இல்லையோ** - *விரிந்த அறிவு இல்லைபோன்று கருதுகின்றனை மனமே!* **சொல்லுதி நெஞ்சமே இனிபற்றற்று** - *இனிப் பொருள்மேல் வைத்த பற்றுக்கள் நீங்கி,* **மேல் அரன் அருளையே பொருள் என அடைதும்** - *மேலாகிய சிவனது அருளையே பொருளாம் பொருள் என அடைதும் என்று அடைவாயாக,* **அருஞ்செல்வம் அது தானே** - *சிவனது அருளே கிடைப்பதற்கு அரிதான செல்வமதாம்.*

பொழிப்புரை

பொருட் செல்வம் அழிந்து போகக் கூடியது. பல்வகைப்பட்ட துன்பத்தினைக் கொடுக்கக் கூடியது என்று மனதிற்கு விவேகம் கூறிற்று. அதற்கு மனம் பொருள் இன்பத்தினைக் கொடுக்காதா? என்று கேட்க, அந்தப் பொருளைக் கைவிட்டுவிடுவதே இன்பம் என்று அறிந்தாயில்லை என விவேகம் கூறிற்று. முற்காலத்தில் பொருள் துக்கத்தைக் கொடுக்கக் கூடியது என்றறிந்து பொருளை விட்டுவிட்டுத் துறவு போன பெரியோர்களுக்கு உன்னைப் போன்று விரிந்த அறிவு இல்லை எனக் கருதுகின்றனை மனமே! இனிப்பொருள்மேல் வைத்த பற்றுக்கள் நீங்கி மேலாகிய சிவனது அருளையே பொருளாம் என்று அடைவாயாக. சிவனது அருளே அரிதான செல்வமதாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

பொருள்களைச் சம்பாதிப்பது மிகவும் துன்பம். அப்பொருளைத் திருடர்கள் மோசடிக்காரரர்கள் உறவினர் போலி நண்பர்கள் இவர்களிடமிருந்து காப்பதும் பெருந்துன்பம் - அப்பொருட்செல்வம் நம்மை விட்டுப் போனாலும் குறைந்து கொண்டே வந்தாலும் துன்பம். அதனையே "பல்வகைக் கிலேசம்" என்றார். செல்வத்தை விடுவதே சுகம் என்பதற்கு உதாரணம்,

Koviloor Digital Library

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்பது திருக்குறள்.

இறைவனது அருள் கிடைத்தற்கரியது என்பதனை "அருஞ்செல்வம் என்றார். பொருட்செல்வம் கீழ்த்தரமான மக்களிடமும் இருக்கும். அருட்செல்வம் சான்றோரிடம் மட்டும் தான் இருக்கும். உலகத்தார்கள் பொருட்செல்வம் உள்ளவர்களை மேலானவர்கள் என்று நினைக்கின்றனர். வணங்குகின்றனர். அது தவறான கருத்தாம். அதனை

"அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

"அறிவுடையார் எல்லாம் உடையார்" என்பது திருக்குறள். பொருட் செல்வம் உடையார் எல்லாம் உடையார் என்று சொல்லப்படவில்லை.

▲

6. தானை சூழ மண்ணுலகை ஆண்டு அழிபவர்
தங்கள் வாழ்வு இனிது என்றே
நீ நினைத்தியோ நெஞ்சமே எஞ்சுறா நிமல
ஞானமது உற்றால்
வானும் வையமும் வந்து தாள் வணங்கும்
மெய்வாழ்வு காண்டலும் வீண் முற்
போன நாட்கு இரங்கவும் வரும் என நலோர்
புகன்றது ஓர்ந்திலை காணே.

இதன் பதப்பொருள்

தானை சூழ மண்ணுலகை - *தேர்ப்படை, காலாட்படை, யானைப்படை, குதிரைப்படைகளாகிய நால்வகைச் சேனைகள் (படைகள்) சூழ்ந்திருக்க இப்பூமியை,* **ஆண்டு அழிபவர்** - *அரசாட்சி செய்து அந்த வாழ்வோடும் அழிந்து போகின்ற,* **தங்கள் வாழ்வு** - *அவர்களுடைய பொய்யான வாழ்வினை,* **இனிதென்று நீ நினைத்தியோ நெஞ்சமே** - *இனிமையானது என்று நீ கருதிக் கொண்டு இருக்கின்றாய் மனமே!* **எஞ்சுறா நிமல ஞானமது உற்றால்** - *குறைவற்ற*

Koviloor Digital Library

பரிபூரணமாய் பரிசுத்தமாயுள்ள ஆத்மாவைப்பற்றிய ஞானத்தை அடைந்தானேயாகில், **வானும் வையமும்** - வானவர்களாகிய தேவர்களும் உலகத்தார்களாகிய மனிதர்களும், **வந்து தாள் வணங்கும்** - அந்த ஞானியினது திருவடியை வணங்குவார்கள், **மெய்வாழ்வு காண்டலும்** - உண்மையான வாழ்வான ஞானவாழ்வாகிய ஆத்ம ஞானத்தை அடைந்ததும், **முன்வீண் போன நாட்கு இரங்கவும் வரும் என** - ஞானம் அடைவதற்கு முன்னர் அஞ்ஞானத்தோடு இவ்வின்பத்தை விட்டு இருந்தோமே என்று இரக்கமும் வரும். **நலோர் புகன்றது ஓர்ந்திலை காணே** - சான்றோர் சொல்லிய வாக்கியங்களை நீ அறிந்திலை போலும் (நீர் அவர் வாக்கியங்களைப் பார்த்து) அறிவாயாக.

பொழிப்புரை

காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படைகளாகிய நால்வகைப்படைகள் சூழ்ந்திருக்க இப்பூமியை அரசாட்சி செய்து அந்த வாழ்வோடும் நாசமாகின்ற அவர்களுடைய பொய்யான வாழ்வினை இனிமையானது என்று நீ கருதிக்கொண்டிருக்கிறாய் என்று மனதைப் பார்த்து விவேகம் கூறிற்று. அணுஅளவு ஆயினும் குறைவற்ற பரிபூரணமாய்ப் பரிசுத்தமாயுள்ள ஆத்மாவைப் பற்றிய ஞானம் (ஆத்ம ஞானம்) என்ற செல்வத்தை ஒருவன் அடைந்தானேயாகில் வானவர்களாகிய தேவர்களும் உலகத்தார்களாகிய மனிதர்களும் அந்த ஞானியின் திருவடியை வந்து வணங்குவார்கள் என்றும் உண்மையான வாழ்வாகிய ஞான வாழ்வை(ஆத்மஞானத்தை) அடைந்ததும் ஞானம் வருவதற்கு முன்னம் முன் வீணாய்ப்போன காலங்களில் இவ்வின்பத்தை விட்டு இருந்தோமே என இரங்கவும் வரும் எனச் சான்றோர் சொல்லிய வாக்கியங்களை நீ அறிந்தாயில்லை. அதாவது அறியாமல் இருக்கின்றாய் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

வாழ்ந்தால் அரசனைப் போல் வாழ வேண்டும் என்று உலக மக்கள் எண்ணுகின்றனர். அரசனைப் போல் வாழ்ந்தால் எல்லா வேலைகளுக்கும் பணியாட்களும் விரும்பிய

Koviloor Digital Library

போகங்களை அனுபவிக்கலாம் என்றும் எல்லோரும் நம்மை வணங்குவார்கள் என்றும் கருதி அவ்வாழ்வை இனிது என்று எண்ணுகின்றார்கள். தேகம் நாசமடையில் போக போக்கியம் பெருமை எல்லாம் நாசமடையும். உண்மையான செல்வமும் பெருமையும் யாது? என்று மனம் கேட்க, பரிசுத்தமான ஆத்மஞானம் ஒன்றே உண்மையான செல்வமும் பெருமையுமாம். பொருட்செல்வத்தினால் வந்த பெருமை பொருட்செல்வம் இல்லாமல் போய்விடின் அப்பெருமை போய்விடும். பொருட்செல்வம் நிலையற்றது. பொய்யானது. அதனால் வரக்கூடிய பெருமையும், புகழும், மதிப்பும், வணக்கங்களும் பொய்யானதாம். பொருள் இருக்குமாயின் உலகத்தார்கள் பொருளுக்காகவும், காரியத்திற்காகவும் வந்து வணங்குவார்கள். பொருள் இல்லையாகினும் காரியம் ஆகாதாகினும் வணங்கமாட்டார்கள். பரிசுத்த ஆத்ம ஞானச்செல்வமானது இருக்குமாயின் உலகத்தார்கள் மட்டுமல்லாமல் தேவர்களும் வந்து வணங்குவார்கள் என்பது கருத்து.

வாழ்வு என்பது ஆத்மஞானத்தோடு வாழும் வாழ்க்கையே உண்மையான வாழ்வாகும். செல்வம், புகழ், போகம், பதவி, மனைவி, மக்கள் இவைகளோடு வாழ்வது உண்மையான வாழ்வு அல்ல என்பர் மேலோர். ஆத்ம ஞானமானது சாந்தம், மனஅமைதி, மோட்சம் இவைகளைக் கொடுக்கக்கூடியது. முன்சொல்லிய மனைவியாதிகள் பிறவியைக் கொடுக்கக்கூடியது. மனச்சஞ்சலத்தைக் கொடுக்கக் கூடியது. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் இவைகளைக் கொடுக்கக் கூடியது. இவைகள் இருக்குமாயின் மன அமைதியிராது. எனவே மனைவியாதிகளோடு வாழ்வது பொய்யான வாழ்வாம். நிலையற்றது, மனச்சஞ்சலத்தைக் கொடுக்கக்கூடியது. ஞானத்தோடு வாழ்வது உண்மையான வாழ்வு. நிலையானது, ஆனந்தமாயிருப்பது என்பது கருத்தாம்.

▲

Koviloor Digital Library

7. காணியீது எமது இடமிது எனமணைக்
கருதி மண்ணாகு கின்றாய்
நாணிலாய் மட நெஞ்சமே யுடல் இது
நமது இடமல என்றால்
பேணவும் படுமே இதற்கு இடமதாம்
பிருதிவிதனை நாகப்
பூணினான் திருச்சரணமே யுயிர்க்கெலாம்
புகலிடம் அது தேரே.

இதன் பதப்பொருள்

காணியீது எமது இடமிது எனமணை - *இது எமது காணி எனவும் இது எமது வீடு எனவும், எனது மண் என்றும்,* **மண்ணா கருதிகின்றாய்** - *கருதி மண்ணாய் மடிந்து போகின்றாய்.* **நாணிலாய் மடநெஞ்சமே** - *வெட்கமில்லாத பேதைமையுடைய மனமே!* **உடல் இது நமது இடம்அல என்றால்** - *இவ்வுடம்பு ஆத்மாவிற்கு இருப்பிடமாய் இல்லாமல் இருக்கிறது. அங்ஙனம் இருக்க,* **இதற்கு இடமதாம் பிருதிவிதனைப் பேணவும் படுமே** - *மண்ணினை இடம் என்று பிடிக்கவும் பாதுகாக்கவும் தகுமோ (நீ சொல்லுக என்று விவேகம் கூறிற்று).* **நாகப்பூணினான் திருச்சரணமே** - *சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்துள்ள சிவனது திருவடிகளே,* **யுயிர்க்கெலாம் புகலிடம்** - *சீவர்க்கெல்லாம் தஞ்சமாய் அடையும் இடமாதலால் அதுவே நமது இடம் என்று,* **அது தேரே** - *ஆராய்ந்து அறிவாயாக.*

பொழிப்புரை

வெட்கமில்லாத அறிவற்ற மனமே! இது எமது காணி எனவும், இது எமது வீடு எனவும், இது எமது மண் என்றும் கருதி மண்ணாய் மடிந்து போகின்றாய். வாத, பித்த, சிலேத்துமங்களினாலாகிய வியாதிகளுக்கு இடமாயுள்ள இவ்வுடம்பு சடமாய் உள்ளது. சச்சிதானந்த வடிவமாயுள்ள ஆத்மாவாகிய எனக்கு இவ்வுடம்பு இருப்பிடமாய் இல்லாமல் இருக்கின்றது. அங்ஙனம் ஆத்மாவிற்கு இருப்பிடமில்லாத இந்த உடம்பினுக்கு இடமாயுள்ள மண்ணினை இடம் என்று அடையவும் பாதுகாக்கவும் தகுமோ நீ சொல்லு என்று விவேகம் கூறிற்று. பாம்பினை ஆபரணமாக அமைந்துள்ள

Koviloor Digital Library

சிவனது திருவடிகளே சீவர்களுக்கெல்லாம் தஞ்சமாயடையும் இடமாதலால் அதுவே நமது இடம் என்று ஆராய்ந்து அறிவாயாக என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

உலக மக்கள் நிலம், வீடு, இடம் இவைகளை என்னுடையது என்கிறார்கள். உடம்பு ஆத்மாவினது இருப்பிடம் அல்ல. உடம்பினுள்ளும் ஆத்மா இருக்கிறது. உடம்பினுள் உள்ள ஜீவனை மோட்சமடையச் செய்வதற்கு மானிடசரீரம் முக்கியமாம். ஆகவே உடம்பைப் பேணிக் காப்பாற்றி ஞானம் அடைய வேண்டும். பிரம்மம் ஆகாயத்தைப் போன்று எங்கும் வியாபித்து உள்ளது. அங்ஙனம் ஏகமாய் இருக்கும் பிரம்மம் உடம்பினுள்ளும் இருக்கும். உடம்பினுள் வளையப்பட்ட பிரம்மத்தை ஆத்மா என்பர் மேலோர். வளையப்பட்டது (கட்டுப்பட்டது) என்பது உபச்சாரம். பிரம்மமும் ஆத்மாவும் ஒன்றே. சச்சிதானந்த வடிவ ஆத்மா எங்கும் நீக்கமற நிறைந்திருந்தாலும் ஆறறிவுள்ள மானிட தேகத்தில் மட்டுமே நன்கு விளங்கும் யோக்கியதை உடையது. சூரியனது பிரகாசம் எங்கும் இருந்தாலும் கண்ணாடி, நீர் இவைகளில் மட்டுமே பிரதி பிம்பிக்கும். அதைப்போல் பிரம்மம் எங்கும் இருந்தாலும் சித்து ஆனந்தத்தன்மை அந்தக்கரணத்தில் (மனம்) மட்டுமே பிரதிபிம்பிக்கவும், பிரகாசிக்கவும் செய்யும்.

பஞ்ச பூதங்கள், சரீரம் இவைகள் அனைத்திற்கும் ஆதாரமாயுள்ளது பிரம்மம். பிரம்மத்தினிடத்தில் இவைகள் உள்ளன. இடம், சரீரம் இவைகளை இருப்பிடமாகக் கொண்டு பிரம்மம் இல்லை. பிரம்மத்தினிடத்தில் ஜகம், சீவர்கள், ஈசுவரன் இவைகள் மாயத்தோற்றமாகத் தோன்றிக் கொண்டிருக்கின்றன. மனம் இருந்தால் உலகம் உண்டு. மனம் இல்லை எனின் உலகம் இல்லை. தூக்கத்தில் மனம் இல்லை. உலகமும் இல்லை. தூக்கத்தில் மனம் ஆத்மாவினிடத்தில் போய் ஒடுங்குகிறது. விழிப்பு நிலையில் வெளியில் வந்து நனவு அவஸ்தையை அடைகின்றது. தினந்தோறும் மனம் அதனது இருப்பிடமாகிய ஆத்மாவினிடம் போய்ப்போய் வருகின்றது. ஆதலால் சுமுத்தியில் ஆத்மாவினது ஆனந்தத்தினை ஒடுங்கிய மனத்துடன் சேர்ந்த ஜீவன்

Koviloor Digital Library

ஆனந்தத்தை அனுபவிக்கின்றது. விழிப்பு நிலைக்கு வந்த பின்பு "நான் சுகமாய்த் தூங்கினேன்" என்று மனம் வாக்கிந்திரியம் மூலமாகச் சொல்லுகின்றது.

ஆதலால் மண், சரீரம், மனம், சீவர்கள், ஜகத்து, ஈசுவரன் அனைத்திற்கும் புகலிடம் பிரம்மமேயாம்.

▲

8. தேர்கிலாய் இவண்புகழ் விழைந்தனை
இனிஇத்தேகம் வேறு அடைந்தாயேல்
சாருமோ அதில் இதில் புகழ் அலது
நீ தான் உணர்ந்திடுவாயோ
பேர்யாது யாம் ஆர்கொல் முற்பவத்து
இகழ்பெறினும் இத்துணை நெஞ்சே
ஓரின் நேரில் வீடுறுதலே புகழ் இகழ் உறல்
பிறப்பென உன்னே.

இதன் பதப்பொருள்

நெஞ்சே தேர்கிலாய் இவண் புகழ் - *மனமே! இவ்விடத்து புகழினது உண்மையை, நீ நன்றாக விசாரித்து அறிந்தாயில்லை.*

விழைந்தனை - *புகழை விரும்புகின்றனை,* **இனிதேகம் வேறு அடைந்தாயேல்** - *இச்சரீரத்தை விடுத்து அடுத்த பிறவியில் வேறு ஒரு சரீரம் அடைந்த பிறகு,* **சாருமோ அதில்** - *இச்சரீரத்தோடு வாழ்ந்த புகழ் அடுத்த சரீரத்திற்கு வந்து பொருந்துமா! பொருந்தாது,* **இதில் புகழ் அலது** - *இச்சரீரத்தோடு இருக்கின்ற புகழினை நீ அறிவதே அல்லாமல்,* **நீ தான் உணர்ந்திடுவாயோ** - *அடுத்த பிறவி அடைந்த பிறகு இந்தப் பிறவியில் இருந்த புகழினை அறியக்கூடுமோ! அறிய முடியாது.* **முற்பவத்து பேர் யாது யாம் ஆர்** - *முற்பிறவியில் உனக்கு என்ன பெயர்? நாம் யார்?* **இகழ் பெறினும்** - *மேலும் (உனக்கு) வெறுப்பாகிய இகழ்ச்சியை (நீ) அடைந்தால் அதுவும் புகழ்ச்சியைப் போல,* **இத்துணை** - *(உனக்கு) கூடவே இருக்கும் என்று விவேகம் கூறிற்று.* **ஓரில்** - *உண்மையாக விசாரித்துப் பார்க்குமிடத்து,* **நேரில் வீடுறுதலே புகழ்** - *ஒப்பற்ற வீட்டினை அடைதலே புகழ்*

Koviloor Digital Library

என்றும், **பிறப்பு உறல் இகழ் என** - தொடர்ந்து பிறவியை எடுத்துக் கொண்டிருப்பது இகழ் என்றும், **உன்னே** - நீ அறிவாயாக என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

மனமே! இங்கு வாழும் காலத்து, புகழினது உண்மையை நீ நன்றாய் விசாரித்து அறிந்தாயில்லை. இவ்விடத்துப் புகழை விரும்புகின்றாய். இத்தேகத்தைவிட்டு அடுத்த பிறவியில் வேறொரு தேகம் அடைந்த பிறகு இத்தேகத்தோடு வாழ்ந்த புகழ் அடுத்த தேகத்திற்கு வந்து சேருமோ? சேராது. இவ்வுடம்போடு இருக்கின்ற புகழினை நீ அறிவதே அல்லாமல் அடுத்த பிறவி அடைந்த பின்பு இந்தப் பிறவியில் இருந்த புகழினை அறியக் கூடுமோ? அறிய முடியாது. அறிய முடியும் என்றால் முற்பிறவியில் இருந்த புகழினை இப்பிறவியில் அறிய வேண்டும். முன் பிறவியில் பெயர் யாது? நாம் யார்? சொல். அறியமுடியவில்லை. உனக்கு வெறுப்பைக் கொடுக்கக் கூடியதும், வெட்கப்படவைப்பதுமாகிய இகழ்ச்சியை அடைந்தால் அதுவும் புகழ்ச்சியைப் போல உன்னைவிட்டு நீங்காமல் தொடர்ந்து கூடவே வரும் என்று விவேகம் கூறிற்று. உண்மையாக விசாரித்துப் பார்க்குமிடத்து ஒப்பற்ற வீட்டினை அடைதலே புகழ் என்றும், தொடர்ந்து பிறவியை எடுத்துக் கொண்டிருப்பது இகழ் என்றும் நீ அறிவாயாக என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

புகழையடைய வேண்டும் என்று ஆசைப்படுகிறாய். இப்பிறவியில் புகழோடு இருந்தாலும் மறுபிறவிக்கு அப்புகழ் வராது. இப்பிறவியில் வாழும்போது முற்பிறவியில் நமது புகழை நாம் அறிய வேண்டும் அல்லது பிறர் நமது முற்பிறவியினது புகழை நமக்குக் கூற வேண்டும். இரண்டுமே முடியாத காரியம்; அங்ஙனம் இருக்க, புகழை விரும்புவது மூடத்தனம். எங்கெல்லாம் புகழ் வருகின்றதோ அங்கெல்லாம் இகழ்ச்சியும் கூடவே வரும். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பிறவி தோறும் தொடர்ந்து வருவதில்லை. புகழ் நீடித்திருப்பதில்லை. எந்தெந்தப் பொருளினால்,

Koviloor Digital Library

பதவியினால், காரியத்தினால் புகழ் உண்டாகின்றதோ அந்தந்தப் பொருள் இல்லாமல் போகும் போது புகழும் போய்விடும். உண்மையான புகழ் ஆத்மஞானமும் அதனால் அடையக் கூடிய ஆனந்தமும் மோட்சமுமாம். இகழ்ச்சி யாதெனின் அஞ்ஞானத்தோடு இருப்பதும் பிறவி எடுத்துக் கொண்டே இருப்பதும் துன்பமடைந்து கொண்டே இருப்பதுவுமாம். ஞானிகள், சித்தர்கள், யோகிகள் இவர்கள் ஐக்கியமான(மகாசமாதி) பிறகும் தொடர்ந்து வணங்கி வருகின்றனர். குருபூஜை செய்தும் அவர்களது சமாதிக்குத் தினமும் பூசை செய்தும் வழிபடுகின்றனர். அவர்களது குருபரம்பரையான ஞான உபதேசங்களும் அவர்கள் அருளிச்சென்ற ஞான சாஸ்திரங்களும் அவர்களது பெருமையை உணர்த்துகின்றன.

ஞானிகள் வாழும் போதும், மகாசமாதியான பின்பும் உலக மக்கள் வணங்குகின்றனர். பணம், பதவியில் உள்ளவர்களை உலகத்தார்கள் காரிய நிமித்தமாக மதிப்பார்கள். பணம், பதவி நீங்கின பின்பும், இறந்த பின்பும் யாரும் அவரைப் புகழுவதுமில்லை. அவருடன் சேர்வதுமில்லை. இக்கருத்தினையே "வீடுறுதலே புகழ்" என்றார் ஆசிரியர்.

மண், பொருள், பதவி உள்ளவர்களை உலகத்தோர்கள் வணங்குவதுமில்லை. காரிய நிமித்தமாகப் புகழுவார்கள். மண், பொருள், பதவி நீங்கி விட்டால் அவர்களைப் புகழவுமாட்டார்கள்; இகழவும் செய்வார்கள். மண் பொன் பதவி இதனையடைந்தவர் பிறவி எடுத்துக்கொண்டே இருப்பார்கள். அவர்களையே "இகழ்உறல் பிறப்பு என உன்னே" என்றார்.

வீட்டினை அடைந்தோரும் நித்தியம். ஒன்றையும் விரும்பாது அவ்வீட்டினையே விரும்பி அடைந்த அவரது புகழும் நித்தியம். பிறப்பு, இறப்பு அடைவோர் அநித்தியம். அவரது புகழும் அநித்தியம்.

▲

Koviloor Digital Library

9. உன்னுகின்றனை உனை மனோர் பெரியன்
என்று உணருமா செய உன்பால்
மன்னும் ஈசனே பந்தம் வீடளிப்பவன்
மற்றையர் அறிந்து என்னாம்
அன்னவன் திருப்பொன்னடி கரியதா
அருந்தவம் செய் நெஞ்சே
பின்னை முன்னவன் உலகறிந்து இறைஞ்சுமா
பெருமை செய்குவன் ஓரே.

இதன் பதப்பொருள்

உனை மனோர் - *மனமே ! உன்னை இவ்வுலகத்தார்,* **பெரியன் என்று உணருமா செய** - *தவத்தால் பெரியவன் என்று அறியும்படி செய்ய,* **உன்னுகின்றனை** - *கருதுகின்றாய்,* **உன்பால் மன்னும்** - *உன்னிடத்து விட்டு நீங்காது இருக்கின்ற,* **ஈசனே** - *பரமசிவனே,* **பந்தம் வீடு அளிப்பவன்** - *நீ பற்றுக்களுடன் செய்த கர்மாவின் பயனாக பந்தத்தையும் நிஷ்காமமாகச் செய்த தவத்தின் பயனாக மோட்சத்தையும் தருபவன்,* **மற்றையர் அறிந்து என்னா** - *சிவனை அல்லாமல் பிற சீவர்கள் சாட்சியாக நீ செய்யும் தவத்தால் என்ன பயன் உண்டு?* **அன்னவன் திருப்பொன்னடி கரியதா** - *சிவனது திருவடி சாட்சியாக,* **அருந்தவம் செய் நெஞ்சே** - *அரிய தவத்தினை நெஞ்சமே நீ செய்வாயாக,*

பின்னை முன்னவன் - *அரிய தவத்தினைச் செய்த பின்னர் எல்லோருக்கும் முதல்வனாகிய சிவன்,* **உலகறிந்து** - *இவ்வுலகத்தில் உள்ளோர் யாவரும் உன்னைப் பெரியவன் என்று அறிந்து,* **இறைஞ்சுமா(று)** - *வணங்கும்படி,* **பெருமை செய்குவன்** - *பெருமையைச் செய்வான் என்று,* **ஓரே** - *ஆராய்ந்து அறிவாயாக.*

பொழிப்புரை

மனமே! உன்னை உலக மக்கள் தவத்தால் பெரியவன் என்று அறியும் படி செய்யக் கருதுகின்றாய். உன்னிடத்து அந்தர்யாமியாக நீங்காமல் இருந்து கொண்டிருக்கின்ற பரமசிவனே நீ பற்றுகளுடன் செய்த கர்மாவின் பயனாகச் சம்சார பந்தத்தையும், நிஷ்காமமாகச் செய்த தவத்தின் பயனாக ஞானத்தையடையச் செய்து மோட்சத்தையும்

Koviloor Digital Library

தருபவன். சிவனை அல்லாமல் மற்ற சீவர்கள் உன்னைப் பெரியவன் என்று அறியும்படி அவர்கள் சாட்சியாக நீ செய்யும் தவத்தால் யாது பயன் உண்டு? ஒரு பயனும் இல்லை. மனிதர்களாகிய சீவர்கள் நமது தவத்தை அறிந்து கொள்ளட்டும் என்று அச்சீவர்களது சாட்சியே குறியாக எண்ணாமல் அந்தர்யாமியாக உன்னிடத்து இருக்கின்ற சிவனது திருவடி சாட்சியாகக் கடினமான தவத்தினை நெஞ்சமே நீ செய்வாயாக என்று விவேகம் கூறிற்று. அரிய தவத்தினை நீ செய்தாயாகில் எல்லோருக்கும் முதல்வனாகிய சிவன் இவ்வுலகத்தில் உள்ளோர் யாவரும் உன்னைப் பெரியவன் என்று அறிந்து வணங்கும்படி பெருமையைச் செய்வான் என்று ஆராய்ந்து அறிவாயாக என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

நான் செல்வத்தில் பெரியவன். நான் தவத்தில் பெரியவன்; நான் அழகில் சிறந்தவன், நான் அறிவாளி, நான் வலிமையில் பெரியவன், நான் பதவியில் பெரியவன் நான் போக போக்கியங்களை அனுபவிப்பதில் பெரியவன் என்று உலக மக்கள் கருதிக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறு நினைத்துக் கொண்டு இருப்பதினால் யாது பிரயோஜனம்? ஒன்றும் இல்லை. ஏனெனில் மேலே சொல்லப்பட்ட செல்வம் முதலியன இருந்தால் உலக மக்கள் பெரியவன் என்பர். எவை எவை இல்லாமல் போகின்றதோ அவைகளினால் உண்டான பெரியவன் என்ற பெருமையும் நீங்கி விடும்.

உலகத்தார் தெரிந்து கொள்ளும்பொருட்டுச் செய்யும் காரியங்கள் உயர்ந்த நிலையைக் கொடுக்கும் என மனம் நினைக்கிறது. உண்மை யாதெனின் அந்தர்யாமியாயிருக்கின்ற சிவனது சாட்சியாகக் கடினமான தவத்தை நிஷ்காமமாகச் செய்யின் மனப்பக்குவத்தையடையச் செய்து விசாரணை அந்தக்கரணத்தில் உதித்து அதன்பின் ஞான சற்குருவையடையச் செய்து ஞான உபதேசம் பெற்று மோட்சத்தையும் பகவான் அடையச்செய்வார். சிவனது சாட்சியாகத் தவத்தைச் செய்யாமல் பாவ, புண்ணிய கர்மத்தைச் செய்யின் பந்தத்தைக் கொடுப்பார்.

Koviloor Digital Library

நீ ஞான நிலை அடைந்தாயாயில் உலகத்தார்கள் வந்து வணங்குவார்கள். அதுவும் சிவனது கிருபையினால் உண்டாம். உலக மக்களது சாட்சியாகச் செய்யக்கூடிய காரியங்களினால் வருகின்ற பெருமையானது நிலைத்திராது. சிவனது திருவடி சாட்சியாகச் செய்யும் தவமானது மோட்சத்தையும் பெருமையையும் கொடுக்கக்கூடியது. உலகத்தார்கள் போற்றக் கூடியது, வணங்கக்கூடியது, நிலையானது.

▲

10. ஓரின் உள்ளமே பாரில் மானுடர்
 முதல் உள அறு பிறப்பூடும்
 சேரும் இன்பம் ஒன்றில்லை என்பது
 பிரத்தியக்கமா நீ வல்லாய்
 போர்களாதி துன்பு இமையவர் அடைவதும்
 புகல நூல் உணர்ந்தாயே
 நேரிலா அரன் கழல் அலான் மிகு
 சுகநிலை பிறிதி லையன்றே.

இதன் பதப்பொருள்

ஓரின் உள்ளமே - *மனமே! உண்மையாக விசாரிக்குமிடத்து,* **பாரில்** - *இப்பூமியின் கண்,* **மானுடர் முதல் உள** - *மக்கள் முதல் தாவரம் வரை உள்ள,* **அறு பிறப்பு ஊடும்** - *ஆறுவகையான பிறப்புகள் அனைத்தும்,* **சேரும் இன்பம்** - *அனுபவிக்கின்ற இன்பம்,* **ஒன்றிலை என்பது** - *ஓர் அணுவளவாயினும் இல்லை என்பதை,* **பிரத்தியக்கமா நீ வல்லாய்** - *பிரத்தியட்சப் பிரமாணத்தினால் நீயே அறியக்கடவாய்,* **போர்களாதி துன்பு** - *எதிரிகளிடத்து யுத்தம் செய்தல் பயம் முதலிய துன்பம்,* **இமையவர் அடைவது** - *தேவர்கள் பொருந்துவதும்,* **புகல நூல் உணர்ந்தாயே** - *வேதம் ஆகமங்கள் ஆகிய சாஸ்திரங்கள் கூற அறிந்தனை,* **நேர் இலா** - *எவ்வகையிலும் உவமை(நிகர்) சொல்ல முடியாத,* **அரன் கழல் அலான்** - *சிவனது திருவடியே அல்லாமல்,* **மிகு சுக நிலை** - *மிகுந்த பேரின்ப நிலை,* **பிறிது இலை அன்றே** - *வேறு இல்லை என்று விவேகம் கூறிற்று.*

Koviloor Digital Library

பொழிப்புரை

நெஞ்சமே, உண்மையாக விசாரிக்குமிடத்து இப்பூமியின் கண் மக்கள் முதல் தாவரம் வரை உள்ள ஆறுவகையான பிறப்புகள் அனைத்தும் அனுபவிக்கின்ற இன்பம் ஓர் அணு அளவு ஆயினும் இல்லை என்பதை பிரத்தியட்சப் பிரமாணத்தில் நீயே அறிந்து கொள்வாய். எதிரிகளிடத்து யுத்தம் செய்வதும் பயம் உண்டாவதும் முதலிய துன்பங்கள் தேவர்களிடத்து இருப்பதுவும் அதை சப்த பிரமாணம் என்று கூறுகின்ற வேதம் ஆகமங்களால் அறிகின்றாய். எவ்வகையிலும் தனக்கு உவமையில்லாத சிவனது திருவடியே அல்லாமல் மிகுந்த பேரின்ப நிலை வேறு இல்லை என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

தாவரம் முதல் மனிதர்கள் வரை உள்ள ஆறு பிறப்புக்களில் சுகமே இல்லை. துன்பம் உண்டு என்பதைப் பிரத்தியட்சமாக அறிந்து கொள்ளலாம். பிறப்பு, இறப்பு, அஞ்ஞானம், நோய், பசி, கவலை, தாகம், காமம், குரோதம், மூப்பு, அபிமானம் முதலிய அளவற்ற துன்பங்களை மனிதர்கள் அடைகின்றனர். இவர்களுக்கிடையில் சிறுசிறு இன்பங்களை அனுபவிக்கின்றனர். அதுவே சிற்றின்பம். அது அனுபவிக்கும் போது மட்டுமே இன்பத்தைத் தரும். அதை இன்பம் என்று சொல்ல முடியாது.

உதாரணம் :ஒரு வஸ்திரம் முழுவதும் அழுக்கு. ஒரே ஒரு இடத்தில் மட்டும் சுத்தமாய் உள்ளது. அந்த வஸ்திரத்தைச் சுத்தமான வஸ்திரம் என்றா சொல்வோம்? அழுக்கு வஸ்திரம் என்று தானே சொல்வோம். அதுபோல நிறையத் துன்பங்களுக்கு மத்தியில் அனுபவிக்கும் சுகத்தைச் சுகம் அல்ல என்று அறிவாளிகள் சொல்வர். அதனையே இங்கு “சேரும் இன்பம் ஒன்று இலை” என்றார். ஆறறிவு உடைய மனிதப்பிறவியே இங்ஙனம் இருக்க, மற்ற ஓரறிவு முதல் ஐந்தறிவு உடைய பிராணிகளிடத்து இன்பம் இல்லை என்றே கூறலாம். தேவர்களுக்கு அசுரர் பகையுளது. மகிழ்ச்சி, வாட்டம் உளது. அசுரர் பயம் உளது. தேவர்கள் புண்ணியம் தீர்ந்தவுடன் திரும்பவும் பூமியில் வந்து பிறக்க வேண்டும்

Koviloor Digital Library

என்ற நிலையும் உள்ளது. இந்த விஷயத்தினை நாம் ஆகமம் என்று சொல்லப்படுகின்ற சப்த பிரமாணத்தினால் அறிகின்றோம். பிரமாணம் என்றால் ஒரு விஷயத்தினை அறிவதற்குக் கருவியாய் இருப்பது பிரமாணம். 8 - 1. பிரத்தியட்சம் 2. அனுமானம் 3. உவமானம் 4. சப்தம் 5. அருத்தாபத்தி 6. அநுபலப்தி 7. ஐதிகம் 8. சம்பவம்

பிரத்தியட்ச பிரமாணம் என்பது காது, உடம்பு, கண், வாய், மூக்கு என்று சொல்லப்படுகின்ற ஞானேந்திரிய வாயிலாக அந்தக்கரணம் அறியும் விஷயங்களாம். அவை சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் முதலியனவாம்.

சப்தப்பிரமாணம் என்பது வேதம், ஆகமம் சாஸ்திரம் இவைகளாம். இவைகளால் அறிந்து கொண்டது சப்தப் பிரமாணத்தால் அறிந்ததாம்.

"சிவனது திருவடி" என்பது பிரஹ்ம ஞான நிலையாம். பிரஹ்ம ஞான நிஷ்டையில் இருப்பது பேரின்ப நிலையாம். தன்னை யறிந்த நிலையே அது. அதுவே பிறவா நிலையாகிய மோட்சமாகும். மோட்சமாகிய சர்வ துக்க நிவர்த்தி பரமானந்த பிராப்தியை அடைய, பிரஹ்ம ஞானம் அடைய வேண்டும்.

தாவரம் முதல் தேவர்கள் வரையுள்ள ஏழு பிறவிகளும் ஜீவர்களுக்குப் பாவ புண்ணியத்தைப் பொறுத்து மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். ஏழு வகைப் பிறவிகளும் துக்கமயமானது. சிவனது திருவடி (ஆத்ம ஞானம்) அடைதலே மேலான சுகமாம். ஜீவத் தன்மை நீங்கித் தூல சரீரத்தோடு இருப்பது ஜீவன் முத்தி என்றும், தூல சரீரம் இறந்த பின்பு அடைவது விதேக முத்தி என்றும் சொல்லப்படும். இதுவே பிறவா நிலையாம்.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்பது திருக்குறள்.

▲

Koviloor Digital Library

11. அன்று எனக்கு நீ ஒரு துணை பிறப்பு இறப்பு
அதில் துயரமும் கேடும்
தின்றல் ஒன்றலால் வியாதி ஆதிகளினால்
செறிதுயரமும் ஓர்ந்து ஓர்ந்து
என்றும் ஏழ்பவக்கு அஞ்சிலை நெஞ்சமே
இன்ப வீடு எது வென்றே
நின்று நின்று அழுதிலை தொழுதிலை
சிவநேசர் தாள் பூசித்தே.

இதன் பதப்பொருள்

நெஞ்சமே எனக்கு நீ ஒரு துணை அன்று - *மனமே! நீ எனக்கு உறுதுணையாக இல்லை என்றும்,* **பிறப்பு இறப்பு அதில்** - *ஜனனமும் மரணமுமாகிய பிறவிக்கடலில்,* **துயரமும் கேடும்** - *துன்பமும் அழிவும் உண்டு,* **தின்றல் ஒன்றலால்** - *உண்ணுதல், பொருந்துதல் (புணர்தல்),* **வியாதி ஆதிகளினால்** - *போக போக்கியத்தினால் நோயும் மனத்தின் கண் தாபமுமாகிய,* **செறி துயரமும்** - *நெருங்கிய துன்பங்கள் பல உண்டு என்று,* **ஓர்ந்து ஓர்ந்து** - *மென் மேலும் ஆராய்ந்து,* **என்றும் ஏழ்பவக்கு** - *எக்காலமும் ஏழுவகைப் பிறவிக்கு,* **அஞ் சிலை** - *நீ பயந்தாயில்லை,* **இன்ப வீடு எது என்றே** - *பேரின்ப நிலை என்று சொல்லப்படுகின்ற மோட்சம் யாது? என்று தெரிந்து கொள்ளும் பொருட்டு,* **சிவநேசர் தாள் பூசித்து** - *சிவனடியார்களது திருவடிகளைப் பூஜை செய்தும்,* **நின்று நின்று அழுதில்லை தொழுதிலை** - *அவர்களது சந்நிதானத்தில் இருந்து கொண்டு அழாமலும், பணிவிடைகளைச் செய்யாமலும், ஒன்றும் கேளாமலும் இருக்கின்றாய் மனமே என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

மனமே! நீ (விவேகமாகிய) எனக்கு உறுதுணையாக இருக்கின்றாய் இல்லை என்றும், ஜனன மரணமாகிய பிறவிக்கடலில் துன்பமும், அழிவும் உண்டு என்றும், உண்ணுதல் பொருந்துதலாகிய போக போக்கியத்தால் உடலில் நோயும், மனதின் கண் தாபமுமாய் நெருங்கியுள்ள துன்பங்கள் பல உண்டு என்று மென்மேலும் ஆராய்ந்து எக்காலமும் ஏழு வகைப் பிறவிக்கு நீ பயந்தாயில்லை என்று

Koviloor Digital Library

விவேகம் கூறிற்று. மேலும் அத்துன்பங்களை நீக்கக் கூடியதும் பேரின்ப நிலை என்று சொல்லப்படுகின்ற மோட்சம் யாது? என்று தெரிந்து கொண்டு மோட்சத்தையடையும் பொருட்டுச் சிவனடியார் (ஞானி) களது திருவடி பூஜை செய்தும், ஞானிகளைச் சந்நிதானத்தில் (முன்பு) இருந்து கொண்டு அழுது புலம்பாமலும் பணிவிடைகளைச் செய்யாமலும் நான் யார்? மோட்சம் என்பது யாது? பிறவி வந்தது எங்ஙனம்? என்று கேட்காமலும் இருக்கின்றனை மனமே! என விவேகம் கூறிற்று.

விளக்கம்

தீய பழக்க வழக்கங்கள் உள்ளவர்களிடம் நாம் எவ்வளவு தான் அறிவுரை எடுத்துக் கூறினும் நம்மிடம் இருக்கும்போது கேட்டுக்கொண்டே இருப்பர். நம்மை விட்டுச் சென்றவுடன் அந்தத் தீய பழக்க வழக்கத்தை விடமாட்டார்கள். அது போன்று மனதுக்கு எவ்வளவு அறிவுரை விவேகம் எடுத்துக்கூறினாலும் மனம் அது நினைப்பதையே நினைக்கின்றது. அதனையே இங்கு "ஒரு துணை அன்று" என்றார்.

பிறப்பதற்குள் ஐந்து வகைத் துன்பம் அனுபவிக்கின்றோம்.

1. கருப்பாயசப்பை உறுத்துதல் 2. அதில் சலம் பூரித்தல் 3. உதாரக்கினியில் வேவுதல் 4. பிரசூத வாயு முறித்துத் தள்ளுதல் 5. பிறக்கும் போது யோனித் துவாரத்தில் நெருக்குண்டல், பிறக்கும் போது உண்டாகும் துன்பத்தை விட எட்டு மடங்கு இறக்கும் போது துன்பம் உண்டாகிறது. அதனையே ஆசிரியர் "பிறப்பு இறப்பு அதில் துயரம்" என்றார்.

அதிகமாக உண்ணுதல் பொருந்துதலாகிய போக போக்கியத்தால் துன்பமேயாம். அதிகமாக உண்ணுதல் காரணமாக உண்டாகும் அஜீரணத்தால் நோயும் கூடா ஒழுக்கத்தால் உண்டாகக்கூடிய நோயும் உண்டாகின்றன. அருந்துதல் பொருந்துதலாகிய போகத்திற்குப் பொருள் தேடுதல் துன்பம். நரை, திரை, மூப்புக்களினாலும் துன்பம். காமக்குரோதாதிகளினாலும் துன்பம். அதனையே இங்கு "ஆதி வியாதி" என்றார்.

Koviloor Digital Library

இதனை நன்கு ஆராய்ந்து விசாரித்துப் பார்க்க வேண்டும் என்பதை "ஓர்ந்து ஓர்ந்து" என்றார். பிறவி, துன்பம், வீடு இன்பமாம். அதனையே "இன்ப வீடு" என்றார்.

எப்படிக் குழந்தையானது தாயிடம் மீண்டும் மீண்டும் அழுது தனக்கு வேண்டிய பொருளை அடைகின்றதோ அப்படி ஞான குருவிடம் அழுது வணங்கிப் பணிவிடைகளைச் செய்து ஞானத்தை அடைய வேண்டும் என்பதனை "அழுதிலை தொழுதிலை" என்றார்.

▲

12. பூசை செய்து தோத்திரம் சொலித்தனை நினை
புண்ணியர் பால் நண்ணற்கு
ஆசை செய்திடும் அம்பலக் கூத்தனை
அடைகிலை அடைந்தாரில்
பேசுகின்றனை அறவரின் விளங்கினை
பிறர்மனை நயக்கின்றாய்
சீசி இங்கிருந்து என் செய்தாய் நெஞ்சமே
செத்திலாய் கெடுவாயே.

இதன் பதப்பொருள்

தனை பூசை செய்து - *தனது திருவடியைப் பழம் பத்திரம் புஷ்பத்தால் அர்ச்சனை செய்தும்,* **தோத்திரம் சொலி** - *வாக்கால் தனது திருநாமத்தையும்,* **புகழையும் தோத்திரம் சொல்லியும் நினை** - *தனது உருவத்தையும், நாமத்தையும் நினைத்தும்,* **புண்ணியர் பால்** - *வழிபடும் பக்தியையுடைய புண்ணிய அடியாரிடத்து,* **நண்ணற்கு** - *எழுந்தருளுவதற்கு,* **ஆசை செய்திடும் அம்பலக்கூத்தனை** - *திருஉளத்து இச்சிக்கின்ற கனகசபைக்கண் நடனம் புரிவோனை,* **அடைகிலை** - *மனம், மொழி, மெய்களால் வணங்கி அடைந்தாயில்லை,* **அடைந்தாரில் பேசுகின்றனை** - *அவனது திருவடியை அடைந்த சிவனடியார்கள் போன்று வெறும் வார்த்தை மாத்திரம் சொல்லுகின்றாய்.* **அறவரின் விளங்கினை** - *உள்ளத்தில் கபடத்தோடு இருந்து கொண்டு புறத்தில், துறவி போன்று வேடதாரியாக விளங்குகின்றாய்.* **பிறர்மனை நயக்கின்றாய்** - *தனக்குரிய மனைவியை விட்டுவிட்டுப் பிறர்க்குரிய*

Koviloor Digital Library

மனைவியை ஆசை கொள்கின்றாய். **சீசி இங்கிருந்தென் செய்தாய் மனமே** - *சீசி இவ்விடத்து இருந்து கொண்டு என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்? மனமே!* **செத்திலாய் கெடுவாயே** - *(நீ) சாவாய். கெட்டுப் போவாய் என்று விவேகம் கூறிற்று. (அறவர் - பெரியோர்; முனிவர்)*

பொழிப்புரை

தனது திருவடியைப் பழம், பத்திரம் (இலை), புஷ்பம்(மலர்) இவைகளால் அர்ச்சனை செய்தும் வாக்கால் தனது நாமத்தையும் புகழையும் தோத்திரம் சொல்லியும் தனது நாமத்தையும் உருவத்தையும் மனதால் நினைத்தும் வழிபடும் பக்தியை உடைய புண்ணிய அடியாரிடத்து எழுந்தருளுவதற்குத் திருஉள்ளத்து இச்சிக்கின்ற கனகசபைக்கண் (சிதம்பரம்) நடனம் புரிவோனை (நடராஜரை) மனம், மொழி, மெய்களால் வணங்கி அடைந்தாயில்லை. அவனது திருவடியை அடைந்த சிவனடியார்கள்(ஞானிகள்) போன்று வார்த்தை மாத்திரம் சொல்லுகின்றாய். உள்ளத்தில் கபடத்தோடு இருந்து கொண்டு புறத்தில் துறவி போன்று வேடதாரியாக விளங்குகின்றாய். தனக்குரிய மனைவியை விட்டுவிட்டுத் தவம் செய்யப்போகின்றேன் என்று ஆரம்பித்துப் பிறர்க்குரிய மனைவியை ஆசை கொள்கின்றாய். சீசி முன்னிருந்த இல்லறமும் இல்லாமல் பின்னர் அடைந்த சுத்தத் துறவறமும் இன்றி இவற்றின் நடுவே கூடா ஒழுக்கம்(ஒழுக்கமின்மை) ஆகிய வேடதாரியாக இவ்விடத்து இருந்து கொண்டு என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய். மனமே! இங்ஙனம் கூடா ஒழுக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தால் பாவத்தையடையச் செய்து பிறவித் துன்பத்தில் என்னை ஆளாக்கி விடுவாய். எனவே மனமே, நீ சாவாய். கெட்டுப் போவாய் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

இறைவனை மனதாலும் வாக்காலும் காயத்தாலும் வணங்குதல் வேண்டும். இறைவனது உருவத்தை அல்லது நாமத்தை மனதின்கண் வைத்து ஒருமைப்பாட்டோடு தியானித்தல் மன வழிபாடாகும். இறைவனது ஈசுர

Koviloor Digital Library

தன்மை(தலைவன்), வைராக்கியம் செல்வம், ஞானம், புகழ், சக்தி இவைகளைப்பற்றி வாக்கால் துதித்தல் வாக்கின் வழிபாடாம். இறைவனைப் பழம், புஷ்பம், பத்திரம் (இலை) இவைகளால் பூஜை செய்தல் காயத்தினால் செய்யும் வழிபாடாகும். காயத்தினால் செய்வதிலும் வாக்கால் செய்யும் பக்தி(தவம்) மேலானது. வாக்கால் செய்வதிலும் மனதால் செய்யும் பக்தி மேலானது. இறைவனை நிஷ்காமியமாக (பலனை எதிர்பாராமல்) வழிபடுதலால் இறைவனது அருளும் அவனது அருளால் ஞானசற்குருவும் கிட்டும். இறைவனது அருளால் அதிருஷ்ட பலன் மட்டும் உண்டு.

அதிருஷ்ட பலன் என்றால் இந்திரியங்களுக்கு விஷயமாகாத பலன். அதாவது புண்ணியம் உண்டாம். ஞான சற்குருவை மனம், வாக்கு, காயத்தால் வழிபட்டால் திருஷ்டம், அதிருஷ்டம் ஆகிய இரண்டு பலன்களும் உண்டு. ஞான குருவினால் உபதேசிக்கப்பட்ட ஞானோபதேசத்தினால் உண்டாகின்ற ஆத்ம ஞானம் திருஷ்ட பலமாம். இறைவனைத் திரிகரணத்தினால் (மனம், வாக்கு, காயம்) வழிபட்டு அவனது அருளைப் பெறாமல் இருக்கின்றாய் என்பதனை "அடைகிலை" என்றார்.

இறைவனது அனுக்கிரகத்தையும், ஞான சற்குருவின் ஞான உபதேசத்தையும் அடைந்தவர் அறவர் (பெரியோர்). அவர்களைப் போல இல்லாமல் அவர்களைப் போன்று வெறும் வேடம் மாத்திரம் அணிந்து வாழ்கின்றவரையும்,

"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று "

என்னும் குறளுக்கு ஏற்ப வாழ்பவரையும் "அறவரின் விளங்கினை" என்றார். இல்லறத்தில் தருமப்படியும் ஒழுக்க சீலராக வாழ்ந்தாலே போதும். துறவறம் போனால் துறவுக்கேற்ற ஒழுக்கச் சீலராகத் துறவறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

"பிறன் மனை நோக்காத பேராண்மைசான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"

Koviloor Digital Library

நல்ல இல்லறமும், சுத்த துறவறமும் இன்றிக் கூடா ஒழுக்கத்துடன் வாழ்பவரை ஏளனம் செய்வர் பெரியோர். அதனையே இங்கு "சீசி" என்றார் ஆசிரியர்.

மனமானது வேடதாரியாக இருந்து கொண்டு உலகை ஏமாற்றியதுமின்றிப் பாவச் செயல்களைச் செய்வித்து நரகத்தையும், துன்பத்தையும், பிறவியையும் உண்டாக்கு கின்றது. எனவே கீழான (ஒழுக்கமற்ற) எண்ணத்தையுடைய மனமே! நீ கெட்டுப் போவாய்; நாசமடைவாய் என்றார்.

அதனையே "செத்திலாய் கெடுவாயே" என்றார். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது ரஜோகுணம், தமோ குணம் உள்ள மனம் கெட வேண்டும், சத்துவகுணமனம் மேலோங்க வேண்டும் என்பதாம்.

▲

13. வாயினால் பல நூல் படித்து உணர்ந்து
நல்வழி பிறர்க்கு உரை செய்தும்
நீஉலோக ஆசாரம் ஓர் அணுத்துணையானும்
நீங்கிலை நெஞ்சே
தூயதாம் இவண் பிறர்கொளக் குங்குமம்
சுமந்து செல் கரம் உன்னில்
காயம் மானுடத்து இன்று அதற்கு அன்றி
உட்களவு இன்மையினாலே.

இதன் பதப்பொருள்

வாயினால் பல நூல் படித்து - பல ஞான சாத்திரங்களை வாயினால் படித்தும், **உணர்ந்து** - அவற்றினது பொருள்களை ஆராய்ந்து அறிந்தும், **நல்வழி பிறர்க்கு உரை செய்தும்** - பிறர்க்கு நல்ல மார்க்கங்கள் எல்லாம் அவர் சம்மதிப்ப எடுத்துச் சொல்லியும், **உலோக ஆசாரம்** - நீ உலகப் பழக்க வழக்கங்களை, **ஓர் அணுத் துணையாயினும்** - ஓர் அணுவளவு ஆயினும், **நீங்கிலை நெஞ்சே** - திரிகரணத்தினாலும் விட்டு நீங்காமல் இருக்கின்றாய் மனமே! **இவண் பிறர் கொள** - இவ்விடத்து மற்றவர் பயன்படுத்த, **குங்குமம் சுமந்து செல்** - குங்குமத்தைச் சுமந்து செல்கின்ற, **கரம் உன்னில் தூயதாம்**

Koviloor Digital Library

- கழுதை உன்னை விடச் சுத்தமானதாம், **மானுடத்து காயம் அதற்கு இன்று** - அபிமானமானது (மானிட சரீரம் பெற்றுள்ள மனிதர்களுக்கு இன்று மட்டுமே இருக்கின்றது) அதற்கு இல்லை, **அன்றியும் களவும் உள் இன்மையினாலே** - கழுதை நான் குங்குமத்தைச் சுமந்து செல்கிறேன் என்ற உள்இன்மையினாலே அபிமானமும் நான் பிறர் பயன் கொளக் கொடுத்தேன் என்ற வஞ்சகமான தன்மை இல்லாததாலும் மனமே நீ கழுதையினும் மேலானவன் அல்லவாம்.

பொழிப்புரை

பல ஞான சாத்திரங்களை வாயினால் படித்தும் அவற்றினது பொருள்களை ஆராய்ந்து அறிந்தும் பிறர்க்கு நல்ல மார்க்கங்கள் எல்லாம் அவர் சம்மதிப்ப எடுத்துச் சொல்லியும் நீ உலகப் பழக்க வழக்கங்களை ஓர் எள்ளளவாயினும் (கொஞ்சமேனும்) திரிகரணத்தினாலும் விட்டு நீங்காமல் இருக்கின்றாய். மனமே! இவ்விடத்துத் தனக்கு வேறான மனிதர்கள் பயன்படுத்த வாசனை பொருந்திய குங்குமத்தைச் சுமந்து செல்கின்ற கழுதை உன்னை விடச் சுத்தமானதாம். ஏனெனில் பிறவிகளில் மேலான பிறவியாகிய மானுடப் பிறவி பெற்றுள்ள மனிதர்கள் நூல் பொருள் உணர்ந்தும் அந்நூல் பொருளால் பேரின்பமாகிய பயனை அடையாமல் வீட்டின்பத்தைப் (மோட்சம்) பெற்றார் போல் கூறுவதும், அபிமானம் கொள்வதும், மனிதர்கள் மட்டுமேயல்லாமல் நான் குங்குமத்தைச் சுமந்து செல்கிறேன் என்ற அபிமானமும், நான் மேலானவன் என்ற வஞ்சகமான எண்ணமும் கழுதையினிடத்து இல்லாததாலும் மனமே நீ கழுதையினும் மேலானவன் அல்ல கீழானவனே என்பதாம்.

விளக்கம்

கழுதைக்கு, குங்குமத்தைச் சுமந்து செல்கிறேன் என்ற அபிமானம் கிடையாது. மனிதன் லோக ஆச்சாரம் விடுத்து ஞானாச்சாரம் அடையாமல் பிறர்க்கு எடுத்துச் சொல்கிறேன் என்னும் அபிமானம் இருப்பதால் அவன் கழுதையினும் கீழானவன். ஏனெனில் கழுதைக்கு அபிமானம் இல்லை. மனிதனுக்கோ அபிமானம் உண்டு.

Koviloor Digital Library

"வாயினால் பல நூல் படித்து" என்பதற்கு உதாரணம்

"ஓதிஉணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்"

என்பது திருக்குறள்.

பல நூல் படித்து உணர்ந்து பிறர்க்குச் சொல்லியும் தான் ஞான அனுபூதி அடையவில்லையாயின் யாதொரு பயனும் இல்லை என்பது கருத்து.

லோக ஆசாரம் - உலக காரியங்களும் பழக்க வழக்கங்களும்,

ஞானச்சாரம் - கேட்டல், சிந்தித்தல், தெளிதல், வைராக்கியம்

பேரின்பம் - வீட்டின்பம் - (மோட்சம்) - (சுகம்) - (ஜீவன் முத்தி)

உட்களவு - வஞ்சகம், கபடம்

அபிமானம் - என்னுடையது என்கிற பற்று

▲

14. நாலு வேதமும் ஒரு சமநிலை சொல
நவை செய் ஈரவத்தைபால்
கோலு மூவிரு சமயமாகிய
படுகுழியினூடு இழிகின்றாய்
வேலையா உனக்கு உடல்தரு விதி
உறவையும் அதை விடுவிக்கும்
காலனார் தொடர்பையும் இனந்
தொடருதி போலும் நீ கடை நெஞ்சே.

இதன் பதப்பொருள்

நாலுவேதமும் ஒரு சம நிலை - *நான்கு வேதங்களும், வீடு அடைவதற்கு சமபாவனையே முக்கியம் என்று,* **சொல** - *முரசறைய,* **நவை செய் ஈரவத்தைபால்** - *குற்றம் பொருந்திய சகல அவத்தை, கேவல அவத்தைகளில்,* **மூவிரு சமயமாகிய கோலும்** - *ஆறு சமயங்களில் சூழ்ந்து,* **படுகுழியினூடு இழிகின்றாய்** - *பிறவிப் படுகுழியில் வீழ்ந்து இறங்குகின்றாய்,*

Koviloor Digital Library

உடல் தரு வேலையா - உடலைத் தருவதே வேலையாகவுடைய, **விதி உனக்கு** - பிரமன் உனக்கு, **உறவையும்** - உறவாயும், **அதை விடுவிக்கும்** - அந்த உடலை அழிக்கின்ற, **காலனார் தொடர்பையும்** - யமதர்மனது உறவையும், **இனந்தொடருதி போலும்** - இன்னமும் தொடர்கின்றனை போலும், **நீ கடை நெஞ்சே** - நீ, கீழான மனமே! என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

நான்கு வேதங்களும் வீடு அடைவதற்குச் சமபாவனையே முக்கியம் என்று முரசறைய ஆறு சமயங்களில் குற்றம் பொருந்திய சகல அவத்தை, கேவல அவத்தைகளில் சூழ்ந்து பிறவிப் படுகுழியில் வீழ்ந்து தாழ்வடைகின்றாய். கீழான மனமே! உடலைக் கொடுக்கின்ற வேலையாக உடைய பிரமன் உனக்கு உறவாயும் அந்த உடலை அழிக்கின்ற வேலையாக உடைய யமதர்மனது உறவையும் இன்னமும் தொடர்கின்றனையே என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

நான்கு வேதங்கள்: 1.ரிக் 2. யஜுர் 3.சாமம் 4.அதர்வணம்

சமநிலை

இன்ப துன்பம், வெற்றி தோல்வி, மான அவமானம், லாப நஷ்டம் இவை போன்ற இருமைகளில் மனமானது ஏற்றத் தாழ்வடையாமல் சமபாவனையுடன் இருப்பது. மேலும் நாம ரூபங்களை நீக்கி, சர்வத்தையும் பிரம்மமயமாகப் பார்ப்பது; இதுவே துரிய அவத்தை. இதுவே மோட்சமடைய ஏதுவானது.

சகல அவத்தை - நனவு, கனவு
கேவல அவத்தை - தூக்கம்
அவத்தை - காலம்

சகல அவத்தை, கேவல அவத்தை அஞ்ஞானத்தோடு கூடியது, துரிய அவத்தையே ஞான நிலையாம்.

ஆறு சமயங்கள்: 1.காணாபத்தியம்(கணபதி) 2.சைவம்(சிவன்) 3. வைஷ்ணவம்(திருமால்) 4. கௌமாரம் (முருகன்) 5. சௌரம் (சூரியன்) 6.சாக்தம் (சக்தி)

Koviloor Digital Library

இந்த ஆறு சமயவாதிகள் சகல, கேவல அவத்தையுடையவர்கள். அவர்களுக்குப் பிறப்பு, இறப்பு உண்டு. இதனையே "படுகுழியினூடு இழிகின்றாய்" என்றார். உதாரணம் "பொறிவழி சென்று மீளும் அவல மதிகொடு பொறா சமயங்கள் ஆறுமறிய விழுமதில்" என்பது சசிவர்ணபோதம்.

ஞான நிலையினால் உண்டாகின்ற சமநிலையை அடைவதுதான் மோட்சத்திற்கு உபாயமே தவிர ஆறு சமயத்தில் எந்த மூர்த்தியை உபாசனை (பக்தி) செய்தாலும் பிறவிக் கடலைத் தாண்ட முடியாது என்பது கருத்து. நிஷ்காமிய உபாசனையினால் அந்தக்கரணச் சுத்தி அடைவது தான் பிரயோஜனம்; காமிய உபாசனை அந்தக்கரணச் சுத்தியைத் தராது.

▲

15. நெஞ்சமே உடல் அந்தம் ஆதியை விடார் நிற்க
மற்றையர்க்கு எல்லாம்
வெஞ்சமற்கு உதிப்பு அரிது இவைக்கு
ஒருமிருகண்டு புத்திரன் சான்றால்
அஞ்சல் இவ்வுடற்கு இறுதி இப்பொழுது
என அறிய ஒணாமையின் நாளும்
தஞ்சம் என்று அரன் சரண் விடேல் யாமும்
அச்சமன் வலி தடுப்பாமே.

இதன் பதப்பொருள்

நெஞ்சமே உடல் அந்தம் - *மனமே! தேகம் அழிவடையும் போது,* **ஆதியை விடார்** - *சிவனது திருவடியை மறவாத பெரியோர்கள்,* **நிற்க மற்றையர்க்கெல்லாம்** - *தவிர மற்றை சரியை, கிரியைகளைச் செய்கின்ற சீவர்க்கெல்லாம்,* **வெஞ் சமற்கு** - *யமனுடைய தொடர்பாகிய உடல் நாசத்தை அடைதலும்,* **உதிப்பரிது** - *பிறப்பு அடைதலுமாகிய சம்பந்தத்திலிருந்து விடுபடுவது அரிது,* **இவைக்கு ஒரு மிருகண்டு புத்திரன் சான்றால்** - *சிவன் வழிபாட்டால் முத்தி அடையாமலிருந்து, பிரம்மத்தை(சிவத்தை) மறவாமல் வழிபட்டு முத்தி அடைந்தவருக்கு மிருகண்டு மாமுனி*

Koviloor Digital Library

புத்திரனாகிய மார்க்கண்டேயரே சாட்சி, **அஞ்சல் இவ்வுடற்கு** - பிறவிக்கடலைக் கடப்பதற்கு நீ அஞ்ச வேண்டாம். இந்தத் தூல சரீரத்திற்கு **இறுதி இப்பொழுது என** - நாசம் இந்தக் கணப்போது என்று, **அறிய ஒணாமையின்** - நம்மால் அறியக் கூடாமையினால், **நாளும்** - எப்போதும், **அரன் சரண் தஞ்சம் என்று விடேல்** - சிவத்தினது திருவடியே (பிரம்மமே) பற்றுக்கோடு (துணை) என்று விடாமல் பற்றினால், **அச்சமன் வலி** - காலனது தொடர்பாகிய சாவின் சாமர்த்தியத்தை, **யாமும் தடுப்பாம்** - நாமும் தடுத்துக் கொள்வாம் என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

மனமே! தேக அழிவின் போது சிவனது திருவடியை (பிரம்மம்) மறவாத பெரியோர்கள் மோட்சமடைவார்களே தவிர மற்ற சரியை, கிரியைகளைச் செய்கின்ற சீவர்க்கெல்லாம், யமனது தொடர்பாகிய உடல் நாசமடைதலும், பின்பு பிறப்பு அடைதலுமாகிய ஜனன மரணத்திலிருந்து விடுபடுவது அரிது என்று விவேகம் கூறிற்று. சிவன் வழிபாட்டால் முத்தி அடையாமல் இருந்து பிரம்மத்தை மறவாமல் (பிரஹ்மாகார விருத்தியில் இருந்து கொண்டு) மோட்சமடைந்தவர் யாரேனும் உண்டா? அதாவது பிரமாணம் உண்டா? என்று மனம் கேட்க மிருகண்டு மாமுனி புத்திரனாகிய மார்க்கண்டேயரே சாட்சி என்று விவேகம் கூறிற்று. பிறவிக் கடலைக் கடப்பதற்கு நீ அஞ்ச வேண்டாம். இந்தத் தூல உடம்பிற்கு நாசம் இந்தக் கணப்போது என்று நம்மால் அறியக்கூடாமையால் எப்போதும் சிவனது திருவடியைப் (பிரம்மத்தையே) பற்றுக் கோடாக இருந்து கொண்டு பிரஹ்மாகார விருத்தி பண்ணினால் காலனது தொடர்பாகிய சாவின் சாமர்த்தியத்தை நாமும் தடுத்துக் கொள்வாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

இறக்கும் தருவாயில் எதை நினைக்கிறார்களோ அதையே அடைவார்கள் என்பது கிருஷ்ணபகவானின் திருவாக்கு. அங்ஙனம் எப்போதும் இறக்கும் தருவாயிலும் பிரம்மமே நான் என்று நினைவில் இருப்பவர் பிரம்மமாகவே ஆவர். அதுவே விதேக முத்தியாகிய மோட்சமாம்.

Koviloor Digital Library

அவர்களைத் தவிர, சரியை கிரியைகளைச் செய்பவர் பிறவிக்கடலைத் தாண்ட முடியாது. எப்போது சரீரத்திற்கு நாசம் வரும் என்று அறிய முடியாதாகையால் எப்போதும் பிரஹ்மாகார விருத்தியில் இருந்தால் சாகும் தருவாயில் பிரம்மத்தையே நினைத்துப் பிரம்மமாகலாம். நாம் எப்போதும் பிரம்ம சொரூபமே. அறியாமையினால் சரீரம், மனம், புத்தி இவைகளில் நான் எனது என்கின்ற அபிமானம் உண்டானது. அறியாமையுடன் இருந்தாலும் நான் பிரம்மமே. ஆத்ம ஞானம் வந்தாலும் நான் பிரம்மமே. நான் பிரம்மம் ஆவதுவும் இல்லை. இதை அறிந்து கொண்டால் காலனை வெல்லலாம் என்பது கருத்து. அதனையே "சமன் வலி தடுப்பாம்" என்றார்.

"உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டு சொல்வேன்" என்பதுவும், "பிறந்தது உண்டானாலன்றோ பிறகு சாவது தானுண்டாம்" என்பதும் கைவல்லிய நவநீதம்.

சரியை - சிவ ஆலயத்தில் திருவலகிடல், திருவிளக்கேற்றல், புஷ்பம் எடுத்தல், பக்தி நூல்கள் பாராயணம், ருத்திராட்சம் அணிதல், ஸ்நானம் செய்தல், வழிபாடு செய்தல் இன்னும் பல

கிரியை - புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், சந்தனம் ஆகிய ஐந்தும் கோமயம் (சாணம்), கோசலம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்தும் இவைகளையும் மற்றை பூஜா திரவியங்களையும் கொண்டு பூஜை செய்தல், யாகம் வளர்த்தல், மந்திர ஜபம் உச்சரித்தல், அர்ச்சனை செய்தல் இன்னும் பலவிதமான கிரியைகள்.

▲

16. தடுத்து மேலும் இவ்வுருவம் ஆயினும்
பெறல் சற்று அல மறை நாகத்து
இடத்தின் மாதவர் இருவர் கங்கு என அடைந்து
இருத்தல் சான்று அரிதாகிக்
கிடைத்த தேகமும் விவேகமும் இருக்கும்
ஞான்றே கிரிசனை நெஞ்சே
அடுத்திலாய் பலகவலை மாய்த்து ஓர் உணர்வு
ஆகி நின்று அகலாதே.

Koviloor Digital Library

இதன் பதப்பொருள்

தடுத்து மேலும் - இந்த மானிடதேகத்தைவிட்டு இனிமேல், **இவ்வுருவமாயினும் பெறல்** - வேறு மானிட தேகத்தையாயினும் பெறுதல், **சற்று அல** - எளிது அல்ல, **மறை நாகத்து** - வேதகிரியின் கண், **மாதவர் இருவர்** - சம்பரன், சம்பாதி என்னும் இரண்டு முனிவர்களும், **கங்கு அடைந்திருத்தல்** - கழுகாக இன்னும் இருப்பதே, **சான்று** - மானிட சரீரம் கிடைப்பது அரிது என்பதற்குச் சாட்சியாம், **அரிதாகிக் கிடைத்த தேகமும் விவேகமும்** - கிடைப்பதற்கு அரிதாகிய இந்த மானிட சரீரம் ஆத்மாவான தன்னையறியும் ஞானமுமாகிய இவை இரண்டும், **இருக்கும் ஞான்றே** - இருக்கின்ற காலத்தே, **நெஞ்சே** - மனமே, **கிரிசனை அகலாமல் நின்று** - கைலயங்கிரி வாசனாகிய சிவபெருமானின் திருவடியை விட்டு நீங்காமல் இருந்து, **பல கவலை மாய்த்து** - பல வித உலகவிஷயங்களினால் வருகின்ற மனத்துன்பத்தை நீக்கி, **ஓர் உணர்வாகி** - ஏக அறிவாகி, **அடுத்திலாய்** - சேர்வாயாக என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

இம்மானிட தேகத்தை விட்டு வேறு மானிட தேகத்தைப் பெறுதல் எளிதல்ல என்று விவேகம் கூறிற்று. மானிடத்தேகம் கிடைப்பது அரிது என்பதற்குச் சாட்சியாக யாது உளது என்று மனம் கேட்க. அதற்கு வேதகிரி என்கிற திருக்கழுக்குன்றம் என்னும் திருத்தலத்தில் சம்பரன், சம்பாதி என்கிற இரண்டு முனிவர்களும் இன்றும் கழுகாக இருப்பதே சாட்சியாம் என்று விவேகம் கூறிற்று. இந்த மானிட சரீரமும் தன்னையறியும் அறிவாகிய ஆத்ம ஞானமும் ஆகிய இரண்டும் கிடைப்பதற்கு மிக அரிதாம். இம்மானிட சரீரமும் ஆத்ம ஞானமும் இருக்கின்ற காலத்தில் மனமே! நீ சிவனது திருவடியை விட்டு நீங்காமல் பிரஹ்மாகார விருத்தியிலிருந்து பலவித உலக விஷயங்களினால் வருகின்ற மனக்கிலேசங்களை, துன்பங்களை நீக்கி ஏக அறிவாகி (அத்துவிதமாய்) இருப்பாயாக என்று விவேகம் கூறிற்று.

Koviloor Digital Library

விளக்கம்

முன்பு சம்பரன் சம்பாதி என்னும் இரண்டு முனிவர்களும் புத்தியை விரும்பி மேலான தவத்தைப் பண்ணினார்கள். தவப்பயனாக, சிவபெருமான் பிரசன்னமாகி உங்களுக்கு வேண்டிய வரம் யாது? என்று கேட்ப அம்முனிவர்கள் தாங்கள் கருதியதை மறைத்து முத்தி வேண்டும் என்று வரம் கேட்டனர். அவர்கள் கருதிய வரம் ஒன்று கேட்கும் வரம் வேறொன்றாக இருக்கவும் அதனை அறிந்து சிவபெருமான் அம்முனிவர்களைச் சபித்துவிட்டார். அதனால் அவ்விருவோரும் வேதகிரியின் கண்ணே கிருதயுக முதல் இந்தக் கலியுகம் அளவும் இன்னும் மானுட தேகம் கிடையாமல் கழுகாக இருப்பதுவே சாட்சிப்பிரமாணம்.

சிவனது திருவடியை வணங்கினால் சிவனது கிருபை உண்டாகும்; அதனால் ஞானசற்குரு கிடைக்கும். சற்குருவினால் ஞான உபதேசம் பெற்று ஞானம் உண்டாம். அதன் பின்பு பிரஹ்மகார விருத்தி பண்ணலாம். அதனால் மனத்துன்பம் நீங்கி ஏக அறிவு உண்டாகி ஆனந்தமாயிருக்கலாம் என்பது கருத்து. விவேக சூடாமணியில் ஆதிசங்கரர் மானிட சரீரம், ஞான சற்குரு, ஆத்மஞானம் கிடைப்பது அரிது என்றார். அதனையே இங்கு ஆசிரியர் "அரிதாகிக் கிடைத்த தேகமும் விவேகமும்" என்றார்.

பிரஹ்மாகார விருத்தி : நானே பிரம்மம்; பிரம்மமே நான் என்று மாறி மாறிச் சிந்தித்தல்.

ஏக அறிவு - அத்துவிதம் நாமரூபமற்று ஒன்றாய்க் காண்பது, **கங்கு** - கழுகு.

▲

17. அகலும் இவ்வுடல் மினின் விரைந்து எனின்
விரைந்து அரன் தொழு ஈதலது இங்கே
சகலமும் செய நினைகுதல் தனை இனித்
தடப்புனல் இது என்றே
பகலினால் விரி கானலை நெஞ்சமே
கருதி நெல் பயிர் ஆதி
இகலினால் செய நினைபவர் நினைவை
ஒத்திடும் என விடுவாயே.

Koviloor Digital Library

இதன் பதப்பொருள்

மினின் இவ்வுடல் - *மேகத்தின் கண் தோன்றி மறையும் மின்னல் போன்று மாயையினால் தோன்றிடும் இச்சரீரம்,* **விரைந்து அகலும்** - *கண காலத்தில் அழியக்கூடியது,* **எனின்** - *சீக்கிரம் அழியக்கூடியதாயிருப்பதால்,* **விரைந்து அரன்தொழு** - *அதிசீக்கிரமாகச் சிவனது திருவடியை வணங்குவாயாக,* **ஈது அலது** - *சிவனது திருவடியை வணங்குதல் செய்யாமல்,* **இங்கே சகலமும் செய நினைகுதல்தனை** - *பொய்யாகிய உலகை மெய்யாகக் கருதிக் கொண்டு எல்லாச் செயல்களையும் செய்வதற்கு எண்ணுவதை,* **இனி பகலினால் விரிகானலை** - *சூரிய கிரகணத்தால் பகலில் பொய்யாய்த் தோற்றுகின்ற கானல் சலத்தை,* **தடப்புனல் இது என்றே கருதி** - *குளத்திலுள்ள நீர் இது என்று கருதி,* **நெற் பயிராதி** - *நெல் மற்ற தான்ய பயிர்களையும்,* **இகலினால் செய் நினைபவர்** - *தமது சாமர்த்தியத்தினால் பயிரிடச் செய்ய நினைப்பவர்களின்,* **நினைவை யொத்திடும் என** - *கருத்தைப் போன்று உளது உமது கருத்தாம் என அறிந்து.* **நெஞ்சமே இனி விடுவாயே** - *மனமே! அதைத் தெரிந்து கொண்டு இனி விட்டு விடுவாயாக என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

மேகத்தின்கண் கண நேரத்தில் தோன்றி மறையும் மின்னல் போன்று மாயையினால் தோன்றிய இச்சரீரம் கண காலத்தில்அழியக்கூடியது. கண காலத்தில் அழியக் கூடியதாய் இருப்பதால் அதி சீக்கிரமாகச் சிவனது திருவடியை (ஆத்மஞானத்தை) அடைவாயாக. ஆத்ம ஞானத்தைப் பெறாமல் பொய்யாகிய உலகத்தினை மெய்யாகக் கருதிக் கொண்டு இங்கு எல்லாச் செயல்களையும் செய்வதற்கு எண்ணுகின்றாய். பகற்காலத்தில் சூரிய கிரணத்தால் பொய்யாய்த் தோற்றுகின்ற கானல் சலத்தைக் குளத்திலுள்ள நீர் போன்று இதை நீ கருதுகின்றனை மனமே! மேலும் இந்தக் கானல் சலத்தைக் கொண்டு நெல் மற்ற தானியப் பயிர்களையும் இப்பூமியின்கண் பயிரிடச் செய்யக் கருதுபவர்களைப் போல உனது அபிப்பிராயம் உளது என்று தெரிந்து கொண்டு மயக்கமற்றுத் தெளிவாய் இருப்பாயாக என்று விவேகம் கூறிற்று.

Koviloor Digital Library

விளக்கம்

தேகம் விரைந்து அழியக்கூடியதாயும் எப்போது அழியக்கூடியது என்று கூற முடியாததாயிருப்பதால் சீக்கிரம் ஆத்ம ஞானத்தை அடைய வேண்டும் என்பது கருத்து. எதை அறிந்தால், எல்லாம் அறிந்ததாகுமோ, எல்லாம் அடைந்ததாகுமோ அதை அறிய வேண்டும். அதை விடுத்து, சகல காரியங்களும் செய்து அடைய வேண்டியதெல்லாம் அடைந்தாகிவிட்டது; அறிய வேண்டியதெல்லாம் அறிந்தாகிவிட்டது என்ற நிலையைப் பெறுவது சாத்தியமல்ல.

கானல் நீரைக் கொண்டு விவசாயம் செய்ய முடியாது. குளத்து நீரை(மெய்யான நீரை)க் கொண்டுதான் விவசாயம் செய்ய முடியும். அதைப் போன்று உலக காரியங்கள் எல்லாவற்றையும் செய்து அடையவும் திருப்தியடையவும் முடியாது. ஆனால் ஆத்ம ஞானம் உண்டாகுமாயின் எல்லாம் அடைந்ததாயும் திருப்தியும் உண்டாகும். கருமத்தினால் நிறைவும் திருப்தியும் உண்டாகாது. ஆத்ம ஞானத்தினால் தான் நிறைவும் திருப்தியும் உண்டாகும் என்பது கருத்து.

▲

18. வாய்மை ஈது உணர்ந்திடுதி நன்னெஞ்சமே
வருகணத்து ஏதேனும்
நீ நினைந்திடேல் அவ்வளவு உடல் உறல்
நிச்சயிப்பது அரிது அத்தால்
போயதோர் கணச்செயல் உனேல்
பயனிலை புகல் நிகழ் கணத்தேனும்
தீமை நன்மை நீ நினைவதென்
வினைவழிச் சிவன் தருகுதலாலே.

இதன் பதப்பொருள்

நன்னெஞ்சமே - நான் சொல்கின்ற மார்க்கத்தைக் கேட்டு அதன் வழி நடக்கின்ற நல்ல மனமே! **வருகணத்து ஏதேனும் நீ நினைந்திடேல்** - வருங்காலத்தைப் பற்றி யாதொன்றையும் கருதாதே, **அவ்வளவு உடல் உறல்** - அக்காலம் வரையிலும் இந்த உடல் இருப்பது, **நிச்சயிப்பது அரிது** - உத்திரவாதம் கிடையாது, **அத்தால்** - அதனாலும், **போயதோர் கணச்செயல்**

Koviloor Digital Library

- சென்ற காலத்தில் செய்தவற்றையும் செய்யாமல் விடுத்தேன் என்பதையும், **உனேல் பயனிலை** - நீ கருதற்க. ஏனெனில் அதனாலும் யாதொரு பலனுமில்லை; **புகல் நிகழ் கணத்தேனும்** - சொல்லக்கூடிய நிகழ்காலத்தில், **நன்மை தீமை** - சுகதுக்கங்களை, **நீ நினைவது என்** - நீ கருதுவது என்னை? **வினைவழிச் சிவன் தருகுதலாலே** - முன் பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளைச் சிவன் அறிந்து சுகதுக்கங்களை அனுபவிக்கச் செய்வதால் நிகழ்காலத்தையும் நீ எண்ணாதே, **வாய்மை ஈது உணர்ந்திடு** - உண்மையான இந்த விஷயத்தினை அறிந்து கொள்வாயாக என விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

நான் கூறுகின்ற வழியைக் கேட்டு அதன் வழி நடக்கின்ற நல்ல மனமே! வருங்காலத்தைப் பற்றி யாவற்றை யெல்லாம் நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அக்காலம் வரையிலும் இந்த உடல் இருப்பது உத்தரவாதம் இல்லை. அதனாலும் சென்ற காலத்தில் செய்தவற்றையும் செய்யாமல் விட்டு விட்டேன் என்பதையும் நீ கருதாதே. ஏனெனில் அதனாலும் யாதொரு பயனுமில்லை. சொல்லக்கூடிய நிகழ்காலத்தில் கணப்போதாயினும் சுக துக்கங்களை நீ கருதுவது என்ன? அவரவர் முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைகளைச் சிவன் அறிந்து அதற்கேற்றவாறு அவரவர்களைச் சுக துக்கங்களை அனுபவிக்கச் செய்வதால் நீ நிகழ்காலத்தையும் எண்ணிக்கொண்டே இருக்காதே. இந்த உண்மையான கருத்தினை மனமே! நீ அறிந்து கொண்டு கலங்காமல் இருப்பாயாக என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

எல்லோரும் இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவற்றில் ஏதேனும் ஒன்றை நினைத்துக் கொண்டே இருக்கின்றனர். அதனால் மனச்சஞ்சலம் உண்டாம். மனச்சஞ் சலம் உண்டாகாமல் இருப்பதற்குச் சென்ற காலத்தை நினையாதே. ஏனெனில் சென்றதை நினைத்து யாதொரு பயனுமில்லை. வருங்காலத்தை நினையாதே. ஏனெனில் உடல் எவ்வளவு காலம் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. மேலும் நினைத்த காரியம் நினைத்தது போல் நடக்கலாம். விபரிதமாகவும் (வேறாகவும்) நடக்கலாம்.

Koviloor Digital Library

சிறப்பாகவும் நடக்கலாம். தாமதமாகவும் நடக்கலாம். எனவே வருங்காலத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டே இருக்காதே. நிகழ்காலத்தில் இன்ப துன்பங்கள் நாம் முற்பிறவியில் செய்த வினைக்கேற்ப வருதலால் அதையும் நினைக்காதே என்பது கருத்து.

அகந்தை, அபிமானம், ஆசை, கோபம் இவைகள் இல்லாமல் கருமாவைச் செய்ய வேண்டும். மேலும் ஈசுர அர்ப்பணமாக கருமாவைச் செய்ய வேண்டும் என்பது கருத்து. இதற்கு உதாரணம் ஔவையார் 'நல்வழி'

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன
கண்புதைந்த மாந்தர் குடி வாழ்க்கை
மண்ணின் கலம் போலச் சாந்துணையும் சஞ்சலமே தான்"

▲

19. தருவ தீமையின் நன்மையும் ஊழ் அடுத்ததை
உயர் கழை மேல் நின்று
உரைகளாதி செய் கூத்தரில் பிறனைநச்சு
ஒரு மகள் தவன் ஏவல்
புரிதல் தன்னில் ஐம்பொறிகளால் பற்றினும்
புகல் நிராசையை நீயுற்று
இரவினும் பகலினும் விடேல் நெஞ்சமே
இன்பவீடு எளிதாமே.

இதன் பதப்பொருள்

அடுத்ததை ஊழ் தீமையின் நன்மையும் தருவ - ஊழ் வினை நமக்குப் பொருந்திய வினைப்பயனைக் கொடுக்க அதற்கேற்றாற் போல இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கின்றாய். **உயர் கழைமேல் நின்று** - உயர்ந்த கம்பத்தில் நின்று கொண்டு, **உரைகளாதி செய் கூத்தரில்** - வித்தைகளைக் காண்பவர்களைப் பார்த்துப் பணத்தைப் பெறும் கூத்தரைப்போலவும், **பிறனை நச்சு ஒரு மகள்** - பர புருடனைப் பழகிய ஒரு பெண்ணானவள் அவனிடம் கருத்தை வைத்துக் கொண்டு, **தவன் ஏவல் புரிதல் தன்னில்** - தனது கணவனது ஏவல் பணிவிடைகளைச் செய்தல் போலவும்,

Koviloor Digital Library

ஐம்பொறிகளால் பற்றினும் - *ஐந்து இந்திரியங்களாலும் ஐந்து விஷயங்களை அனுபவித்தாலும்,* **புகல் நிராசையை** - *சொல்லுகின்ற அவ்விஷயங்களை இன்பம் அன்று என்று கருதி அவற்றின் கண் ஆசையை விட்டு,* **இரவினும் பகலினும்** - *இராக்காலத்திலும் பகல் காலத்திலும்,* **நீ உற்று விடேல்** - *பிரஹ்மாகார விருத்தியை நீ பொருந்திவிட்டு நீங்காமல் செய்து கொண்டிருப்பாயாக,* **நெஞ்சமே இன்ப வீடு எளிதாமே** - *மனமே! கிடைப்பதற்கு அரிய மோட்சம் எளிதாகக் கிடைக்கும் என்றும் ஆனந்தமும் உண்டாகும் என்றும் விவேகம் கூறிற்று. (தவன் - புருடன்)*

பொழிப்புரை

மனமே! முன் பிறவிகளில் செய்த பாவ புண்ணியங்கள் வினைப்பயனைக் கொடுக்க அதற்கேற்றாற் போல இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கின்றாய். எனவே பழவினைப்படியே நன்மை தீமை வரும் என்று அறிந்து எதிர் காலத்தைப் பற்றி ஒன்றையும் கருதாதே. உயர்ந்த கம்பத்தின் மேல் நின்று கொண்டு அதனிடத்துக் கருத்தை வைத்துக் கொண்டும் பணம் பெறும் பொருட்டு வித்தை காண்பவர்களைப் பார்த்து வள்ளல் என்றும் தியாகி என்றும் புகழ்ந்து கூறிப் பணத்தைப் பெறும் கூத்தரைப் போலவும் பர புருடனைப் பழகிய ஒரு பெண்ணானவள் அவனிடம் மனத்தினை வைத்துக் கொண்டு தன் கணவனின் ஏவல் பணிவிடைகளைச் செய்தல் போலவும் ஐந்து இந்திரியங்களாலும் ஐந்து விஷயங்களை அனுபவித்தாலும் சொல்லுகின்ற அவ்விஷயங்கள் இன்பம் அன்று என்று கருதி அவற்றின் கண் ஆசையை விடுத்து இராக்காலத்திலும் பகல் காலத்திலும் பிரஹ்மாகார விருத்தியை நீ பொருந்திவிட்டு நீங்காமல் செய்து கொண்டிருப்பாயாக. அங்ஙனம் பிரம்மாகார விருத்தி செய்வாயாகின் மனமே! கிடைப்பதற்கரிதாகிய மோட்சம் எளிதாகக் கிடைக்கும்; ஆனந்தமும் உண்டாகும் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

நாம் முன் பிறவிகளில் செய்த புண்ணிய பாவமாகிய சஞ்சித கருமத்தினால் நன்மை தீமை உண்டாகின்றது. எனவே வருங்காலத்தைப் பற்றிக் கருதாதே. நோக்குவித்தைகளைச்

Koviloor Digital Library

செய்யும் கூத்தாடி வித்தைகளை நன்றாகச் செய்யினும் அவனது எண்ணம் பணத்தின் மேல் இருப்பது போலும் பர புருடனைச் சேர்ந்த பெண்ணானவள் தன் கணவனுக்கான வீட்டுக் காரியங்களை நன்றாகச் செய்யினும் அவளது எண்ணம் பரபுருடனிடத்துப் பழகிய அனுபவத்தை எண்ணிக் கொண்டிருப்பது போலும் நீ உலகக் காரியங்களை நன்றாகச் செய்யினும் இவ்வுலகம் பொய்யென்று கருதி பிரஹ்மாகார விருத்தியோடு இருக்க வேண்டும். அங்ஙனம் இருந்தால் மோட்சம் உண்டாம். ஆனந்தமாய் இருக்கலாம்.

ஊழ்வினை - *முன்பிறவிகளில் செய்தவினைகள்,* **சஞ்சிதவினை** - *பழவினை,* **ஐந்துவிஷயங்கள்** - *சப்தம், தொடுஉணர்வு, ரூபம், சுவை, நாற்றம்;* **ஐம்பொறிகள்** - *மெய், வாய், கண், மூக்கு, செவி,* **பிரம்மாகார விருத்தி** - *பிரம்மயாகிய தன்னுடைய யதார்த்த சொரூபத்தை (நிலையை) குரு, சாஸ்திரத்தின் மூலமாகத் தெரிந்து கொண்டு அதனையே சதா நினைத்தல்,* **நோக்கு வித்தை** - *ஒரு தந்திர வித்தை.*

▲

20. ஆம் உன் இச்சையே மேலுமேலும் பிறப்பு
அளிக்கும் வித்து என நெஞ்சே
நீ மறித்திடு ஆசைக்கடல் சுவறுமே நினைவு
எனும் திரை மாயும்
போம் இறந்து எலா நினைவும்
எப்பொழுதில் அப்பொழுது பூரணமாய,
சோம சேகரத்து எந்தை பொற்கழலையும்
தொழில் ஐயமிலை நாமே.

இதன் பதப்பொருள்

ஆம் உன் இச்சையே - *உன்னுடைய ஆசையே,* **மேலு மேலும்** - *அடுத்தடுத்து,* **பிறப்பு அளிக்கும்** - *பிறவிகளைக் கொடுக்கக்கூடிய,* **வித்தென நீ நெஞ்சே** - *விதை என்று நெஞ்சமே நீ கருதி,* **மறித்திடு** - *ஆசை மனதின்கண் தோன்றும் போதே கவனித்துப்பார்த்துத் தடுத்தல் செய்,* **ஆசைக்கடல் சுவறுமே** - *ஆசையாகிய கடல் வற்றும்,* **நினைவு எனும் திரை மாயும்** - *அக்கடலாகிய ஆசை வற்றவே பிற விஷயங்களில் செல்லும் நினைவாகிய அலை இல்லாமல் போய்விடும்.*

Koviloor Digital Library

எலா நினைவும் இறந்து போம் - *முன் அனுபவித்து மனதின் கண் ஏறி இருந்த வாசனை என்கிற நினைவுகள் அனைத்தும் நாசமடையும்.* **எப்பொழுதில் அப்பொழுது** - *அந்நினைவு எல்லாம் எப்பொழுது இறக்கின்றதோ அப்பொழுது தானே,* **சோம சேகர எந்தை** - *சிவனாகிய எமது தந்தையினது,* **பூரணமாய பொற்கழலையும்** - *பரிபூரணமாகிய பொன் போன்ற திருவடியையும்,* **நாம் தொழல் ஐயமிலை** - *நாம் வணங்குதற்குச் சந்தேகமில்லை என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

உன்னுடைய ஆசையே அடுத்தடுத்து பிறவிகளை உண்டு பண்ணக்கூடிய விதை என்று நெஞ்சமே நீ கருதி, ஆசை மனதின்கண் தோன்றும் போது கவனித்துப் பார்த்துச் செல்லவொட்டாமல் தடுத்தல் செய். அங்ஙனம் செய்யின் கண்ட விஷயங்களை இச்சிக்கும் ஆசையாகிய கடல் வற்றும். அக்கடலாகிய ஆசை வற்றவே, பிற விஷயங்களில் செல்லும் நினைவாகிய அலைகள் போய்விடும். அந்நினைப்பாகிய அலைகள் இல்லாமல் போகவே முன் அனுபவித்து மனதின்கண் ஏறி இருந்த வாசனை என்கிற நினைவுகள் அனைத்தும் நாசமடையும். அப்பொழுது தானே சிவனாகிய எமது தந்தையினது பரிபூரணமாகிய பொன் போன்ற திருவடியையும் நாம் வணங்குவதற்குச் சந்தேகமில்லை என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

பிறவி எடுப்பதற்குக் காரணம் ஆசையே. ஆசை, சஞ்சித கருமம், அஞ்ஞானம் இம்மூன்றும் பிறவியைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. ஆத்ம ஞானம் வந்தால் அஞ்ஞானம் போய்விடும். ஆத்மஞானம் வந்தால் சஞ்சித கருமங்கள் நாசமாம். ஆத்மஞானம் வந்தால் நிரங்குச திருப்தி (மேலான ஆனந்தம்) உண்டாம் என்பது கருத்து.

ஆசை பிறப்பை உண்டாக்குகிறது. ஆசையில்லாமல் நினைவுகள் தோன்றாது. நினைவுகள் தோன்றாதாயின் மனதின்கண் அடங்கியிருக்கின்ற வாசனையான நினைவுகளும் மறையும். அப்பொழுது பூர்ணமாகிய சிவனது திருவடியை (பிரம்ம சொரூபத்தை) நினைக்கலாம். பிரம்மத்தையே

Koviloor Digital Library

நினைத்தால் பிரம்மமாகலாம் என்பது கருத்து. பிரம்மமாகலாம் என்பது உபச்சாரம். நாம் பிரம்மமாகவே இருக்கின்றோம் என்பது கருத்து. யார் ஒருவன் இறக்கும் தருவாயில் எதை நினைக்கின்றானோ அதையே அடைவான் என்பது பகவானின் வாக்கு.

▲

21. நாம் அரற்கு அருச்சனை முதலிய
 கொடு நலம் செய்தேம் அவையின்றித்
தீமை செய்துளேம் எனவும் உன்னிலை
 ஒரு சிறிது அசைவு அடைந்தாலும்
யாம் இயற்று அபராதம் என் நினைவு மற்று
 அசைகிலை எனின் நெஞ்சே
ஏமம் மிக்குறச் செய்யு நன்கு இறை கழற்கு
 எனத்துணிந்திடு நீயே.

இதன் பதப்பொருள்

நாம் அரற்கு - *யாம் இன்றைக்கு சிவனது திருவடிக்கு,* **அருச்சனை முதலியகொடு** - *திருமஞ்சனம் பலம் பத்திர புஷ்பங்களை,* **நலம் செய்தேம்** - *அருச்சனை முதலிய உபச்சாரங்களைச் செய்து நன்மை செய்தேன் என்றும் அவையின்றித்தீமை,* **செய்துளேம்** - *அவ்வபிடேகம் செய்யாமல் இருந்ததினால் தீமை செய்தேன்.* **எனவும்** - *எனவும் கருதுவதைப் பற்றி,* **உன் நிலை** - *உனது மன நிலையானது,* **ஒரு சிறிது அசைவு** - *சிறிதோர் சலனம்,* **அடைந்தாலும்** - *பொருந்தியிருப்பின்,* **யாம் இயற்று அபராதம்** - *அதுவே சிவனது திருவடிக்குச் செய்யும் குற்றமாம் என விவேகம் கூறிற்று.* **என்** - *மேலும் சிவத்தை அறிவதற்கு உபாயம் யாது என்று மனம் கேட்க,* **நினைவுமற்று அசைகிலை, எனின்** - *எந்த எண்ணமும் எழாமல் அசையாமல் மனம் நிற்குமேயானால்,* **நெஞ்சே** - *மனமே!* **ஏமம் மிக்குறச் செய்யும்** - *இன்பம் மிகுந்து அடையச் செய்யும்,* **நன்கு இறைகழற்கு** - *மேலான சிவனது திருவடிக்குச் செய்யும்,* **என** - *பூசையாம் இது என்று,* **துணிந்திடு நீயே** - *நிச்சயித்து அறிவாயே.*

Koviloor Digital Library

பொழிப்புரை

யாம் இன்றைக்குச் சிவனது திருவடிக்குத் திருமஞ்சனம், பலம், பத்திரம், புஷ்பங்களைக் கொண்டு அருச்சனை முதலிய உபச்சாரங்களைச் செய்து நன்மை செய்தேன் என்றும் அவ்வபிடேகம் செய்யாமல் இருந்ததினால் தீமை செய்தேன் எனவும் கருதுவதைப் பற்றி உனது மனோ நிலையானது சிறிதோர் சலனம் பொருந்தி இருப்பின் அதுவே சிவனது திருவடிக்குச் செய்யும் குற்றமாம் என்று விவேகம் கூறிற்று. அதற்குப் பூசை செய்தேன். பூசை செய்யவில்லை என்னும் நினைவு எங்ஙனம் சிவனுக்குச் செய்யும் குற்றமாம் என்று மனம் கேட்க, மனம் வாக்குக்கு எட்டாத சிவத்தைச் (பிரம்மம்) சுட்டி அறிதல் கூடாமையின் சுட்டி அறிகிறேன் என்றும், பூஜை செய்கிறேன் என்பதும் பூஜை செய்யவில்லை என்று கூறுவதும் தவறாம். இதுவே சிவனுக்குச் செய்யும் குற்றமாம். மேலும் சிவத்தை அறிவதற்கு உபாயம் யாது என்று மனம் கேட்க யாதொரு எண்ணமும் எழாமல் மனம் அசையாமல் நிற்குமேயானால் அதுவே மேன்மை பொருந்திய சிவனது திருவடிக்கு இன்பம் மிகுந்து அடையச் செய்யும் பூசையாம் என்று நிச்சயித்து அறிவாயே.

விளக்கம்

ஒரு உருவம் இல்லாத பரம்பொருளை, பலம், பத்திரம், புஷ்பம், திருமஞ்சனம் கொண்டு பூஜை செய்தேன். பூஜை செய்யவில்லை என்ற எண்ணமே மனச்சஞ்சலத்தை உண்டு பண்ணும். அதுவே சிவனது திருவடிக்குச் (பிரம்மத்திற்கு) செய்யும் தீங்காம். நினைவொன்றும் நினையாமல் இருப்பதே அகம்(பிரம்மநிலை) என்பர் மேலோர். அதனையே இங்கு நினைவும் அசைகிலை என்றார். இந்நிலையே சிவனது திருவடிக்குச் செய்யும் பூஜையாம்.

திருமஞ்சனம் - *அபிடேஷம், அர்ச்சனை*

உபாயம் - *மார்க்கம், வழி*

▲

Koviloor Digital Library

22. நீ மெய்ஞ்ஞான நன்னிட்டை சாருதல்
அரிது எனவும் நெஞ்சகமே சற்று
ஓய்விலாது செய் தியானமாதிகள் எளிது
எனவும் உன்னா நின்றாய்
சேய்கள் தம்மினத்தாய் கொல் சும்மா
இருக்குதல் செய்தற்கு அரிதாகிப்
போய் உழைப்பு உனக்கு எளியதாயிருந்த
இப்புதுமை யென் புகல் நின்றே.

இதன் பதப்பொருள்

நெஞ்சகமே நீ மெய்ஞ்ஞான நன்னிட்டை - *மனமே! நீ உண்மையான தத்துவ ஞானத்தினை மனம், வாக்கு, காயங்கள் அசைவின்றி நிச்சய புத்தியுடன்,* **சாருதல்** - *உறுதியாக இருத்தல்,* **அரிது எனவும்** - *கடினமான காரியம் எனவும்,* **சற்று** - *சிறிதும்,* **ஓய்விலாது செய்** - *இடைவிடாமல் உற்சாகத்துடன் செய்கின்ற,* **தியானமாதிகள்** - *தியானம், ஜபம், சிவபூசை முதலாயின* **எளிது எனவும், உன்னாநின்றாய்** - *கடைப்பிடிப்பது சுலபமானது எனவும் கருதுகின்றாய்,* **சேய்கள் தம் இனத்தாய் கொல்** - *தாய் தனது குழந்தையை நீராட்டி மலரணையில் இருக்க வைக்கவும் குழந்தையானது அங்கு இராமல் வெளியே வந்து வருந்துவதைப் போல,* **சும்மா இருக்குதல் செயற்கு அரிதாகி** - *மனமே! நீயும் அடங்கிச் சும்மா இருத்தல் செய்தற்குக் கடினம் என்று,* **போய் உழைப்பு உனக்கு** - *சும்மா இருக்குதலாகிய சுகத்தை விடுத்துப் போய், தியானாதிகளைக் கடைப்பிடித்தலாகிய காரியம் உனக்கு,* **எளிதாயிருந்த** - *எளிதாயிருக்கின்ற,* **இப்புதுமை யென்** - *இவ்விநோதம் யாது? என்று,* **புகல் நின்றே** - *நின்று பதில் கூறுவாய் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

மனமே! நீ மனம் வாக்கு காயங்கள் அசைவின்றி உண்மையான தத்துவ ஞானத்தில் நிச்சய புத்தியுடன் உறுதியாக இருத்தல் கடினமான காரியம் என்றும் சிரமத்துடன் இடைவிடாமல் உற்சாகத்துடன்செய்கின்ற தியானம், ஜபம், சிவபூசை மற்றும் ஆசார அனுஷ்டானங்கள் கடைப்பிடிப்பது சுலபமானது எனவும் கருதுகின்றாய்.

Koviloor Digital Library

தாயானவள் தனது குழந்தையை நீராட்டி மலரணையில் இருக்க வைக்கவும் அக்குழந்தை அங்கு சுகமாக இராமல் வெளியே எழுந்து வந்து ஓடிவிளையாடி வருந்துவதைப் போல மனமே நீயும் அடங்கி, சும்மா இருத்தலாகிய காரியம் செய்வதற்குக் கடினம் என்று கருதுகின்றாய். சும்மா இருத்தலாகிய சுகத்தை விடுத்துப்போய் தியானாதிகளைக் கடைப்பிடித்தலாகிய காரியம் உனக்கு எளிதாயிருக்கின்ற இப்புதுமை யாதோ? என்று யோசித்துப் பதிலளிப்பாய் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

தாயானவள் குழந்தையைக் குளிக்கச் செய்து மலரணையில் படுக்க வைத்துச் சுகமாய் இருக்கச் செய்யவும். அக்குழந்தையானது எழுந்து வந்து ஆங்கு இராமல் மண்ணில் புரண்டு அலைந்து திரிவதைச் சுகமெனக் கருதி அலைந்து துக்கத்தை அனுபவிப்பதைப் போல் ஆத்ம ஞானத்தில் நிச்சய புத்தியுடன் இருந்து சும்மா இருந்து சுகமாய் இராமல் தியானம் ஜபம் சிவபூசைகள் இவைகளைச் செய்து துக்கத்தைச் சுகம் எனக் கருதி ஈடுபடுவார்கள் என்பதைச் "சேய்கள் தம் இனத்தாய் கொல்" என்றார்.

மனம், வாக்கு, காயம் அசையாமல் நின்ற இடம் மெய்ஞ்ஞான நிஷ்டை என்றும் அவை அசைந்து செய்யும் தியான, சமாதிகள் அந்நிஷ்டை வருவதற்கு ஏது என்றும் அறிக.

"சொல்லும் பொருளும் அற்று சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலும் எனக்காசை பராபரமே"

என்றார் தாயுமானவர்.

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன்பிறவான் இறவான்
சும்மா விரு சொல்லற என்றது மற்று
அம்மா பொருளொன்று அறிந்திலேனே"

என்பது கந்தரனுபூதி.

▲

Koviloor Digital Library

23. நின்று உறாது அலைகுதல் விருப்பு உனக்கு
அதை நீத்திருக்குதல் நெஞ்சே
என்றனக்கு நல்விருப்பு வாளா இவண்
இருத்தல் தீது உயர் வீடு
சென்று காண்குவல் எனநினைந்து
அலைதியோ சிவம் திரிசியம் அன்றால்
ஒன்று நீயுனாது இருப்பதே அதைத் தொடர்
உபாயம் என்றறி கண்டாய்,

இதன் பதப்பொருள்

நின்று உறாது - *நில்லாது,* **அலைகுதல்** - *தியானாதிகளைக் கருதி அலைகுதல்,* **நெஞ்சே உனக்கு விருப்பு** - *மனமே! உன் விருப்பம்,* **அதை நீத்திருக்குதல்** - *அத்தியானாதிகளை விட்டு அலையாமல் சும்மா இருப்பதே,* **என் தனக்கு** - *எனக்கு,* **நல் விருப்பு** - *நல்ல விருப்பமாம்,* **வாளா இவண் இருத்தல்தீது** - *சும்மா இவ்விடத்தில் இருப்பது குற்றமாம்,* **உயர் வீடு சென்று** - *மேலான மோட்சத்தினை,* **காண்குவல் என நினைந்து** - *தியானம், ஜபம், சிவபூசை முதலிய நன்மார்க்கத்தில் சென்று அறிவோம் எனக்கருதி,* **அலைதியோ** - *அலைகின்றனையோ?* **சிவன் திரிசியம் அன்றால்** - *சிவமானது அறியப்படும் பொருளாய் இல்லாததால் அதனைத் தியானாதிகளால் அறியமுடியாது,* **ஒன்று நீயுனாது இருப்பதே** - *சிவத்தை அறிவதற்கு உபாயம் அணுவளவேனும் ஒன்றையும் நினையாது அசைவறச் சும்மா இருத்தலே,* **அதைத்தொடர்உபாயம்** - *சிவத்தை அறிதலாகிய மோட்சத்தினை அடைவதற்கு நேரான உபாயமாம்.* **என்று அறி** - *என அறிந்து கொள்வாயாக என்று விவேகம் கூறிற்று.* **கண்டாய்** : *முன்னிலை அசை*

பொழிப்புரை

மனமே! அசைவற்று நில்லாது தியானம், ஜபம், பூசைகளாதி செய்து அலைகுதல் உனக்கு விருப்பமாம். அத்தியானாதிகளை விட்டு அலையாமல் சும்மா இருப்பதே எனக்கு மேலான நல்ல விருப்பமாம் என்று விவேகம் கூறிற்று. இவ்விடத்தில்சும்மா இருந்து கொண்டே இருப்பது குற்றமாம் எனவும் மேலான மோட்சத்தினைத் தியானம் ஜபம், பூசை முதலிய நல்ல வழியினைக் கடைப்பிடித்து, சிவத்தை

Koviloor Digital Library

(பிரம்மம்) அறிவோம் எனவும் கருதி அலைகின்றனையோ? சிவமானது அறியப்படும்பொருளாய் இல்லாததால் அதனைத் தியானாதிகளால் அறிய முடியாது. சிவத்தை அறிவதற்கு உபாயம் அணுவளவேனும் ஒன்றையும் நினையாது அசைவறச் சும்மா இருத்தலே சிவத்தை அறிதலாகிய மோட்சத்தையடையும் நேரான உபாயமாம்(மார்க்கமாம்) என அறிந்து கொள்வாயாக என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

தியானம், ஜபம், பூசை ஆதிகளாகிய நற்கருமத்தினாலும் சிவத்தை அறிய முடியாது. சிவத்தை அறிவதற்கு உபாயம் நினைவொன்றும் நினையாமல் சும்மா இருப்பதுவேயாம்; நமக்குக் கண் இருப்பதை நம்முடைய கண்ணால் பார்க்க முடியாமல் உலகப்பொருட்களைக் கண்ணால் பார்த்து அறிவதனால் நமக்குக் கண் உள்ளது என்று எப்படித் தெரிந்து கொள்கின்றோமோ அதைப்போல ஆத்மாவானது அறிவு சொரூபமாக இருந்து மனதை அறிகின்றது. மனம் உலக விஷயங்களை அறிந்தாலும் ஆத்மாவை அறியாது. ஆத்மாவை அறிய முற்படும்போது மனம் இல்லாமல் போகின்றது. கண்ணாடி, சூரியனது பிரகாசத்தைப் பெற்றுக் கொண்டு கண்ணாடியிலுள்ள பிரதி பிம்ப சூரியன் வீட்டினுள் இருக்கும் இருளைப் போக்குகின்றது. அதுபோல மனம் ஆத்மாவினிடத்து அறிவுத் தன்மையைப் பெற்றுக் கொண்டு இந்திரியங்கள் மூலமாக உலகவிஷயங்களை அறிகின்றது. ஆத்மா அறிவு சொரூபம். மனம் இந்திரியங்கள் பிராணன் சடமாம்.

"அறிபடும்பொருள் நீயல்லை அறிபடாப் பொருள் நீயல்லை
அறிபொருளாகும் உன்னை அனுபவித்து அறிவாய் நீயே!"

என்பது கைவல்ய நவநீதம்.

அறிபடும் பொருள் - தேகாதி பிரபஞ்சம்

அறிபடாப் பொருள் - மனம், மாயை

அறிபொருள் - ஆத்மா - பிரம்மம்

▲

Koviloor Digital Library

24. கண்ட ஐம்புலக்காட்சி போய்க் காட்சியால்
கலந்த வாதனையாவும்
விண்டு மூடமற்று அலையிலாக் கடலென
விளங்கினை எனின் நெஞ்சே
உண்டு கொல் நமக்கு ஒருதுயர் ஆங்கு வீடு
உளங்கையில் கனியேயாம்
பண்டை மேவிய பயமெலாம் அறும்
குருபதத்திலும் புகலாமே.

இதன் பதப்பொருள்

கண்ட ஐம்புலக்காட்சி போய் - *ஐம்பொறிகளால் நுகரப்படுகின்ற சத்தாதி விஷயக்காட்சிகளும் போய்,* **காட்சியால் கலந்த** - *அந்த விஷயக்காட்சியினால் மனதின்கண் ஏறியிருந்த,* **வாதனையாவும் விண்டு** - *வாசனைகள் அனைத்தும் விட்டு நீங்கி,* **மூடமற்று** - *ஆத்மாவினை மறைப்பதாகிய ஆவரணம் இல்லாமல்,* **அலையிலாக் கடல் என** - *அலைகள் இல்லாத சமுத்திரம் போல,* **விளங்கினை எனில் நெஞ்சே** - *விளங்குகின்றனை என்றால் நெஞ்சமே,* **நமக்கு ஒரு துயர்கொல்** - *நமக்கு அப்போது பிறவித்துன்பங்களில் ஒரு துன்பமாயினும் இல்லை,* **ஆங்கு வீடு** - *அவ்விடத்து மோட்சமானது,* **உளங்கையில் கனியேயாம்** - *உள்ளங்கை நெல்லிக்கனி போல,* **உண்டு** - *உண்டாம்,* **பண்டை மேவிய** - *முன்னர் பொருந்தியிருந்த,* **பயமெலாம் அறும்** - *பிறவித்துன்பத்திற்குப் பயந்த அச்சம் எல்லாம் நீங்கும்,* **குருபதத்திலும் புகலாமே** - *குருதுரிய அவைத்தையாகிய பூமியை அடையலாம் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

ஐம்பொறிகளால் நுகரப்படுகின்ற(அனுபவிக்க) பஞ்ச விஷய காட்சிகளை அனுபவிக்காமல் விட்டு நீங்கி முன்பு அனுபவித்திருந்த அவ்விஷய காட்சியினால் மனதின்கண் ஏறியிருந்த வாசனைகள் அனைத்தும் விட்டு நீங்கி ஆத்மாவினை மறைப்பதாகிய ஆவரணம்(மறைப்பு) இல்லாமல் அலைகள் இல்லாத சமுத்திரம் போல விளங்குவாயானால் நெஞ்சமே நமக்கு அப்போது பிறவித்துன்பங்களில் ஒரு துன்பமாயினும் இல்லை.

Koviloor Digital Library

அவ்விடத்து மோட்சமானது உள்ளங்கை நெல்லிக்கனி போல் உண்டாம். முன்னர் பொருந்தியிருந்த பிறவித்துன்பத்திற்குப் பயந்த பயமெலாம் நீங்கும். மூன்று அவத்தைகள் தாண்டி துரிய அவத்தையாகிய துரிய பூமியை அடையலாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

ஐம்பொறிகளால் அனுபவியாமலும் முன் அனுபவித்து மனதின்கண் ஏறியிருக்கின்ற வாசனைகள் (மனப்பதிவுகள்) அனைத்தையும் விட்டும் ஆத்மாவினை மறைப்பதாகிய அஞ்ஞானம் இல்லாவிடின் அலைகள் இல்லாத கடல் போல விஷேபம் இல்லாமல் மனம் சாந்தமாய் விடும். நமக்கு யாதொரு துன்பமும் இல்லை. மோட்சத்தைக் கண்கூடாக அடையலாம். பிறவித்துன்பத்திற்குப் பயந்த பயமெலாம் நீங்கும். இதுவே துரிய அவத்தையாம். இதுவே சமாதி. சாக்கிரம், சொர்ப்பனம், சுழுத்தி என்ற மூன்று அவத்தையும் கடந்து பின்னுள்ள நான்காவது அவத்தையே துரியமாம். அதுவே குருபதமாம். அதுவே தூங்காமல் தூங்குவதாம். அதுவே நனவில் சுழுத்தியாம். அதுவே சமாதி நிலை.

"வினவில் பரத்தை அறிவுறுதற்கு அவத்தை
புலன்வினை மாறியே
நனவில் சுழுத்தி நிலைவரின் அப்பொருள்
திகழும் நலமாகவே"

என்கிறது சசிவர்ண போதம்.

ஐந்து அவத்தைகள் - நனவு (சாக்கிரம்), கனவு (சொப்பனம்), தூக்கம் (சுழுத்தி), துரியம், துரியாதீதம்.

குரு - 'கு' என்பது அஞ்ஞானம் 'ரு' என்பது ஞானம். அஞ்ஞானத்தை ஞான உபதேசத்தால் போக்குபவரே குரு ஆவார். **குருபதம்** - ஞான அனுபூதி நிலை, **விஷேபம்** - மனதின் சஞ்சலத்தன்மை; மனம் அலைதல்.

▲

Koviloor Digital Library

25. புகல் அரும் பரப்பிரமமாம் கடல்தனில்
புணர் பரைத்திரை ஈசன்
சகமொடு ஆர்உயிர் எனும் நுரை ஆதிகள்
தந்து மாற்றிடும் என்றே
பகரும் நான்மறை எனில் அதில் எதை
எதைப் பற்றுவாம் விடுகிற்பாம்
சுக சொரூபமே அனைத்தும் என்று அகற்றுதி
துவித பாவனை நெஞ்சே.

இதன் பதப்பொருள்

புகலரும் பரப்பிரமமாம் - *வாக்கு மனோதீதமாய் இருக்கின்ற பரப்பிரமமாகிய,* **கடல்தனில் புணர்** - *கடலில் சேர்ந்திருக்கின்ற,* **பரை திரை** - *பரந்து விரிந்துள்ள அலைகளில்,* **ஈசன் சகமொடு ஆருயிர் எனும்** - *ஈசுவரன் உலகம் ஜீவர்கள் எனப்படுகின்ற,* **நுரையாதிகள் தந்து** - *குமிழிகளாகத் தோன்றச் செய்து,* **மாற்றிடும் என்றே** - *ஒடுங்கச் செய்யும் என்று,* **பகரும் நான் மறை எனில்** - *நான்கு வேதங்களும் சொல்லுகின்றன என்றால்,* **அதில் எதை எதைப் பற்றுவாம் விடுகிற்பாம்** - *அக்கடலில் எந்த அலைகளைப் பற்றவோ எந்த அலைகளை விட்டு விடவோ முடியும்; அதைப்போல் ஜகசீவ ஈசுவராதிகளில் எதைப் பற்றுவது எதை விடுவது,* **அனைத்தும் சுக சொரூபமே என்று** - *அனைத்தும் ஆனந்த சொரூப பிரம்ம மயமே என்னும் நிச்சய ஞானத்தால்,* **நெஞ்சே துவிதபாவனை** - *நெஞ்சே அது இது என்னும் வேறுபடுத்தும் துவித (பேத) பாவனையை,* **அகற்றுதி** - *நீ நீக்குவாயாக.*

பொழிப்புரை

வாக்கு மனோதீதமாய் இருக்கின்ற பரப்பிரம்மமாகிய கடலில் சேர்ந்திருக்கின்ற பரந்து விரிந்துள்ள அலைகளின் கண் ஈசுவரன், உலகம், ஜீவர்கள் எனப்படுகின்ற குமிழிகளாகத் தோன்றச் செய்து ஒடுங்கச் செய்யும் என்று நான்கு வேதங்களும் சொல்லுகின்றன. அங்ஙனம் இருக்க அந்தக் கடலில் எந்த அலைகள் கடலைச் சார்ந்தது என்று பற்றவும் எந்த அலைகள் கடலுக்கு வேறானது என்று விடவும் முடியும். எல்லாம் கடலாகிய தண்ணீருக்கு

Koviloor Digital Library

அன்னியமாக இல்லை. அதைப் போன்று பரப்பிரம்மத்தில் தோன்றிய ஜக, சீவ, ஈசுவராதிகளில் எதை எனது என்று பற்றுவது? எதை எனது அல்ல என்று விடுவது? எனவே எதையும் பற்றவோ விடவோ முடியாது. எல்லாமே ஆனந்த சொரூப பிரம்மமயமே என்ற நிச்சய ஞானத்தால் நெஞ்சே அது என்றும் இது என்றும் பகுக்கும் துவித பாவனையை நீ நீக்குவாயே.

விளக்கம்

மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாத வஸ்து (பொருள்) பிரமமாம். மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாததை அதீதம் என்பர் மேலோர். கடலின்கண் தோன்றுகின்ற நுரை, அலை, குமிழி அனைத்தும் எங்ஙனம் கடலுக்கு அந்நியமாக இல்லையோ அங்ஙனம் பிரம்மத்(சிவம்) திலிருந்து தோன்றிய ஈசுவரன், ஜீவர்கள், உலகம் அனைத்தும் சிவத்திற்கு அந்நியமாய் இல்லை. சிவமயமாய் இருக்கின்றது. சிவம், சத்து, சித்து, ஆனந்த வடிவம். எனவே "சுக சொரூபமே அனைத்தும்" என்றார். எங்ஙனம் நுரை, அலை, குமிழி முதலியவைகள் கடலுக்கு வேறாக இல்லையோ அதைப் போன்று ஈசுவரன், ஜீவர்கள், பிரபஞ்சம் முதலிய அனைத்தும் பிரமத்திற்கு வேறாய் இல்லை என்பதனால் "துவிதபாவனை அகற்றுதி" என்றார் ஆசிரியர்.

சர்வம் பிரமமயமே சர்வமும் நான் என்பது வேதாந்த முடிவு. அதனையே "சுகசொரூபமே அனைத்தும்" என்றார்.

▲

26. நெஞ்சமே இனிப் பாவனாதீதமாய்
நின்றிடு இன்று எனில் நிற்பாய்
எஞ்சுறாது அகல் புரண பாவனையை
ஓர்ந்திலை எனில் உலகெல்லாம்
அஞ்சனக் களன் மேனியென்று ஓர்ந்திலை
எனின் அருள் சுரந்து எம்பால்
வஞ்சமற்றிடும் படிக்கும் இவண் அடைந்ததோர்
வடிவை ஓர்ந்து உய்வாயே.

Koviloor Digital Library

இதன் பதப்பொருள்

நெஞ்சமே இனிப் பாவனாதீதமாய் - நெஞ்சமே இனி ஒன்றையும் சுட்டியறியாமல் நினைவொன்றும் நினையாமல், **நின்றிடு** - இருப்பாயாக, **இன்று எனில்** - அங்ஙனம் இருப்பதற்குச் சாமர்த்தியம் இல்லை என்றால், **எஞ்சுறாது அகல் புரண பாவனையை** - (அணு, திரண, காஷ்ட முதலியவற்றினும்) குறைவுபடாது விரிந்த பரிபூரண பாவனையில், **ஓர்ந்து நிற்பாய்** - கருதி இருப்பாயாக, **இலை எனில்** - அங்ஙனம் இருப்பதற்குச் சாமர்த்தியம் இல்லை என்றால், **உலகெல்லாம்** - சடசித்தாய் விளங்குகின்ற இப்பிரபஞ்சமெல்லாம், **அஞ்சனக் களன்** - நீல நிறக் கழுத்தினையுடைய சிவனது, **மேனி என்று ஓர்ந்து** - அஷ்டமங்கல மூர்த்தமென்று கருதுவாய், **இலை எனில்** - அதற்கும் சாமர்த்தியம் இல்லை என்றால், **எம்பால் அருள் சுரந்து** - அடியேனிடத்து அச்சிவமே கிருபை கொண்டு, **வஞ்சமற்றிடும் படிக்கு** - மும்மலங்களும் நீங்கும் படிக்கு, **இவண் அடைந்த ஓர் வடிவை** - இப்பூமியின் கண் மானுட வடிவில் எழுந்தருளி வந்த ஒப்பற்ற குருமூர்த்தத்தை, **ஓர்ந்து** - தியானித்து, **உய்வாயே** - பிழைப்பாயாக.

பொழிப்புரை

நெஞ்சமே இனி ஒன்றையும் சுட்டி அறியாமல் (நினைவொன்றும் நினையாமல்) இருப்பாயாக. அங்ஙனம் இருப்பதற்குச் சாமர்த்தியம் இல்லையாயின் அணு திரண காஷ்டங்களிலும் பஞ்ச பூதங்களிலும் குறைவு படாமல் விரிந்த பரிபூரண சொரூபமாகிய பிரம்ம பாவனையில் இருப்பாய். அங்ஙனம் இருப்பதற்கு வலிமை இல்லையாயின் சடசித்தாய் விளங்குகின்ற இப்பிரபஞ்சமெல்லாம் திருநீலகண்டனாகிய சிவனது அஷ்டமங்கல மூர்த்தம் என்று கருதுவாயாக. அதற்கும் சாமர்த்தியம் இல்லை எனில் அடியேனிடத்து அச்சிவமே கிருபை கொண்டு மும்மலங்களும் நீங்கும்படிக்கு இப்பூவுலகின் கண் மானுடச் சட்டை சாத்தி எழுந்தருளி வந்த ஒப்பற்ற குருமூர்த்தத்தைத் தியானித்துப் பிறவிக் கடலிலிருந்து விடுபடுவாயாக என்று விவேகம் கூறிற்று.

Koviloor Digital Library

விளக்கம்

பிறவியிலிருந்து விடுபடுவதற்கு நான்கு உபாயங்கள் இச்செய்யுளில் அருளியிருக்கின்றார்.

1. *நினைவொன்றும் நினையாமல் துரிய நிலையில் (சமாதியில்) இருப்பது.*
2. *எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற பரிபூரண பிரம சொரூபமே என்று மேலான பாவனையில் இருப்பது.*
3. *எல்லாப் பிரபஞ்சமும் சிவனது அஷ்டமங்கல மூர்த்தமாய்ப் பாவிப்பது. அஷ்டமங்கல மூர்த்தம் என்பது ஆகாயம், வாயு, அக்கினி, நீர்; மண், சந்திரன்; சூரியன், ஜீவாத்மா என்பனவாம்.*
4. *சிவமே கிருபையினால் மானிட சரீரம் தாங்கி வந்து மும்மலமும் அறும்படிக்குக் குருவடிவமாக வந்த குரு மூர்த்தத்தை இடைவிடாது தியானிப்பது. "சற்குருவே மெய்யாக் கண்ட சிவம்" என்பது வேதாந்த சூடாமணி. இதில் ஏதேனும் ஒன்றையாவது அப்பியாசம் செய்தால் பிறவியிலிருந்து விடுபட்டுப் பிறவா நிலையாகிய மோட்சத்தை அடையலாம் என்பது கருத்து.*

அணு - *மிகமிகச் சிறியது*
திரணம் - *புல், செத்தை*
காஷ்டம் - *கட்டை*
பாவனை - *நினைத்தல்; தியானித்தல்*
மும்மலம் - *மலம், விசேபம், ஆவரணம்*

▲

27. உய்து நெஞ்சமே வாக்கினை மௌனமாக்கிலை
எனின் உளதே சொல்
மெய்தரும் சொலும் பொய் நயம் பயக்கிலா
இடத்தின் அது உடைத்தேனும்
பொய்தரும் சொல்யான் செய்தேன் பிறர் செய்தார்
எனின் அவை போனாலும்
மெய்தரும் சிவமன்று இது என்று ஒன்றை நீ
இசைத்தல் பொய்யெனத் தேரே.

Koviloor Digital Library

இதன்பதப்பொருள்

உய்தும் நெஞ்சமே - *மனமே! பிறவி சாகரத்திலிருந்து பிழைப்போம்,* **வாக்கினை மௌனம் ஆக்கு** - *நீ ஒன்றையும் வசனியாது மௌனமாய் இருப்பாய்,* **இலை எனின் உளதே சொல்** - *மௌனமாய் இருக்க இயலாவிடில் உண்மையே சொல்வாயாக,* **நயம் பயக்கிலா இடத்தின்** - *சீவர்களுக்கு நன்மை உண்டாகாத இடத்து,* **மெய்தரும் சொலும் பொய்** - *அவ்வுண்மை பேசுதலும் பொய்ம்மையாம்,* **அது உடைத்தேனும்** - *சீவர்களுக்கு நன்மை உண்டாகக்கூடிய உண்மையான வசனங்களாக இருந்தாலும்,* **பொய் தரும் சொல்** - *அதுவும் பொய்யான வார்த்தைகளாம்,* **யான் செய்தேன் பிறர் செய்தார் எனின்** - *எங்ஙனம் எனின் இருவினைக்குத் தகுந்தாற் போல இறைவன் நடத்துதலை விடுத்து நான் செய்தேன் பிறர் செய்தார் என்று சொல்லுதலும் பொய்மையாம்.* **அவை போனாலும்** - *அவைகள் சொல்லாமல் ஒழியினும்,* **மெய்தரும் சிவமன்று** - *உண்மையான சிவ சொரூப நிலை அது அல்ல,* **இது என்று ஒன்றை நீ இசைத்தல்** - *அது இது என்று ஒவ்வொன்றையும் வேறு பிரித்து நீ சொல்லுவதும்,* **பொய்யெனத் தேரே** - *பொய்மை என அறிதி என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

பிறவிசாகரத்திலிருந்து ஈடேற விரும்புகின்ற மனமே! நீ ஒன்றையும் வசனியாது (எதையும் பேசாது) மௌனமாய் இருப்பாய். அங்ஙனம் மௌனமாய் இருக்க இயலாவிடில் உண்மையே பேசுவாயாக. சீவர்களுக்கு நன்மை உண்டாகாத விடத்து அவ்வுண்மை பேசுதலும் பொய்ம்மையாம். மேலும் சீவர்களுக்கு நன்மை உண்டாகக் கூடிய உண்மையான வசனங்களாக இருந்தாலும் அதுவும் பொய்யான வாக்காம். எங்ஙனம் எனின் இருவினைக்கு ஏற்றாற் போல இறைவன் நம்மை நடத்துதலை அறியாமல் இருந்து கொண்டு யான் செய்தேன், பிறர் செய்தார் என்று சொல்லுதலால் அதுவும் பொய்ம்மையாம். அவைகளைச் சொல்லாது ஒழியினும் உண்மையான சிவசொரூப நிலை அது அல்ல. அது இது என்று ஒவ்வொன்றையும் வேறுபிரித்து நீ சொல்வதும் பொய்மையான வசனமாம். இதனை அறிந்து கொள் என்று விவேகம் கூறிற்று.

Koviloor Digital Library

விளக்கம்

1. உண்மையே பேச வேண்டும், 2. நன்மை உண்டாகாத விடத்து உண்மையும் பொய்ம்மையாம், 3. நன்மை உண்டாகக் கூடிய வசனங்களாக இருந்தாலும் அதுவும் பொய்ம்மையாம். 4. இருவினைக்கு ஈடாக ஈசுவரன் நடத்துவிப்பதால் அதை விடுத்து யான்செய்தேன், பிறர் செய்தார் என்று சொல்வதால்அதுவும் பொய்ம்மையாம். 5. சிவம் அறியப்படும் பொருளாக இல்லாததால் இது என்று சுட்டி அறிதல் என்பதுவும் பொய்ம்மையாம். இவைகள் அனைத்தும் சிவத்தை அறிவதற்குப் பிரயோஜனமாய் இராது. சிவத்தை அறிவதற்கு மௌனமாய் இருத்தலே சாதனம். முதலில் வாக்கு மௌனம். பின்பு மனோ மௌனம், வாக்கு மௌனம் மனோ மௌனத்தை அடைவிக்கும் (சேர்ப்பிக்கும்). எவ்வளவுக்கு எவ்வளவு பேச்சைக் குறைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மனம் அலைதலைக் குறைக்கலாம். ஒன்றும் பேசாதிருப்பது வாக்கு மௌனம் எனப்படும். மனம் அலையாமல் ஒரே பொருளைத் தியானிப்பது (நினைப்பது) மனோ மௌனம் எனப்படும். மோட்சமடைய மௌனமே சிறந்த உபாயம் என்பது கருத்து.

இச்செய்யுள் வாயிலாக வாக்கினால் வருவதனையும் வாக்கினை அடக்குவதனால் வரும் நன்மையையும் அருளியுள்ளார் ஆசிரியர்.

சாகரம் - *கடல்*

இருவினை - *நல்வினை, தீவினை*

▲

28. தேரின் இவ்வுடல் சமாதியில் அசைவறச்
சித்திர தீபம் போல்
சார வைத்திடு அஃது இல்லையேல்
குருபரன் தனது அரும்பணி மேற்கொள்
நேரும் ஊழ்வழி தொழில் பிறிது அடையினும்
நெஞ்சமே உயிர்க்கெல்லாம்
பேரிதம் செய்வித்திடு முடைகெழு
மலப்பிணக்கு இதம் செய்யேலே.

Koviloor Digital Library

இதன் பதப்பொருள்

தேரின் - *செய்ய வேண்டிய தொழிலை விசாரிக்குமிடத்து,* **இவ்வுடல்** - *இந்த உடம்பினை,* **அசைவறச் சித்திர தீபம் போல** - *சித்திரத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள தீபத்தினைப்போல,* **சமாதியில்சார வைத்திடு** - *ஞான சமாதியில் பொருந்தி வைக்கச் செய்,* **அஃது இல்லையேல்** - *அது இயலாவிடின்,* **குருபரன் தனது** - *குருபரனது,* **அரும்பணி மேற்கொள்** - *அரிதாகிய ஏவல் பணிவிடைகளைச் சிரசின் மேல் கொண்டு செய்வாய்,* **தேரும் ஊழ்வழி பிறிது தொழில்** - *அஃது இன்றிப் பழவினைப்படியே, வந்து பொருந்துகின்ற வேறு நற்கருமங்களை* **அடையினும் நெஞ்சமே** - *செய்ய வேண்டியிருந்தாலும் நெஞ்சமே,* **உயிர்க்கெல்லாம்** - *சராசர உயிர்க்கெல்லாம்,* **பேரிதம் செய்வித்திடு** - *பெரியதாய் நன்மையை இவ்வுடம்பால் செய்வித்தலைச் செய்வாய்.* **முடைகெழும்** - *தீய நாற்றம் பொருந்திய,* **மலப்பிணக்கு** - *அழுக்கு நிறைந்துள்ள இவ்வுடம்பாகிய பிணத்திற்கு,* **இதம் செய்யேலே** - *இனிமையை நீ செய்யற்க என்று விவேகம் கூறிற்று. ஏ - அசை.*

பொழிப்புரை

செய்ய வேண்டிய தொழிலை விசாரிக்குமிடத்து இந்த உடம்பினை, சித்திரத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள தீபத்தினைப் போல ஞான சமாதியில் அசைவின்றிப் பொருந்தி வைக்கச் செய்வாய். அதற்குச் சாமர்த்தியம் இல்லையாயின் குருவாகிய குருபரனது செய்வதற்கரிய பணிவிடைகளைச் சிரசின் மேல் கொண்டு செய்வாய். அஃது இல்லாமல் பழவினையின் பிரகாரம் வந்து பொருந்துகின்ற வேறு நற்கர்மங்களைச் செய்ய வேண்டி இருப்பின் நெஞ்சமே சராசர உயிர்க்கெல்லாம் நன்மையை அடையும் வண்ணம் இவ்வுடம்பால் செய்வித்தலைச் செய்வாய். தீய நாற்றம் பொருந்திய அழுக்கு நிறைந்துள்ள இவ்வுடம்பாகிய பிணத்திற்கு இனிமையை நீ செய்யற்க என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

தூல உடம்பினையும் சூட்சும உடம்பாகிய மனத்தினையும் சித்திரத்தில் எழுதப்பட்டுள்ள தீபமானது

Koviloor Digital Library

அசையாமல் இருப்பது போல் அசையாமல் ஞான சமாதியில் இருக்க வைக்க வேண்டும். ஞான சமாதி என்பது ஞானநிஷ்டை. அதாவது தேகத்தில் நான் என்கிற திடபுத்தி இருப்பது போல அந்த அபிமானத்தை விட்டு நீங்கி நான் பிரம்மமே என்ற திடபுத்தியுடன் இருப்பதாம்.

குருபரன் என்பது பரமகுரு. அதாவது ஆசாரியனுக்கு ஆசாரியன். ஆசாரியனுக்கு ஆசாரியன் இறைவன். இறைவனுக்குத் தொண்டு செய்தல் என்பது பூஜை, ஜபம், பக்தி, தியானம் இவைகளை அனுஷ்டிப்பதாம். பிராரப்த வசத்தால் கர்மம் செய்ய வேண்டியிருப்பின் எல்லாச் சராசர உயிர்களிடத்து நற்கர்மத்தினைச் செய்து நன்மையை உண்டாக்குதல் செய்வாய். அதனையே "பேர் இதம் செய்வித்திடு" என்றார். உடம்பினை நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள முயற்சி மேற்கொள்ளலாமே தவிர அழகுபடுத்தவோ வாசனைத் திரவியங்களைப் பூசவோ உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்து அழகுபடுத்தவோ போக போக்கியங்களை அனுபவிக்கவோ கூடாது என்பதனை "மலப்பிணக்கு இதம் செய்யேல்" என்றார். அவ்வாறு அழகுபடுத்தி வந்தால் தேகாத்ம புத்தி மேலோங்கும். பிரமமே நான் என்ற புத்தி வராது என்பதனால் அவ்வாறு செய்யக்கூடாது என்றார்.

சீவர்களிடத்து அருள், சிவபத்தி, திருந்திய துறவு, மெய்ஞ்ஞானம் இவை நான்கும் உடையவர்கள் ஞானிகள்.

அசைவறசித்திர தீபம்போல இருத்தல் - *மெய்ஞ்ஞானம்*

குருபரன் தனது அரும்பணி மேற்கொள்ளல் - *சிவபக்தி*

உயிர்க்கெல்லாம் பேர்இதம் செய்வித்தல் - *சீவர்களிடத்து அருள் (ஜீவகாருண்யம்)*

மலப்பிணக்கு இதம் செய்யாதிருத்தல் - *திருந்திய துறவு*

இந்நான்கினையும் இச்செய்யுளில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

சர உயிர் - *நகர்ந்து செல்லுகின்ற உயிரினங்கள்*

அசர உயிர் - *நிலையாக இருக்கின்ற உயிரினங்கள் (தாவரம்)*

சராசர உயிர் - *சர+அசர+ உயிர்*

பழவினை - *ஊழ்வினை* - *பிராரப்தம்*

▲

Koviloor Digital Library

29 . செய்யுநம் தொழில் ஐந்தொழில் யாமும்
அச்சிவனது வடிவு என்றே
ஐயம் அற்று உணராது யான் எனும் செருக்கடைந்து
நாள்தொறும் நெஞ்சே
நைவது என்னை நீ பஞ்ச கோசங்களும்
நாமல எனா உண்மை
கையில் ஆமலகம் என உனக்கு யான்
கழறியுந் தெளியாயே.

இதன் பதப்பொருள்

செய்யும்நம் தொழில் ஐந்தொழில் - *நாம் செய்கின்ற தொழில்கள் எல்லாம் சிவனது சிருஷ்டி முதல் ஐந்து தொழில்களில் அடங்குவனவாம்,* **யாமும் அச்சிவனது** - *யாமும் அச்சிவனது,* **வடிவு என்றே** - *அஷ்டமூர்த்தத்தில் ஒன்றாய் இருத்தலின் அச்சிவனது அங்கந்தானே என்று,* **ஐயம் அற்று உணராது** - *சந்தேகம் திரிவுகளின்றி நிச்சயம் பண்ணிக்கொள்ளாது,* **யான் எனும் செருக்கடைந்து** - *மயக்கத்தினால் சிவனுக்கு வேறாய் யான் உளன் என்று கருதி நான் எனது என்று அகங்காரம்மமகாரம் அடைந்து,* **நாள்தோறும் நெஞ்சே** - *எப்போதும் மனமே!* **நீ நைவது என்னை** - *நீ வருந்துவதற்கு யாது காரணம்?* **பஞ்ச கோசங்களும் நாமல எனா** - *மாயா காரியமாகிய அன்னமய முதல் ஐந்து கோசங்களும் நாமல்ல என்று,* **உண்மை கையில் ஆமலகம் என** - *இவற்றைக் கடந்திருக்கின்ற அறிவாகிய யாமே உண்மையான ஆத்மா என்று உண்மையான உபதேச மொழிகளால் உள்ளங்கை நெல்லிக்கனி போல,* **உனக்கு** - *பிரத்தியட்சமாக உனக்கு,* **யான் கழறியும்** - *யான் தெளிவாகக் கூறியும்,* **தெளியாயே** - *தெளிந்திலாய் என விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

நாம் செய்கின்ற தொழில்கள் எல்லாம் சிவனது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்து தொழில்களில் அடங்கியுள்ளது. எங்ஙனம்எனின் யாமும் சிவனது அஷ்டமங்கல மூர்த்தங்களுள் ஒன்றாய் இருத்தலின் அச்சிவனது அங்கந் தானே என்று சந்தேகம் விபரீதங்கள் இன்றி நிச்சயம் பண்ணிக் கொள்ளாது

Koviloor Digital Library

சிவனுக்கு வேறாய் யாம் உளன் என்று எண்ணிக் கொண்டு மயக்கமடைந்து யான் எனது என்று அகங்காரம் மமகாரம் அடைந்து நீ சதாகாலமும் மனமே! வருந்துகின்றனையே யான் என்ன சொல்ல என்று விவேகம் கூறிற்று. மேலும் மாயா காரியமாகிய அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ் ஞானமயம் ஆனந்தமயமாகிய இவ்வைந்தும் நானல்ல. இந்த ஐந்து கோசங்களையும் கடந்திருக்கின்ற அறிவாகிய யதார்த்த (பிரம்ம) நிலை என்று சத்தியமான உபதேச மொழிகளால் உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பிரத்தியட்சமாக (காணும் படியாக) உனக்கு யான் தெளிவாகக் கூறியும் தெளிந்திலாயே என விவேகம் கூறிற்று.

விளக்கம்

நான் செய்யும் காரியங்கள் நமது செயல்கள் அல்ல என்றும் சிவனது செயல்கள் என்றும் பஞ்ச கோசங்களும் நாமல்ல; இவற்றிற்கு வேறாகவும் அதை அறிபவனாயும் உள்ள அறிவு சொரூபமாகிய பிரம்மமே நாம் என்கிற கருத்தினை இச்செய்யுளில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர். உள்ளங்கையில் நெல்லிக்கனி எப்படி நன்றாக நமது கண்ணுக்குப் புலப்படுகிறதோ அவ்வாறே ஞானகுருவானவர் சிஷ்யனுக்குத் தனது வடிவத்தை உபதேசித்து அருளுவார் என்பதனை, "கையில் ஆமலகம்" என்றார் ஆசிரியர்.

கோசம் - மறைத்தல்; மூடிஇருத்தல்.

▲

30. தெளிவு உயிர்க்கு அரன் விளக்குதல் மயக்கு
அவன் திரோபவிக்குதல் தேகம்
விளிவை உற்றல் சங்காரம் இங்கு இதாகிதம்
மேவுதல் திதி தோற்றம்
உளசிருட்டியேல் அம்பை நோதலில்
உன்னையும் பிறரையும் நாடித்
தளர்வதும் மகிழ்வதும் அடைந்து உள்ளமே
சம்புவை மறந்தாயே.

Koviloor Digital Library

இதன் பதப்பொருள்

உயிர்க்கு, தெளிவுஅரன் விளக்குதல் - *ஜீவர்களுக்குத் தெளிவு உண்டாமாயின் அஃது சிவனது அனுக்கிரமாம்,* **மயக்கு அவன் திரோபவிக்குதல்** - *ஜீவர்களுக்கு மயக்கம் உண்டாமாயின் அஃது சிவனது மறைப்புத் தொழிலாம்,* **தேகம் விளிவை உற்றல் சங்காரம்** - *உடம்பு நாசமடையுமாயின் அஃது சிவனது சங்காரமாம்.* **இங்கு இதம்அகிதம் மேவுதல் திதி** - *உடம்புக்கு இன்ப துன்பங்கள் வந்து பொருந்துமாயின் அஃது சிவனது காத்தல் செயலாம்,* **தோற்றம்உள சிருட்டி** - *உடம்பு பிறக்குமாயின் அஃது சிவனது படைத்தல் தொழிலாம்,* **ஏல்** - *மேற்படியே நடக்குமானால்,* **அம்மை நோதலில்** - *எய்தவன் இருக்க அவனை விடுத்து எய்திய அம்பை நோவது போல்,* **உன்னையும் பிறரையும் நாடி** - *யான் செய்தேன் பிறர் செய்தார் என்று உன்னையும் பிறரையும் கருதிக் கொண்டு,* **தளர்வதும் மகிழ்வதும் அடைந்து** - *இருவினைக்கீடாக வந்து பொருந்துகின்ற சுகத்தினால் பூரிப்பும் துன்பத்தினால் வாட்டமும் அடைந்து,* **உள்ளமே** - *நெஞ்சமே!* **சம்புவை மறந்தாயே** - *சிவனது திருவடியை மறந்தாய் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

ஜீவர்களுக்குத் தெளிவு உண்டாமாயின் அஃது சிவனது அனுக்கிரகமாம். ஜீவர்களுக்கு மயக்கம் உண்டாமாயின் அஃது சிவனது மறைப்புத் தொழிலால் உண்டானது. உடம்பு நாசமடையுமாயின் அது சிவனது அழித்தல் தொழிலாம். உடம்பு இன்ப துன்பம் வந்து பொருந்துமாயின் அஃது சிவனது காத்தல் செயலாம். உடம்பு பிறக்குமாயின் அஃது சிவனது சிருட்டித் தொழிலாம். எய்தவன் இருக்க அவனை விடுத்து எய்திய அம்பை நோவது போலப் பஞ்சகிருத்தியங்களும் சிவனது தொழிலாக இருக்க யான் செய்தேன். பிறர் செய்தார் என்று உன்னையும் பிறரையும் எண்ணிக்கொண்டு அவர்களிடத்து விருப்பும் வெறுப்பும் அடைகின்றாய். இருவினைக்கு ஈடாக வந்து பொருந்துகின்ற சுகத்தினால் பூரிப்பும் துன்பத்தினால் வாட்டமும் அடைந்து நெஞ்சமே சிவனது திருவடியை மறந்தாய் என்று விவேகம் கூறிற்று.

Koviloor Digital Library

விளக்கம்

சீவர்களுக்கு ஆத்ம ஞானம் உண்டாவது ஞான குருவின் உபதேசத்தினால் தான். ஞான குரு கிடைப்பது சிவனது அருளினால்தான். அதனையே "தெளிவு உயிர்க்கு அரன்" என்றார். ஆத்ம ஞானத்தினால் மோட்சம் உண்டாம். ஆத்ம ஞானம் அடைவதற்கு ஈசுவர கிருபை, குருகிருபை, சாஸ்திர கிருபை, அந்தக்கரண கிருபை முதலிய கிருபை வேண்டும். முதலில் ஈசுவர கிருபை கிடைக்க வேண்டும். பின்பு மற்றவைகள் வந்து சேரும். சீவர்கள் அஞ்ஞானத்தில் இருப்பதற்குக் காரணம் சிவனது மறைப்பு சக்தியாம். அதனால் மறைக்கப்பட்ட சீவர்கள் பாவம், புண்ணியம், முன்பிறவி, மறுபிறவி, மோட்சம் இவைகள் இருக்கின்றன என்பதனையும் தன்னையறியும் அறிவையும் அறியவொட்டாமல் மறைக்கச் செய்வதாம்.

மயக்குதல், விளக்குதல் ஆகிய இரண்டும் ஜீவனுக்கு உண்டாகக் கூடியது. தூல தேகம் உண்டாதல் ஜீவனது பாவ புண்ணியத்தைப் பொறுத்து, சிவன் சிருஷ்டி செய்தலாம். ஜீவனது தூல உடலைக் காத்தல் அவர்களது பாவ புண்ணியத்தைப் பொறுத்துச் சிவனது காத்தல் தொழிலாம். ஜீவர்களது தூல சரீரத்தை அழித்தல் அவர்களது பிராரப்தத்தைப் பொறுத்துச் சிவனது சங்காரமாம். படைத்தல் காத்தல் அழித்தலாகிய இம்மூன்றும் சீவர்களது தூல சரீரத்தைப் பற்றியது. முன் பிறவிகளில் செய்த இருவினைக்கீடாக வருகின்ற இன்ப துன்பங்களுக்குக் காரணம் ஜீவர்களது கர்மமே. அங்ஙனம் இருக்க யான் செய்தேன், பிறர் செய்தார் என்று எண்ணுவது அறியாமையாம் என்பது கருத்து.

அகந்தை, அபிமானம், ஆசை, கோபம் இவைகள் அனைத்தும் சீவர்களது சிருஷ்டியாம்.

உலகத்தையும், சராசர உயிர்களையும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் சிவனது செயலாம்.

அகந்தை - நான் என்னும் அகங்காரம்
அபிமானம் - எனது என்கிற பற்று
அனுக்கிரகம் - கிருபை, அருள்

▲

Koviloor Digital Library

31. மறைத்தலும் நினைத்தலும் செயும் ஆணவமாயை
நின்று அவை தம்மைத்
துறத்தலே இராப்பகல் அகல் வீடெனச்
சொல்வர் அத்துறவு எய்தக்
குறித்திடில் பரபத்தி ஞானத்தினால்
கூடும் மற்றவை நெஞ்சே
நிறத்த பத்தி நம் செயல் அறின் நாம்
அறில் நின்ற மற்று ஒன்றாமே.

இதன் பதப்பொருள்

மறைத்தலும் நினைத்தலும் நின்று செயும் - *தமோ குணமாகிய மறைப்பையும் ரஜோ குணமாகிய நினைப்பையும் கொடுக்கக் கூடியது,* **ஆணவம் மாயை** - *ஆணவமும், மாயையுமாம்,* **அவை தம்மை** - *அவ்விரண்டையும்,* **துறத்தலே** - *நீத்தலே,* **இராப்பகல் அகல்** - *இரவும் பகலும் அற்ற,* **வீடு எனச் சொல்வர்** - *மோட்சம் என்று சொல்வர்,* **அத்துறவு எய்த** - *ஆணவத்தையும் மாயையையும் துறப்பதற்கு,* **குறித்திடில்** - *உபாயம் யாதெனின்,* **பரபத்தி ஞானத்தினால் கூடும்** - *பரபத்தி பரஞானத்தினால் கைகூடும்,* **மற்ற அவை நெஞ்சே** - *பரபத்தி, பரஞானம் யாதெனின் நெஞ்சே,* **நிறத்த பத்தி** - *சீர்மையான பரபத்தி என்பது,* **நம் செயல் அறில்** - *எல்லாம் சிவன் செயல் என நாடி நமது செயல் அற்றுப்போதல்,* **நாம் அறில் நின்ற மற்றொன்று ஆம்** - *மேற்படி போதமும் அறுமாயின் அதுவே நின்ற பிறிதொன்றான பரஞானமாம்.*

பொழிப்புரை

தமோ குணமாகிய மறைப்பையும் ரஜோ குணமாகிய நினைப்பையும் கொடுக்கக் கூடியது மாயையும் ஆணவமுமாம். அவ்விரண்டையும் நீத்தலே இரவும் பகலும் இல்லாத மோட்சம் என்று சொல்வர் பெரியோர். ஆணவத்தையும், மாயையையும் நீக்குவதற்கு உபாயம் யாதெனின் பரபத்தி பரஞானத்தினால் கைகூடும். பரபத்தி என்பது யாதெனின் நெஞ்சே எனது செயல் யாதொன்றும் இல்லை என்றும் எல்லாம் சிவனது செயல் என்றும் உணர்வது. அவ்வாறு சிவன் செயல் என்று உணர்ந்த போதமும் அற்றுப்போவதே பரஞானம் என்று பெயர்.

Koviloor Digital Library

விளக்கம்

தனது உண்மையான நிலையைத் தெரியாமல் இருக்கப் பண்ணுவது மாயையாம். தேகம் நான் என்பது அகந்தையாம். உலகப்பொருள்கள் எனது என்கிற அபிமானம் ஆணவமலமாம். "இராப்பகல் அகல் வீடு" என்பது தூங்காமல் தூங்குவது என்ற நிலையாம். அதுவே துரியமாம். துரிய நிலை (சமாதி) அடைந்தால் மோட்சமாம்.

ஆணவத்திலிருந்து விடுபட எல்லாம் சிவனதுசெயல் எனது செயல் யாதொன்றும் இல்லை என்ற பரபத்தியினால் கூடும். உலகவிஷயங்களில் செல்லுகின்ற மனதைத் திருப்பிப் பிரம்மாகார விருத்தியில் செலுத்தினால் மாயையிலிருந்து விடுபடலாம். இதனையே பரஞானம் என்பர் மேலோர்.

▲

32. **ஒன்றும் நம் செயல் இல்லை நெஞ்சே**
இவண் ஓர் மயல் அதனாலே
சென்று சென்று வெம்பவக்கடல்
மூழ்கினம் செறிமயல் ஏதென்ன
நன்று நீ வினாவினை இரு வினையையும்
நான் செய்தேன் எனும் மானம்
என்று அறிந்திடு ஈது ஒன்றையும் மாற்றினை
எனின் உனக்கு இணையாரே.

இதன் பதப்பொருள்

நெஞ்சே ஒன்று நம் செயல் இல்லை - *நெஞ்சே உண்மையாக விசாரித்துப் பார்க்குமிடத்துச் சிவனது செயலேயன்றி நம்செயல் ஒன்றாயினும் இல்லை,* **இவண் ஓர் மயல் அதனாலே** - *இவ்விடத்து ஒரு மயக்கத்தினாலே சென்று சென்று வெம்பவக்கடல் போய்ப்போய்க் கொடிய பிறவியாகிய துக்க சமுத்திரத்தின் கண்,* **மூழ்கினம்** - *மூழ்கினோம் என்று விவேகம் கூறிற்று,* **செறிமயல் ஏதுஎன்ன** - *நெருங்கிய மயக்கம் என்றால் யாது? என்று மனம் கேட்க,* **நன்று நீ வினாவினை** - *நன்றாய் நீ கேட்டாய்!* **இரு வினையையும் நான் செய்தேன்** - *நல்வினை தீவினையாகிய இரண்டையும் நான் செய்தேன்,* **எனும் மானம் என்று அறிந்திடு** - *என்கிற*

Koviloor Digital Library

அபிமானமே மயக்கம் என்று அறிந்து கொள்வாய், **ஈது ஒன்றை மாற்றினை எனின்** - நான் செய்தேன் பிறர் செய்தார் என்ற அபிமானங்களை நீக்குவாயாயின், **உனக்கு இணையாரே** - உனக்கு யார் உவமையாவர் என்று கூறிற்று. **ஏ** - அசை

பொழிப்புரை

நெஞ்சமே உண்மையாக நன்கு விசாரித்துப் பார்க்குமிடத்துச் சிவனது செயலேயல்லாமல் நம் செயல் ஒன்றாயினும் இல்லை என்றும் இவ்விடத்துப்போய்ப் போய்க் கொடிய பிறவிக்கடல் போன்றுள்ள துக்கத்தில் மூழ்கியது யாது காரணம் எனில் தன்னை அறியாத மயக்கமாகிய அஞ்ஞானத்தினால்தான் என்று விவேகம் கூற, மயக்கம் என்றால் என்ன? என்று மனம் கேட்க, நன்றாய் நீ கேட்டாய்! நல்வினை தீவினையாகிய இரண்டையும் நான் செய்தேன் என்ற அபிமானமே அம்மயக்கம் என்று அறிந்திடு. அபிமானத்தை விடுவாயாகின் மனமே உனக்கு யார் சமமாவர்? யாரும் இல்லை. நீயே மேலானவன் என்று விவேகம் கூறிற்று. அபிமானத்தை விட்டு விட்டால் பிறவா நிலையாகிய மோட்சத்தை அடையலாம்.

விளக்கம்

எல்லாம் சிவன் செயல் என்றால் ஏழுவகைப் பிறவி எடுப்பதற்கு யாது காரணம் என்று மனம் வினவ, மயக்கத்தினால் தான் பிறவி உண்டாகிறது என்று விவேகம் கூறிற்று. மயக்கத்திற்குக் காரணம் அபிமானமே. அபிமானம் என்றால் நான் எனது என்ற அகங்காரமும் மமகாரமுமாம். மனிதர்கள் எல்லோரும் நான் இவனுக்கு நல்லது செய்தேன் என்றும், பிறர் எனக்குக் கெடுதல் செய்கின்றனர் என்றும், தான் செய்கின்ற கெடுதலைப் பிறருடைய தீவினையால் செய்ய வேண்டியதாயிற்று என்றும் பிறர் தனக்குச் செய்கின்ற நல்லதை என்னுடைய புண்ணியத்தினால் பிறர்மூலம் கிடைத்தது என்றும் நினைக்கின்றனர். அகந்தை, அபிமானம், கோபம் ஆசைகள் இவைகள் ஜீவனது செயல்கள். இவைகளால் கிடைக்கும் பலன்கள் அவரவர் செயலினால் உண்டானவை. மற்ற பலன்கள் அனைத்தும் முன்வினைப் பயனாக ஜீவர்களுக்குக் கிடைக்கின்றன.

Koviloor Digital Library

தான் செய்த நல்ல காரியம் நம்மால் என்றும், தான் பிறர்க்குச் செய்த தீய காரியம் பிறரது முன்வினைப்பயன் என்றும், பிறர் தனக்குச் செய்த தீய காரியம் பிறரால் என்றும், பிறர் தனக்குச் செய்த நல்ல காரியம் நமது முன்வினைப் பயனால் என்றும், அஞ்ஞானிகள் நினைக்கின்றனர்.

துக்கத்திற்குக் காரணம் ஆசை. ஆசைக்குக் காரணம் அபிமானம். அபிமானத்திற்குக் காரணம் அஞ்ஞானம். அஞ் ஞானத்திற்குக் காரணம் தன்னைப் பற்றி அறியாமை. அஞ் ஞானமாகிய மயக்கம் ஆத்ம ஞானத்தினால் போமாயின் துக்கமில்லாமல் ஆனந்தமாயிருக்கலாம் என்பது கருத்து.

▲

33. இணையில் ஞானபூரணன் முழுது உணர்ந்து
அமைத்திட்டவாறு அலது இங்கே
அணைவு உறாது ஒருதீது எமக்கு
அவன்தரின் ஆர் தடுப்பவர் நெஞ்சே
பணைகொள் தாவரம் மானம் இன்மையின்
உருப்பற்றி நின்றில கொல்லோ
உள்நைவு உறாது உடல் காவல்
கைவிடுதி ஊழ் உள்ளவா விடாது என்றே.

இதன் பதப்பொருள்

இணையில் ஞானபூரணன் - *தனக்கு நிகர் தன்னையே யன்றி ஒருவரும் இல்லாதவரும் ஞானவடிவானவனுமாகிய பரிபூரணனான சிவன்,* **முழுதும் உணர்ந்து** - *நாம் முன் சென்மங்களில் செய்த நல்வினை தீவினை எல்லாவற்றையும் உணர்ந்து,* **அமைத்திட்டவாறு** - *அவ்வினைக்கேற்ப இன்ன காலத்து இந்த வினைப்பயனை அனுபவிக்க ஜீவர்களுக்கு வகுத்துத் தந்தவாறு,* **அலது இங்கே** - *அல்லாமல் இவ்விடத்து,* **அணைவுறாது** - *யாராலும் நன்று தீதாகிய எதுவும் வந்து சேராது,* **ஒருதீது எமக்கு** - *நாம் முன்பிறவியில் செய்த தீவினையின் பலனாகத் துன்பத்தை எமக்கு,* **அவன் தரின்** - *சர்வக்ஞனாகிய சிவன் கொடுப்பானாகில்,* **ஆர் தடுப்பவர்** - *அந்தத் துன்பத்தை யாரால் தடுத்து நிறுத்த முடியும்,* **பணைகொள் தாவரம்** - *கிளைகளைத் தாங்குகின்ற*

Koviloor Digital Library

தாவர உயிர்கள், **மானமின்மையின்** - தமது உடம்பு மேல் அபிமானமின்றி இருந்து கொண்டே, **உருப்பற்றி நின்றில கொல்லோ** - அவ்வுடம்புகளோடும் கூடி நிற்கின்றன அல்லவா! **ஊழ் உள்ளவாறு விடாது என்று** - பழவினைப்படி உள்ளபடியே வந்தே தீரும் என்று கருதி, **உள் நைவு உறாது** - மனமே மெலிவுறாது, **உடல் காவல் கைவிடுதி** - உடம்பினைக் காப்பதையும் கைவிட்டு விடுவாய் என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

தனக்குத் தானே நிகராகவும் தனக்கு நிகராக வேறு ஒருவரும் இல்லாதவனும் ஞானவடிவு ஆனவனும் பரிபூரணனாகிய சிவன் அவரவர் முன் சென்மங்களில் செய்த நல்வினை தீவினை எல்லாவற்றையும் உணர்ந்து அவ்வினைக்கேற்ப இன்ன காலத்து இந்த வினைப்பயனை அனுபவிக்க ஜீவர்களுக்கு வகுத்துத் தந்தவாறு அல்லாமல் இவ்விடத்து வேறு எந்த ஒரு தெய்வத்தினாலும் மனிதர்களாலும் விலங்குகளாலும் சடப்பொருள்களினாலும் நன்று தீது யாதும் வந்து சேரமாட்டாது. அவரவர் முன்பிறவிகளில் செய்த தீவினையின் பலனாகத் துன்பத்தை அவரவர்க்கு, சர்வக்ஞனாகிய சிவன் தருவானாகில் நெஞ்சமே! அந்தத் தீவினையின் வழியாய் வந்த துன்பத்தை யாரால் போக்கிக் கொள்ள முடியும். யாரால் தடுத்து நிறுத்த முடியும். கிளைகளைத் தாங்குகின்ற தாவர உயிர்கள் தமது உடல்கள் மேல் அபிமானமில்லாமலும், காத்துக்கொள்ளாமலும் இருந்து கொண்டே அவ்வுடல்களோடும் வாழந்து கொண்டு இருக்கின்றன அல்லவா! அதுபோன்று நெஞ்சமே நீயும் உள்ளம் வருத்தமடையாது முன் செய்த வினைப்படியே உள்ளவாறு வரும் என்று கருதி உடம்பினைக் காப்பதையும் கைவிட்டு விடுவாய் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

1. அவரவர் முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினைக்கேற்றவாறு அதற்கான பலன்களைச் சிவன் தருகின்றார். 2. இம்மானிடப்பிறவியில் செய்கின்ற நல்வினை தீவினைக்கேற்ற பலன்களை அடுத்தடுத்த பிறவிகளில் சிவன் கொடுப்பார். 3. விசாரித்துப் பார்க்குமிடத்து அனைத்துப் பலன்களுக்கும் (இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி,

Koviloor Digital Library

மானம், அவமானம் முதலிய பலன்கள்) ஜீவர்களே காரணம் சிவன் அல்ல. 4. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் முதலியன சீவர்களது செயல்களே. சிவன் செயல் அல்ல. இதனால் வரும் பலன்களும் சீவர்களைச் சாரும்.

5. இரு வினைகளால் வரும் இன்ப துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருந்தாலும் சிவனைப் பக்தி செய்வதால் அதற்கான பலன்களைக் குறைக்கலாம். வேலைக்காரனுக்கு ஏற்ற ஊதியத்தை முதலாளி கொடுத்தாலும் தனக்கு விசுவாசமாகவும் முதலாளியின் சொத்துக்களைக் காப்பாற்றுவானாகவும் இருந்தால் முதலாளி அதிகமாகப் பணம் கொடுப்பதைப்போல் சிவனும் சீவர்களுக்குப் பக்தி செய்யுமிடத்து அனுக்கிரகம் பண்ணுவார்.

▲

34. என்றும் வீடு அடைந்தவர் இறுமாக்க யான்
இறப்பை விட்டு அகலாமல்
நின்றுதான் தலை சாய்க்கவோ நெஞ்சமே
நினைத்துணையாக் கொண்டு
நன்று நீ இதற்கு என் செய்கேன் சாவனோ
நான் எனல் இலை ஆனால்
ஒன்று செய் மலக் குடில் இதில் அவாவை
நீக்கு உமாபதி தரும் வீடே.

இதன் பதப்பொருள்

என்றும் வீடு அடைந்தவர் - எக்காலத்தும் மோட்சமடைந்த பெரியோர், **இறுமாக்க** - பேரானந்தத்தோடு இருந்து கொண்டிருக்க, **யான் இறப்பை விட்டு அகலாமல்** - நான் பிறப்பையும் இறப்பையும் விட்டு நீங்காமல், **நெஞ்சமே நினைத்துணையாகக் கொண்டு** - மனமே! உன்னைத் துணையாக வைத்துக் கொண்டிருந்தும், **நின்றுதான் தலை சாய்க்கவோ** - நின்று கவலைப்பட்டுக் கொண்டு துன்பப்படவும் தலை குனிந்து வாழவும் வைத்தாயே. **நன்று நீ இதற்கு** - விவேகமே! நீ நல்ல விஷயத்தினைக் கூறினாய்; அதற்கு, **என் செய்கேன் சாவனோ?** - நான் என்ன செய்ய வேண்டும் அல்லது நான் சாகவா? என்று மனம் கேட்க, **நான் எனல் இலையானால்**

Koviloor Digital Library

- உடம்பின்கண் நான் என்ற அபிமானத்தை விட்டுவிடு. அங்ஙனம் அபிமானத்தை விடமுடியாதாகில், **ஒன்று செய்** - ஒரு காரியம் செய்வாய்; அது யாது எனில், **மலக்குடில் இதில் அவாவை நீக்கு** - மலம்நிறைந்த குடிசையாகிய இவ்வுடலின்கண் ஆசையை விட்டு விடு, **உமாபதி தரும் வீடே** - உமை (உமாதேவி) க்குப் பதியாகிய சிவன் வீட்டினைத் தருவான் என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

எக்காலத்தும் மோட்சமடைந்த பெரியோர்கள் பேரானந்தத்தோடும் கம்பீரமாகவும் இருந்து கொண்டிருக்க நான் பிறப்பையும் இறப்பையும் விட்டு நீங்காமல் மனமே! உன்னைத் துணையாக வைத்துக் கொண்டிருந்தும் நின்று கவலைப்பட்டுக் கொண்டும் துன்பப்படவும் சாகவும் பிறக்கவும் செய்து தலைகுனிந்து வாழவும் வைத்தாயே என்று விவேகம் கூறிற்று. அதற்கு மனம் விவேகமே! நீ இந்த நல்ல உண்மையான விஷயத்தினைக் கூறினாய். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? அல்லது சாகவா? சொல்லுகின்றாய் என்று வினவியது. அதற்கு விவேகம் உடம்பின் கண் நான் என்ற அபிமானத்தை விட்டுவிடுவாயாக. அங்ஙனம் அபிமானத்தை விடமுடியாதாகில் ஒரு காரியம் செய்வாய். அது யாதெனில் மலம் நிறைந்த குடிசையாகிய இவ்வுடலின் கண் வைத்த ஆசையை விட்டுவிடு. அங்ஙனம் விடுவாயாகின் உமாதேவிக்குப் பதியாகிய சிவன் மோட்சத்தினைத் தருவான் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

உடம்போடு இருக்கும் போது, இருக்கும் ஜீவன் முத்தி தசையிலும் உடம்பு அழிந்த பின்பு இருக்கும் விதேக முத்தியிலும் ஞானமடைந்த பெரியோர் ஆனந்தத்தோடு இருப்பர். ஞானமடையாத சிறியோர் துன்பப்படவும் பிறவிச்சூழலில் சுழன்று கொண்டிருப்பர் என்றும் தலைகுனிந்து வாழ்வர் என்றும் வருவிக்கப்பட்டது. மோட்சமடைவதற்கு உபாயம் தேகத்தில் நான்என்ற அபிமானத்தை (தேகாத்ம புத்தியை) விட்டு விட வேண்டும். அல்லது மலப்பாண்டமாகிய உடம்பின்கண் ஆசையை

Koviloor Digital Library

விட்டு விட வேண்டும். அதாவது உடம்பினுக்கு அவசியமற்ற அழகுப் பொருள்களிடத்தும் போகப் பொருட்களிடத்தும் ஆசையை விட்டுவிட வேண்டும். அப்போது சிவன் நமக்கு ஞானத்தை அடைவிக்கச் செய்து மோட்சத்தினை அடைவிப்பார். வைராக்கியமாகிய பற்றற்ற நிலையை அடைந்தால் சிவனது அனுக்கிரகம் கிடைக்கும். அவரது அனுக்கிரகத்தால் ஞான சற்குரு வாய்ப்பார். ஞான சற்குருவின் ஞான உபதேசத்தால் ஞானம் உண்டாம். அதனையே உமாபதி தரும் வீடு என்றார்.

விவேகமே! நீ சொல்வதெல்லாம் நான் கேட்டு நடந்து கொண்டு இருந்தும் இன்னமும் என்னைக் குறைப்பட்டுக் கொண்டிருக்கிறாயே என்ற ஆதங்கத்தினால் "சாவனோ" என்று மனம் வருத்தப்பட்டுக் கூறியது.

▲

35 . வீடு கூட்டுவான் குறித்து அதில் நிமித்தமா
விமலன் ஈதலின் நம்பால்
கூடுமாயையை எனது யான் என
எணிக்கொள்வது என் பயம் ஆசை
நாடு போழ்து இவை சுழுத்தியில் புரந்தவன்
எவன் அவன் நனவாதி
யூடும் ஊழ்வழி புரப்பன் என்று உள்ளமே
உடல்கைவிட்டு இருப்பாயே.

இதன் பதப்பொருள்

வீடு - (*ஆணவத்தான்மறைப்பட்டிருந்த எம்மை இவ் இருளை நீக்கி வீட்டின்பத்தைத் தரல் வேண்டும் என்று யாம் கேளாதிருக்கவும் தனது காருண்யத்தால்*) முத்தியினை, **கூட்டுவான்** - அடைவித்தல் பொருட்டு, **குறித்து** - (*தன் திருவுள்ளத்*) தெண்ணி, **அதின்** - அவ்வீடு அடைதற்குரிய, **நிமித்தம் ஆ(க)** - ஏதுவாக, **விமலன்** - நின்மலனாகிய சிவன், **ஈதலின்** - (*மாயையில் தனு கரண புவன போகங்களைக்*) கொடுத்தலின், **நம்பால்** - அதனால் நம்மிடத்து, **கூடும்** - (*வந்து*) பொருந்தும், **மாயையை** - அம் மாயா காரியங்களை, **எனது யான் என** - அங்ஙனம் இருக்க

Koviloor Digital Library

அதனிடத்து ஜீவர்கள் தனு கரணங்களை நான் என்றும் புவன போகங்களை எனது என்றும், **எணிக்கொள்வதென்** - அபிமானம் வைத்துக்கொண்டிருப்பதும், **பயம் ஆசை** - தேக போகங்கள் நீங்கும் என்ற பயமும் இவைகள் இருக்க வேண்டும் என்ற ஆசையும் நீ வைத்திருப்பது என்னை? **நாடு போழ்து** - நன்கு விசாரித்துப் பார்க்குமிடத்து, **இவை சுழுத்தியில்** - இத்தேகத்தைத் தூக்கத்தில் நீ அபிமானியாது பாதுகாக்காமல் இருக்கவும், **புரந்தவன் எவன்** - காப்பாற்றிக் கொண்டிருப்பவனாகிய அச்சிவனே, **நனவாதி யூடும்** - நீ அபிமானம் கொண்டிருக்கின்ற கனவு அவத்தைகளிலும், **ஊழ்வழி** - ஜீவர்களது பிராரப்தப்படியே, **புரப்பன் என்று** - காப்பாற்றிக் கொண்டு வருகிறான் என்று, **உள்ளமே** - நெஞ்சமே, **உடல்கைவிட்டு இருப்பாயே** - இத்தேகத்தைக் காத்தல் கைவிட்டு இருப்பாயே என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

நிமித்த காரணனாகிய சிவன் மாயையினால் தனு கரண புவன போகங்களை ஜீவர்களுக்குப் படைத்தனன். ஜீவர்கள் போகத்தை அனுபவிக்கவும் மோட்சத்தை அடையச் செய்யும் பொருட்டுப் படைத்தருளினன். அங்ஙனம் இருக்க ஜீவர்கள் தனுகரணங்களை நான் என்றும் புவனபோகங்களை எனது என்றும் அபிமானம் வைத்துக் கொண்டிருப்பதும் தேக போகங்கள் நீங்கும் என்ற பயமும் இவைகள் இருக்க வேண்டும் என்ற ஆசையும் நீ வைத்திருப்பது யாது காரணம்? நன்கு விசாரித்துப் பார்க்குமிடத்து இத்தேகத்தைத் தூக்கத்தில் நீ அபிமானியாது பாதுகாக்காமல் இருக்கவும் காப்பாற்றிக் கொண்டிருப்பவனாகிய அச்சிவனே நீ அபிமானம் கொண்டிருக்கின்ற நனவு கனவு அவஸ்தைகளிலும் ஜீவர்களது தம்தம் பிராரப்தப்படியே காப்பாற்றிக் கொண்டு வருகின்றான் என்று நெஞ்சமே இத்தேகத்தைக் காத்தல் கைவிட்டிருப்பாயே என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

ஜீவர்கள் பிறப்பதற்குக் காரணம் மூன்று.

1. மாயை உபாதான காரணம்
2. ஈசுவரன் நிமித்த காரணம்

Koviloor Digital Library

3. *ஜீவர்களது சஞ்சித வினைகள் துணைக்காரணம்*
குடத்திற்கு மண் உபாதான காரணம்
குடத்திற்குக் குயவன் நிமித்த காரணம்
குடத்திற்குத் தண்டு சக்கரம் முதலியன துணைக் காரணம்
தனு - உடம்பு - சரீரம்
கரணம் - இந்திரியங்கள் அந்தக்கரணம்
புவனம் - உலகம்
போகம் - சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்

▲

36. இருப்பை நாள்தொறும் நெஞ்சமே சுகாசுகம்
எதுவரும் அதுவேயாய்ப்
பொருப்பு வில்லிதாள் விருப்பம் எவ்வினையினைப்
புசிக்கும் ஞான்று அடைவாயோ
கருப்பை உற்று உதித்து அறல் குமிழியின்
அழிகாயம் ஈது உள போழ்தே
குருப்பிரான் திருக்கழற்கு மெய் அன்பு
நீ கொள்ளல் தெள்ளிமையாமே.

இதன் பதப்பொருள்

நாள்தொறும் நெஞ்சமே - *எக்காலமும் நெஞ்சமே,* **இருப்பை** - *சஞ்சித கர்மங்களினால் வருகின்ற,* **சுகஅசுகம்** - *சுகத்தையும் துக்கத்தையும்,* **எதுவரும்** - *எவ்வப்பொழுது எதுவருமோ அவ்வப்பொழுது,* **அதுவேயாய்** - *பாவத்தினால் துக்கத்தையும் புண்ணியத்தினால் சுகத்தையும் அனுபவித்து அதன் வடிவாய் இருக்கின்றாய்,* **எவ்வினை புசிக்கும் ஞான்று** - *இருவினைகளையும் விட்டு எந்த வினையை அனுபவிக்கும் போது,* **பொருப்பு வில்லிதாள்** - *மேருமலையை வில்லாக உடைய சிவனுடைய திருவடியை,* **விருப்பம் அடைவாயோ** - *அடைய வேண்டும் என்று விருப்பம் உண்டாகக் கூடும்?* **கருப்பை யுற்று** - *கருப்பாசயத்தின்கண் வினைக்கேற்ப வந்து பொருந்தி பத்து மாதங்கள் இருந்து,* **உதித்து** - *பிறந்து,* **அறற்குமிழியின்** - *நீர்க் குமிழி போன்று,* **அழிகாயம் ஈது** -

Koviloor Digital Library

விரைவில் அழியக்கூடிய இச்சரீரம், **உளபோழ்தே** *- இருக்கும் போதே,* **குருப்பிரான்** *- சற்குருவினது,* **திருக்கழற்கு** *- திருவடிக்கு,* **மெய்யன்பு நீ கொள்ளல்** *- உண்மையான பத்தி நீ கொள்ளுதல்,* **தெள்ளிமை ஆம்** *- மயக்கமறத் தெளிந்த தன்மையாம் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

எக்காலமும் நெஞ்சமே! சஞ்சித கர்மங்களினால் வருகின்ற சுகத்தையும் துக்கத்தையும் எவ்வப்பொழுது எதுவரும் அவ்வப்பொழுது பாவத்தின் பயனாகத் துக்கத்தையும், புண்ணியத்தின் பயனாகச் சுகத்தையும் அனுபவிக்கின்றாய். இந்த நல்வினை தீவினையாகிய (புண்ணிய பாவ) இருவினைகளையும் விட்டு எந்த வினையை அனுபவிக்கும் போது மேருவை வில்லாக உடைய சிவனுடைய திருவடியை அடைய வேண்டும் என்ற விருப்பம் உண்டாகக் கூடும்? கருப்பாசயத்தின் கண் வினைக்கேற்ப வந்து பொருந்தி பத்து மாதங்கள் இருந்து பூமியின் கண் பிறந்து நீர்க்குமிழி போன்று விரைவில் அழியக்கூடிய இச்சரீரம் இருக்கும் போதே சற்குருவினது திருவடிக்கு உண்மையான பக்தி நீ கொள்ளுதல் மயக்கம் அறத் தெளிந்த தன்மையாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

கடலில் குளிக்க விருப்பம் உள்ளவன் கடல் அலைகள் தொடர்ந்து வருகின்றது என்று எண்ணாமல் குளிக்க வேண்டுமேயல்லாமல்கடல் அலைகள் ஓய்ந்த பின்பு குளிக்கிறேன் என்று கூறுவது அறிவீனம். குளிக்கவும் முடியாது. சுகம் வரும் போது சுகமாகவும் துக்கம் வரும் போது துக்கப்பட்டுக் கொண்டும் இருப்பவனுக்கு எப்போது சிவனது திருவடியை (ஆத்ம ஞானத்தை) அடைய வேண்டும் என்ற விருப்பம் உண்டாகக் கூடும்? சுகமும் துக்கமும் மாறி மாறி வந்து கொண்டே இருப்பதால் ஆத்ம ஞானத்தை அடைய முடியாது. கடலில் அலைகள் இருக்கும்போதே குளிப்பதைப்போல, சுகத்தையும் துக்கத்தையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் போதே ஆத்ம ஞானத்தை அடைய வேண்டும் என்பது கருத்து. நீரினிடத்துக் குமிழி

Koviloor Digital Library

தோன்றி அழிவது போல இவ்வுடம்பும் அழியக் கூடியது. இவ்வுடம்பு இருக்கும் போது குருவிற்குப் பணிவிடைகள் செய்து வருவாய். சற்குருவானவர் உனக்கு ஞான உபதேசம் செய்து ஆத்ம ஞானத்தை அடையச் செய்வார். ஆத்ம ஞானமானது மோட்சத்தை அடையச் செய்யும் என்பது கருத்து.

▲

37. ஆமையார் உறுப்பு ஐந்தையும் ஓர்மெய்யுள்
அடக்கலில் புலன் ஐந்தும்
தீமை சேர் விடயங்களில் செலாது அமைத்து
உள்ளமே சிவைபாக
சோமசேகரன் சரணமே சரண் எனத்தொழுது நின்று
அழுது அன்னோன்
நாமம் நாவினால் செபித்திலை அவத்திலே நாள்
எலாம் கழித்தாயே.

இதன் பதப்பொருள்

ஆமை - *ஆமையானது,* **ஆர் உறுப்பு ஐந்தையும்** - *தனது கூர்மையான அங்கம் ஐந்தினையும்,* **ஓர்மெய்யுள் அடக்கலில்** - *துன்பம் வரும்போது தனது ஒரு உடம்பின் கண் அடக்கிக் கொள்ளுதல் போல,* **புலன் ஐந்தும்** - *ஐந்து இந்திரியங்களையும்,* **தீமைசேர் விடயங்களில்** - *பாவத்திற்கு ஏதுவாய் வருகின்ற தீய விஷயங்களில்,* **செலாது அமைத்து** - *செல்ல ஒட்டாது விவேகத்தால் உள்ளடக்கி,* **உள்ளமே** - *நெஞ்சமே,* **சிவைபாக சோமசேகரன்** - *பார்வதியை இடப்பாகத்தில் உடைய சந்திரசூடனாகிய சிவனது,* **சரணமே** - *திருவடிகளே,* **சரண் எனத் தொழுது** - *அடைக்கலம் என வணங்கி,* **நின்று** - *நின்று,* **அழுது** - *அவனது திருவடிகளை அன்பால் நினைந்து உருகி அழுது,* **அன்னோன் நாமம்** - *அவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தினையும்,* **நாவினால் செபித்திலை** - *வாக்கினால் இடைவிடாமல் செபித்தாயில்லை,* **அவத்திலே** - *பயனற்ற தேக போகங்களைக் கருதி,* **நாளெல்லாம்** - *வாழ்நாளெல்லாம்,* **கழித்தாயே** - *வீணாளாகக் கழித்தாயே இது என்னை என்று விவேகம் கூறிற்று.*

Koviloor Digital Library

பொழிப்புரை

ஆமையானது தனது கூர்மையான அரிய உறுப்புகள் ஐந்தினையும் ஆபத்து வரும் போது தனது ஒரு உடம்பின் கண் அடக்கிக்கொள்ளுதல் போல் பஞ்ச இந்திரியங்களையும் பாவங்களுக்கு ஏதுவாய் வருகின்ற விஷயங்களில் போக ஒட்டாமல் விவேகத்தால் உள்ளடக்கி நெஞ்சமே! பார்வதியை இடப்பாக்கத்தில் உடைய சந்திரசூடனாகிய சிவனது திருவடிகளே தஞ்சம் என்று வணங்கி நின்று அவனது திருவடிகளை அன்பால் நினைந்து உருகி அழுது அவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தினையும் வாக்கினால் இடைவிடாமல் செபித்தாயில்லை. பயனல்லாத தேக போகங்களைப் பொருளாகக் கருதி உழைத்து வாழ்நாள் எல்லாம் வீணாளாகக் கழித்தனை; இது என்னை என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

ஆமை தனக்குத் துன்பம் வரும்போது தனது ஐந்து உறுப்பையும் உள்ளே இழுத்துக் கொள்வது போல, நமது ஐந்து இந்திரியங்களும் தவறான தீயவழியில் செல்லும் போது தடுத்து நிறுத்த வேண்டும். ஆமை தன்னுடைய உறுப்பை இழுத்து ஆபத்திலிருந்து காத்துக் கொள்வதுபோல, பஞ்ச இந்திரியங்கள் தவறான தீய செயல்களில் செல்லும் போது தடுத்து, செல்லவிடாமல் பாவச் செயலிலிருந்து தடுக்க வேண்டும். அங்ஙனம் தடுக்காவிடில் பாவத்தினால் துன்பங்களை அனுபவிக்க நேரிடும். சிவனது திருவடியே அடைக்கலம் என்று காயத்தால் வணங்கி, ஐந்தெழுத்தை மனதால் நினைத்தும், வாக்கால் ஜபித்தும், பிறவிக்கடலிலிருந்து விடுபட வேண்டும். அங்ஙனம் செய்யாமல் பிரயோஜனத்தைக் கொடுக்காத உலக விஷயத்திலும், போக போக்கியங்களிலும் உழைத்தும், அனுபவித்தும் வாழ்நாள் எல்லாவற்றையும் கழிப்பது வெறும் வீணான காரியமே.

அந்தக்கரணம் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை நல்வழியில் செலுத்துவதாலும் பக்தி செய்வதாலும் அந்தக்கரண சுத்தியடைந்து ஈசுவர கிருபை கிட்டும். ஈசுவர கிருபையால் ஞானகுரு வாய்க்கப்பெறும். பின்பு ஞான

Koviloor Digital Library

குருவின் ஞான உபதேசத்தால் விசாரணையுடன் கூடி ஞானம் உண்டாய் அஞ்ஞானம் நீங்கிவிடும். பின்பு மேலான மோட்சத்தை யடையலாம். தீயவழியில் அந்தக்கரணம் இந்திரியங்கள் செல்லுமாயின் கீழான பிறவியையும் துன்பங்களையும் அனுபவிக்க வேண்டி வரும் என்பது கருத்து.

▲

38 . தாயும் ஆகி என் தந்தையாய்
வந்துதாள் தருசிவப்பிரகாசன்
தூயபொன்னருள் வேண்டிலைஈண்டு
நின் துணிவு இருந்தமை என்னோ
காயம்மாயம் என்று அறிந்து மாதர்கள் தரு கலவி
வேண்டினை என்றால்
தீயை நீ மிக நெஞ்சமே இதற்கு யான்
செய்வது ஒன்று அறியேனே.

இதன் பதப்பொருள்

தாயுமாகி என் தந்தையாய் - எனக்கு மாதாவுமாகிப் பிதாவுமாகி, **வந்துதாள் தரு** - எழுந்தருளி வந்து திருவடி தீக்ஷை எளிதிலே புரிந்து, **சிவப்பிரகாசன்** - சிவப்பிரகாசன் என்னும் பெயரினையுடைய ஆசாரியனது, **தூயபொன்னருள் வேண்டிலை** - பரிசுத்தமான பொன் போன்ற கிருபையினை விரும்புகின்றிலை, **ஈண்டு நின் துணிவு** - இவ்விடத்து நின் கருத்து, **இருந்தமை யென்னோ** - இருந்த தன்மை எப்படி உளதோ யான் அறிகிலேன், **காயம் மாயம் என்று அறிந்து** - உடம்பு அநித்தியம் என்று அறிந்து இருந்தும், **மாதர்கள் தரு கலவி** - மாதர்களால் உண்டாகிய கூட்டுறவினை, **வேண்டினை என்றால்** - விரும்புகின்றனை எனில், **நெஞ்சமே** - மனமே! **நீ மிக தீயை** - நீ மிகவும் பாவியாயினை, **இதற்குயான்செய்வது** - இதற்கு யான் செய்யக்கூடிய, **ஒன்று அறியேனே** - ஓர் உபாயமும் அறியேன் என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

எனக்குத் தாயுமாகி, தகப்பனுமாகி எழுந்தருளி வந்து திருவடி தீட்சையுடன் ஞான உபதேசம் எளிதிலே

Koviloor Digital Library

புரிந்த சிவப்பிரகாசன் என்னும் பெயரினையுடைய ஆசாரியனின் பரிசுத்தமான பொன் போன்ற கிருபையினை விரும்புகின்றாயில்லை. இவ்விடத்து நின் கருத்து இருந்த தன்மை யாது உளதோ? யான் அறிகிலேன். உடம்பு அழியக் கூடியது என்று அறிந்து இருந்தும் பெண்களால் உண்டாகும் கூட்டுறவினை விரும்புகின்றாய். இவ்வாறு செய்வாயாகில் மனமே! நீ மிகவும் பாவியாயினை. மோட்சத்தை அடையக்கூடிய வேறு உபாயம் ஒன்றினையும் யான் அறிகிலேன் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

தாயுமாகி என் தந்தையுமாய் என்பதற்கு உதாரணம் 'தந்தை தாயாவானும் சார்கதியுங்காவானும்" என்ற தத்துவராயர் குரு ஸ்துதியைக் காண்க. 'தாள் தரு' என்பதற்கு உதாரணம்"ஆமைமீன் பறவை போலத் தன்னகங் கருதி நோக்கி தடவி சந்நிதியிருத்தி" என்பதைக் கைவல்ய நவநீதத்தில் காண்க. குரு பிரஹ்ம சொரூபம் என்பதற்கு உதாரணம் "சற்குருவே மெய்யாக்கண்ட சிவம்" என்கிற வேதாந்த சூடாமணியாம்.

குருவினிடம் தீட்சையும் ஞான உபதேசமும் பெற வேண்டும் என்பது கருத்து. குருவினது ஞான உபதேசத்தைக் கடைப்பிடிக்காமல் பெண்களது கூட்டுறவினைச் சேர்ந்தால் மிகவும் பாவத்தை அடைந்து கீழான நிலையை அடைய நேரிடும். அங்ஙனம் கீழான நிலையை அடைந்தாயாகில் மேலான கதியான மோட்சத்தை அடைய வேறு ஓர் உபாயமும் இல்லை என்பது கருத்து. "பொன்னருள்" என்பது பரிசுத்தமான கிருபையாம். அதற்கு உதாரணம் "வஞ்சகமில் பரமார்த்த குருவே" என்கிற கைவல்ய நவநீதத்தைக் காண்க.

▲

Koviloor Digital Library

39. ஏனை நூல்பல ஓதினை ஓதுஅவற்று
இறையருள் அடையாதார்க்கு
ஊன வெம்பவம் ஒழிப்பதற்கு உள்ளமே
உபாயம் வேறு இலை ஆனால்
ஆனை ஈர்உரிபோர்த்த என் தம்பிரான்
அருள் விரைந்து அடையாதே
தான்இ நாள்மினார் போகம் நீ வியந்தது
தப்பு அலால் சதுரன்றே.

இதன் பதப்பொருள்

ஏனை நூல் பல ஓதினை - *ஞான சாஸ்திரங்கள் அல்லாமல் மற்ற சமய நூல்களைக் கற்று உணர்ந்தாய்,* **ஓதுஅவற்று** - *நீ கற்ற அச்சமய சாஸ்திரங்கள் எல்லாம்,* **இறையருள் அடையாதார்க்கு** - *இறைவனது திருவருளைப் பெறாதார்க்கு,* **ஊன வெம்பவம்** - *இழிவு பொருந்திய கொடிய பிறவியை,* **ஒழிப்பதற்கு** - *நீக்குவதற்கு,* **உபாயம் வேறிலை** - *உபாயம் வேறு ஒன்று இல்லை என்று சொல்லுகின்றன.* **உள்ளமே ஆனால் நீ தான்** - *ஆனால் நெஞ்சமே நீயோ,* **ஆனை ஈர் உரி போர்த்த** - *ஆனையினது குளிர்ச்சி பொருந்திய தோலினை அணிந்த,* **என் தம்பிரான்** - *எனது கருத்தனாகிய சிவனது,* **அருள் விரைந்து** - *திருவருளைச் சீக்கிரம்,* **அடையாதே** - *அடைவதற்கு ஏதுவாய செயல்களைச் செய்து அடையாமலே,* **இநாள் மினார் போக** - *இதுகாலம் மின்போலும் இடையுடைய பெண்ணினது போகத்தை,* **வியந்தது** - *இன்பமென்று அதிசயித்தது,* **தப்புஅலால் சதுரன்று** - *தவறேயல்லாமல் நன்மையல்ல என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

ஞான சாஸ்திரங்கள் அல்லாமல் மற்ற சமய நூல்களைக் கற்று உணர்ந்தாய். நீ கற்ற சமய சாஸ்திரங்கள் எல்லாம் இறைவனது திருவருளைப் பெறாதார்க்கு இழிவு பொருந்திய கொடிய பிறவியை நீக்குவதற்கு உபாயம் வேறு ஒன்று இல்லை என்று உரைக்கின்றன. அங்ஙனம் இருக்க நெஞ்சமே, நீயோ ஆனையினது குளிர்ச்சி பொருந்திய தோலினை அணிந்த எனது கர்த்தனாகிய சிவனது திருவருளைச் சீக்கிரம் அடைவதற்கு ஏதுவாய்ச் செயல்களைச்

Koviloor Digital Library

செய்து அடையாமல் இது காலம் மின் போன்ற இடையையுடைய பெண் போகத்தை இன்பமென்று அதிசயித்தது தவறேயல்லாமல் நன்மையில்லை என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

மோட்சமடைவதற்கு ஞான சாஸ்திரங்கள் கேட்டல் வேண்டும்; மற்ற சமய நூல்களைப் படித்தால் அவையெல்லாம் இறைவனது அருளைப் பெறல் வேண்டும் என்று சொல்கின்றன. இறைவனது அருளால் தான் பிறவியைப் போக்க முடியும் என்று சொல்கின்றன. அங்ஙனம் இருக்க, சிவனது அருளைப் பெறப் பக்தி செய்யாமல் மாதர் போகத்தையே விரும்பி அதனையே மனமானது நினைக்கின்றது.

▲

40. சதுர்மறைப் பொருளாகிய ஒரு சிவ சங்கரன்
தொழுது அன்பாய்
விதிர்விதிர்த்து மெய் பொடித்திலை நடித்திலை
விரைந்து சென்று அவன் ஆடும்
பொதுவை உற்றிலை நிற்றிலை மாதர்பால்
போகுதல் தவிர்ந்து ஆ ஆ
எது படக்கடவாய் மட நெஞ்சமே
இனி உடல் அகன்றாலே.

இதன் பதப்பொருள்

சதுர்மறைப் பொருளாகிய - இருக்கு முதலிய நான்கு வேதங்களினது முடிவான முடிபொருளாகிய, **ஒரு** - ஒப்பற்ற ஏகமாகிய, **சிவ சங்கரன் தொழுது** - சிவ சங்கரனது திருவடியை வீழ்ந்து வணங்கி, **அன்பாய்** - பக்தியினால், **மெய் விதிர்விதிர்த்து** - தேகம் நடுநடுங்கிலை, **பொடித்திலை** - உரோமஞ் சிலிர்த்திலை, **நடித்திலை** - ஆனந்த நடனம் புரிந்தாயில்லை, **விரைந்து சென்று** - அதி சீக்கிரமாய்ச் சென்று, **அவன் ஆடும்** - அவன் நடனம் புரிகின்ற, **பொதுவை** - கனக சபையாகிய சிதம்பரத்தை, **உற்றிலை** - அடைந்தாயில்லை, **மாதர்பால் போகுதல்** - மகளிரிடம் ஆவலுடன் சேர்ந்து

Koviloor Digital Library

செல்வதைத் தவிர்ந்து, **நிற்றிலை** - நீங்கி நின்றாயில்லை, **ஆ ஆ மட நெஞ்சமே** - ஆ! ஆ! அறிவற்ற மூட மனமே, **இனி உடல் அகன்றாலே** - இனிமேல் இத்தேகம் நாசமாயின், **எது படக்கடவாய்** - என்ன பாடுபடப் போகின்றாயோ.

பொழிப்புரை

ரிக் யஜுர் சாம அதர்வண வேதங்களாகிய நான்கினது முடிவான பொருளாகிய ஏக வஸ்துவாகிய சிவத்தை அறிவதற்கு, சிவனது திருவடியை வீழ்ந்து வணங்கி, பக்தியினால் தேகம் நடுநடுங்கிலை. உரோமஞ் சிலிர்த்திலை; ஆனந்த நடனம் புரிந்தாயில்லை. அதிசீக்கிரமாய்ச் சென்று அவன் தாண்டவ நடனம் புரிகின்ற கனக சபையாகிய திருச்சிற்றம்பலத்தை அடைந்தாயில்லை. மகளிரிடம் மகிழ்ச்சியுடன் சேர்ந்து செல்வதை நீங்கி நின்றாயில்லை; ஆ ஆ! மூட மனமே! இனி காலாந்தரத்தில் இவ்வுடல் நீங்குமாயின் யாது செய்வாய்? எங்கு போய்ச் சேர்வாய் என்ன கதி அடைவாய்; யான் அறிகிலேன் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

பிரமத்தை(சிவம்) அறிவதற்குச் சிவனது அனுக்கிரகம் தேவை. சிவனது அனுக்கிரகம் வேண்டுமாயின் சிவனைக் குறித்துப் பக்தி செய்ய வேண்டும். சிவனது அதி தீவிர பக்தியினால் உடம்பு நடுங்கும். உரோமஞ் சிலிர்க்கும். இவைகள் பக்தியினால் உண்டாகும் பரவச நிலையாம். சிவனுக்கு அனுகிரகம் (கிருபை) செய்யத்தான் சக்தி உளதே தவிர ஞான உபதேசம் செய்யச் சக்தி இல்லை. மானிடவடிவம் தாங்கியுள்ள ஞானிக்கே ஞானோபதேசம் பண்ணத் தகுதி உள்ளது. சிவனிடத்தில் பக்தி செய்யாமல் பெண்ணிடம் தொடர்பு கொண்டு இருப்பையேல் என்ன கீழான கதியை அடையப் போகின்றாயோ அறிய முடியாது என்பது கருத்து.

▲

Koviloor Digital Library

41. ஆல நீழலில் அன்று ஒரு நால்வருக்கு
அரு நெறி உரைத்தானைக்
காலகாலனைச் சிவப்பிரகாச என்
கண்மணிதனை உன்னாது
ஏலவார் குழலார் மயல் கொண்டு நீ இங்கு
உழலுவது எல்லாம்
சாலவே பிழையாகும் நெஞ்சே சொனேன்
தவறிலை என்மேலே.

இதன் பதப்பொருள்

ஆல நீழலில் - *கல்லால விருட்சத்தின் கீழ் எழுந்தருளியிருந்து,* **அன்று ஒரு நால்வருக்கு** - *பிரம்மாவின் மானசீக புத்திரர்களுக்கு அக்காலத்தில்,* **அரு நெறிஉரைத்தானை** - *அரிய ஞான மார்க்கத்தினை, தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி உபதேசித்தருளிய அனுக்கிரக கர்த்தனை,* **காலகாலனை** - *எல்லா உயிர்களையும் நாசம் பண்ணுகின்ற காலனையே நாசம் செய்த நிக்கிரக கர்த்தனை,* **சிவப்பிரகாச** - *அச்சிவன் தானே அருளே திருமேனியாய்க் கொண்டு எழுந்தருளி வந்த சிவப்பிரகாசன் என்னும் நாமத்தையுடைய,* **என் கண் மணிதனை** - *என் கண்ணின் கருமணி போன்ற ஆசாரியனை,* **உன்னாது** - *அன்போடு நினையாது(தியானிக்காது),* **நெஞ்சமே** - *மனமே!* **ஏலவார் குழலார் மயல் கொண்டு** - *நீண்ட கூந்தலையுடைய பெண்ணினிடத்து மயக்கத்தை அடைந்து,* **நீ இங்கு** - *நீ இவ்விடத்து,* **உழலுவது எல்லாம்** - *சுழலுவது எல்லாம்,* **சாலவே பிழையாகும்** - *மிகவும் தவறேயாகும்,* **சொன்னேன்** - *பலவிதமாக எடுத்துரைத்தேன்,* **என்மேலே தவறிலை** - *என்னிடத்துக் குற்றமில்லை என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து பிரம்மாவின் மானசீக புத்திரர்களாகிய சனகர் சனந்தனர் சனத்குமார் சனாதனர் ஆகிய நான்கு முனிவர்களுக்கு அன்று அரிய ஞான மார்க்கத்தினைத் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளி சின்மாத்திர வடிவத்தில் உபதேசித்தருளிய அனுக்கிரக கர்த்தனை, எல்லா உயிர்களையும் நாசம் செய்கின்ற காலனையே

Koviloor Digital Library

நாசம் செய்த நிக்கிரக கர்த்தனை, அச்சிவனே அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி வந்த சிவப்பிரகாசன் என்னும் நாமத்தையுடைய என்கண்ணின் கருமணி போல் பாவை போன்ற ஆசாரியனை, அன்போடு தியானிக்காது (நினையாது) மனமே! நீ மாதர்களிடத்து மயக்கத்தை அடைந்து கூத்தாடி விளையாடிக்கொண்டு இவ்வுலகின்கண் சுழலுவது எல்லாம் மிகவும் தவறேயாம். இவைகளெல்லாம் பிரயோஜனம் அற்றவை என்று பல உபாயங்களைச் சொல்லி எடுத்துரைத்தேன். மாதர்போகத்தை விடுத்து ஞானமார்க்கத்தைக் கடைப்பிடிப்பதும் கைக்கொள்ளாமல் விடுவதும் உனது செயலே என்மேல்தவறில்லை என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

சிவனே சனகாதி நால்வருக்கு ஞான உபதேசம் செய்வதற்குத் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியுள்ள விருட்சம் கல்லால விருட்சம். மார்க்கண்டேயனைப் பிடிக்க வந்த யமனைத் தடுத்துக் காப்பாற்றியவர் சிவபெருமான். அச்சிவனையே "கால காலன்" என்றார். இந்நூல் இயற்றிய சாந்தலிங்க சுவாமியின் குருநாதர் சிவப்பிரகாச சுவாமிகள் தனது குருநாதரையே "சிவப்பிரகாசன்" என்றார். ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிக்காமல் உலக விவகாரம் மாதர் போகம் இவற்றினிடத்துச் செல்வோரை முழுவதும் தவறு என்றார். "சாலவே பிழையாகும் " என்றார்.

"வந்த வரவை மறந்து மிக்க மாதர் பொன்பூமி மயக்கத்தில் ஆளும்" என்கிறார் தாயுமானவர். அதனையே "மயல்கொண்டு" என்கிறார் சாந்தலிங்க சுவாமிகள். கண்மணி பிரகாசத்தைக் கொடுத்து நல்லது இது தீயது இது என்று அறிவித்தல் போல் பிறவி துன்பமென்றும் மோட்சம் இன்பமென்றும் அறிவித்தலால் குருவினை, "கண்மணி" என்றார்.

அனுக்கிரகம் - கிருபை

நிக்கிரகம் - தண்டித்தல்

▲

Koviloor Digital Library

42. என்னை கண்டுநீ மாதரார் வடிவமீது
இச்சை வைத்து உழல்கின்றாய்
பொன்னையும் துகிலையும் பிரித்திடின்
வெறும் புழுமலக் கூடல்லால்
பின்னையுண்டு கொல் கண்டு நீ மயங்குதல்
பிராந்தி சங்கரன் பாதந்
தன்னை நாடுதி நெஞ்சமே பரசுகோததி
யுறப் பெறலாமே.

இதன் பதப்பொருள்

என்னை கண்டு - *என்ன சுத்தம் இருக்கிறது என்று கருதி,* **நீ மாதரார் வடிவமீது** - *மனமே நீ! மகளிர் உடலின் கண்,* **இச்சை வைத்து** - *ஆசை வைத்து,* **உழல்கின்றாய்** - *மயங்கிச் சுழலுகின்றனை,* **பொன்னையும் துகிலையும்** - *மினுக்குகின்ற பொன்னாலாகிய ஆபரணத்தையும் உடையினையும்,* **பிரித்திடின்** - *வேறு பிரித்துப் பார்க்குமிடத்து,* **வெறும் புழுமலக்கூடு** - *வெறுங் கிருமிகளும் மலம் சலம் குடல் மூளை ரத்தம் கோழை முதலிய மலங்களும் நிறைந்துள்ள உடம்பு,* **அல்லாமல்** - *அன்றி,* **பின்னையுண்டு கொல்** - *பின்னை வேறு யாதொரு சுத்தமான பொருள் உளதோ? இல்லை. அங்ஙனம் இருக்க, செயற்கை வடிவத்தைப் பார்த்து மயங்குதல் பிரமையேயாம்,* **சங்கரன் பாதந் தன்னை** - *இனி மாதர்கள் மேல் ஆசையை விட்டு நீங்கிச் சிவனது திருவடியை,* **நாடுதி நெஞ்சமே** - *மறவாது நினைப்பாய் நெஞ்சமே,* **பரசுகோததி** - *அங்ஙனம் நினைப்பாயாகில் மேலாகிய இன்ப சாகரத்தை,* **உறப் பெறலாமே** - *மிகவும் யாம் அடையலாம் என்று விவேகம் கூறிற்று. சுக(இன்பம்) + உததி(சாகரம்) சுகோததி - இன்பசாகரம்.*

பொழிப்புரை

என்ன தான் சுத்தம் இருக்கிறது என்று கருதி மனமே நீ! பெண்ணினது உடலினிடத்து ஆசை வைத்து மயங்கிச் சுற்றிச் சுற்றி அலைந்து கொண்டும் அதனையே நினைத்துக்கொண்டும் இருக்கின்றாய். மினுக்குகின்ற பொன்னாலாகிய ஆபரணத்தையும் உடையினையும் இவையெல்லாம் செயற்கை வடிவம் என்றும் வெறும்

Koviloor Digital Library

கிருமிகள் மலம் சலம் குடல் மூளை ரத்தம் கோழை போன்ற முதலிய மலங்கள் நிறைந்துள்ள இவ்வுடம்பினை வேறு பிரித்துப் பார்க்குமிடத்து இயற்கையான உடம்பின் கண் யாதொரு சுத்தமான பொருள்உள்ளதா என்றால் இல்லை. அங்ஙனம் இருக்க, செயற்கை வடிவத்தைப்பார்த்துத் தெரிந்திருந்தும் நீ மயக்கமுறுதல் உனது மன மயக்கமேயாகும். இனிப் பெண்ணினிடத்து ஆசையை விட்டு நீங்கிச் சிவனது திருவடியை மறவாது நினைப்பாய் மனமே! அங்ஙனம் நினைப்பாயாகில் மேலாகிய இன்பக் கடலினை மிகவும் யாம் அடையலாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

பெண்ணினிடத்து இயற்கையாக அசுத்தங்கள் நிறைந்துள்ளன. பெண்கள் செயற்கையாக வர்ண ஆடைகளையும் வாசனைத் திரவியங்களையும், மலர்களையும், ஆபரணங்களையும், அணிந்து நமக்கு மயக்கத்தை உண்டு பண்ண, மனமும் அதனைப் பிரித்தறியாமல் அழகாக உள்ளது என்று கருதிச் செயற்கை வடிவத்தில் மயங்குகின்றது. பெண்ணினிடத்து இன்பம் இல்லை என்று தெரிந்து அதனை நினையாமல் விடுத்து, சிவனது திருவடியை நினைந்து அதன் மயமாய் மனம் இருக்குமாயின் மேலான இன்பக்கடலினை அடையலாம். உலக மாதரிடத்து ஆசை விடுத்து, சகுணப்பிரம்மத்தினைத் தியானம் செய்து பின்பு நிர்க்குணப்பிரம்மத்தினைத் தியானம் செய்து பேரின்ப நிலையை அடையலாம் என்பது கருத்து.

▲

43. **பெறுவது என்னை கொல் சுக்கிலம்**
கலித்தலால் பெருந்தவ வலிகுன்றும்
உறுவது அவ்வளவோ பினை நீ விரும்பு
உடற்கும் ஆனியது உண்டால்
அறிவுயாம் அறியாமை தோய்ந்து உடல்தினவதைச்
சுகம் எனா நின்றாய்
செறிது நெஞ்சமே நமது சிற்சுகம்
இனிச்சிவனை ஆதரிப்பாயே.

Koviloor Digital Library

இதன் பதப்பொருள்

சுக்கிலம் கலித்தலால் - *பெண் கூட்டுறவினால் இந்திரியம் கழிந்து போவதால்,* **பெறுவது என்னை கொல்** - *அடைவது யாது பயன்,* **பெருந்தவ வலிகுன்றும்** - *நெடுநாள் வருந்திச்செய்த தபோ பலம் எல்லாம் குறையும்,* **உறுவது அவ்வளவோ** - *கேடு வருவது அது மட்டுமா,* **பினை நெஞ்சமே நீ விரும்பி உடற்று** - *பின்னர் மனமே நீ விரும்புகின்ற தூல சரீரத்தில்,* **ஆனியது உண்டால்** - *இருந்த நோய்கள் கூடுதலாம்; அதனால் சரீரத்திற்கு நாசமுண்டாம்,* **அறிவுயாம்** - *சடமாகிய சரீரத்தின் கண்ணுள்ள அறிவு சொரூபமாகிய ஆத்மாவே நாம் என்று அறியாது,* **அறியாமை தோய்ந்து** - *அஞ்ஞானத்தின் வசப்பட்டு,* **உடல்தினவதை சுகம் எனா நின்றாய்** - *உடம்பினது தினவைச் சுகம் என்று கருதுகின்றாய்,* **இனிச்சிவனை ஆதரிப்பாய்** - *உடம்பினது சிற்றின்பத்தை விட்டு நீங்கி, பின்பு சிவனது திருவடியை வணங்கினால்,* **நமது சிற்சுகம் செறிதும்** - *நமது யதார்த்த ஞானாநந்தத்தினைச் சேரலாம் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

பெண் சேர்க்கையினால் இந்திரியம் கழிந்து போவதால் அடைவது யாது பயன் என்று கேட்பாயாகில் மோட்சம் அடையும் பொருட்டு நீண்ட நாள் செய்த தபோ பலம் எல்லாம் குறையும். பின்னர் கேடுவருவதோடு மட்டுமல்லாது மனமே நீ விரும்புகின்ற உடம்பின்கண் இருந்த நோய்கள் அதிகமாகி அதனால் சரீரத்திற்கு நாசமுண்டாம். சடமாகிய சரீரத்தின்கண் விளங்குகின்ற அறிவு சொரூபமான ஆத்மா எனது நிஜவடிவம் என்பதனை அறியாது அஞ்ஞானத்தின் வசப்பட்டு உடம்பினது தினவை, சுகம் என்று கருதுகின்றாய். உடம்பினால் உண்டாகும் சிற்றின்பத்தை விட்டு நீங்கிப் பின்பு சிவனது திருவடியை வணங்கினால் நமது யதார்த்த ஞானாநந்தத்தினைச் சேரலாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

பெண் சேர்க்கையினால் இந்திரியம் கழிதலால் உண்டாகும் கேடு மோட்சம் அடைவதற்குச் செய்த தவம்

Koviloor Digital Library

குறையும். உடல் நோயுற்று இருக்குமாயின் மேலும் நோயை விருத்தி செய்யும். உடலின்கண் நோயை அதிகப்படுத்தும். உடலின்கண் தாது உற்பத்தி அதிகமாக இருக்குமாயின் அதனைக் கழிப்பதே இன்பமாகத் தோன்றும். யோகிகள் தாதுவினை உற்பத்தியாகவிடாமல் அதை உடலிடத்து மாற்று சக்தியாக ஆக்குவார்கள். அதுவே யோகிகளுக்குத் தேஜஸை உண்டாக்கக் கூடியது. நீக்கமற நிறைந்திருப்பதும் சடமான உடலின்கண் அந்தக்கரணத்தினிடத்து சித்துதன்மையும் ஆனந்தத் தன்மையும் விளங்குவதாய் உள்ள ஆத்மாசத்து சித்து ஆனந்த சொரூபம். அவ்விஷயத்தினை அறியாமல் உடல் தினவால் உண்டாகும் சுகத்தைச் சுகம் என்று கருதுவது மயக்கமே. ஐந்து இந்திரியங்கள் மூலமாக உண்டாகும் இன்பத்தைவிட்டுச் சிவனது திருவடியைத் தோத்திரம் செய்து நிஷ்காமமாகப் பக்தி செய்தால் சிவன் ஞான சற்குருவினிடம் சேர்ப்பிப்பார். ஞான சற்குரு ஞான உபதேசம் செய்து ஆனந்தமாக இருக்க வைப்பார். சர்வதுக்க நிவர்த்தி பரமானந்த பிராப்தியை அடையச்செய்வார். அதாவது துக்கத்திலிருந்து விடுபடுதலும் ஆனந்த நிலையை அடையச் செய்வதுமான ஜீவன் முத்தியை அடையச் செய்வார் என்பது கருத்து.

▲

44. ஆதரித்தனை குளகிருதாதிய
அடிசிலைக் கூழ்காடி
ஏது பெற்றிடினும் புசித்தால் பசிஏகலும்
சமித்து அற்றால்
பேதம் அற்று எலாம் மலமது ஆதலும்சரி
என்றிடில் பினை நெஞ்சே
நீ தரித்து இலாது அவை விழைந்து
உழல்வது என் நிமலனை நினையாதே.

இதன் பதப்பொருள்

குள கிருத ஆதிய - வெல்லம் நெய் முதல் பாயாசமும், **அடிசிலை** - சோற்றினையும், **ஆதரித்தனை** - நீ விரும்புகின்றாய், **கூழ்காடி** - கூழாகிய உணவையும் புளித்த நீராகிய காடி முதலிய, **ஏது பெற்றிடினும்** - யாது வந்ததாயினும், **புசித்தால்**

Koviloor Digital Library

பசியேகலும் - *உண்ணுதலும் அருந்தலும் செய்யின் பசி போகுதலும்,* **சமித்தற்றால்** - *அவை சீரணித்து அடங்கினால்,* **எலாம் பேதமற்று** - *பல வித வேறுபாடுகளாக இருந்த உண்ட உணவெல்லாம் வேறுபாடில்லாமல்,* **மலமது ஆதலும்** - *துர்க்கந்த மலமது ஆதலும்,* **சரி என்றிடின்** - *சரி என்றால்,* **பினை நெஞ்சே** - *இங்ஙனம் அறிந்த பின்னரும் நெஞ்சே,* **நீ தரித்து இலாது** - *நீ கிடைப்பதைச் சகித்து ஏற்றுக்கொள்ளாது,* **அவை விழைந்து** - *நெய் முதலிய பதார்த்தங்களை விரும்பி,* **உழல்வது என்** - *சுழலுவது என்னை,* **நிமலனை நினையாதே** - *நிர்மலனாகிய சிவனை இடைவிடாமல் நினையாமல் இருந்து கொண்டு இருக்கின்றாய் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

நெய், வெல்லம், கீரை, பாயாசம், சோறு முதலிய பதார்த்தங்களை நீ விரும்புகின்றாய். கூழாகிய உணவையும் புளித்த நீராகிய காடியையும் விரும்பாமல் புசிக்கின்றாய்; அருஞ்சுவை உணவை உண்டாலும் பசிக்காகக் கூழையும் காடியையும் புசித்தாலும் அவை எலாம் சீரணித்து அடங்கினாலும் பல வித வேறுபாடுகளாக இருந்த உண்ட உணவெலாம் துர்கந்த மலமது ஆதலும் சரியாக இருக்கிறது. இங்ஙனம் அறிந்த பின்னும் நெஞ்சமே நீ வினைப்பயனாகக் கிடைப்பதைச் சகித்து ஏற்றுக்கொள்ளாது நெய் முதலிய பதார்த்தங்களை விரும்பிச் சுவையான பதார்த்தத்தை வேண்டும் என்றும் சுவையற்ற உணவை வேண்டாம் என்றும் கருதி உழன்று கொண்டிருக்கிறாய். இதனையே கருதிக் கொண்டு பரிசுத்தமான சிவனது திருவடியை நினையாமல் இருக்கின்றாயே யான்யாது செய்ய? என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

மனமானது அருஞ்சுவை உணவை விருப்பத்துடன் புசிப்பதும் சுவையான உணவு கிடைக்காததால் சுவையற்ற உணவை வேறு வழியில்லாமல் புசிப்பதுமாய் இருக்கிறது. உணவு அனைத்தும் சீரணித்தபின் மலமாகின்றது. அதனை அறிந்து இருவினைக்கீடாக வருகின்ற அருஞ்சுவை உணவையோ சுவையற்ற உணவையோ புசிக்க வேண்டும். இதற்காக விருப்பு வெறுப்பு அடையவோ சுழலவோ கூடாது.

Koviloor Digital Library

இதனையே நினைத்துக் கொண்டிருந்தால் பரிசுத்தமான சிவனது திருவடியை மறந்து விடுவாய் என்பது கருத்து.

▲

45. நினைப்பினும் குறிகாட்டிடும் கோசம் நா
இவற்றுள் நேரிழையாரை
இனிப்பை நல்கும் முக்கனி முதலிய
உணவினை எனில் அவை போலும்
உனைப்பல் வாதைசெய் பகை பிறிது இலை
உணர்ந்து உள்ளமே ஒழித்தாயேல்
பினைப்பராபரன் திருவடி நீழல்யாம்
பெறற்கு இடையூறு இன்றே.

இதன் பதப்பொருள்

இவற்றுள் - *எல்லா விஷயங்களுள்,* **நேரிழையாரை** - *பெண்ணினையும்,* **இனிப்பை நல்கும் முக்கனி, முதலிய உணவினை** - *சுவையினைத் தருகின்ற நல்ல முப்பழம் முதலிய உணவினையும்,* **நினைப்பினும்** - *மனத்தால் நினைத்தால்,* **கோசம் நா** - *ஆண்குறியும் நாக்கும்,* **குறிகாட்டிடும் எனில்** - *இலேபனமும் வாயில் நீர் ஊறலும் ஆகிய அடையாளங்களைக் காட்டுமானால்,* **இவை போலும் உனை** - *இவற்றைப் போன்று உனக்கு,* **பல்வாதை செய்** - *பல பிறவித் துன்பங்களைத் தருகின்ற,* **பகை பிறிதிலை** - *பகையானது வேறு ஒன்றும் இல்லை ஆதலால்,* **உணர்ந்து உள்ளமே** - *இதனை அறிந்து கொண்டு நெஞ்சமே,* **ஒழித்தாயேல்** - *விடுத்தாயேல்,* **பினைப்பராபரன்** - *பின்னர் யாவருக்கும் மேலாகிய பரமசிவனது,* **திருவடி நீழல்** - *திருவடி நீழல்,* **யாம் பெறற்கு** - *யாம் அடைவதற்கு,* **இடையூறு இன்றே** - *இடையூறு வேறு இன்று என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

எல்லா விஷயங்களுள் (சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகியவைகளுள்) பெண்ணினையும், சுவையினைத் தருகின்ற நல்ல முப்பழம் முதலிய உணவினையும் மனத்தால் நினைத்தால் ஆண்குறியும் நாக்கும் முறையே உணர்ச்சியும், வாயில் நீர் ஊறலும் ஆகிய அடையாளங்களை உடல்

Koviloor Digital Library

உறுப்புக்கள் காட்டுமானால் இவற்றைப் போன்று உனக்குப் பலவகையான துன்பத்தையும் பிறவியையும் பிறவியினால் வரும் துன்பத்தையும் தருகின்ற பகையானது வேறு ஒன்று இல்லை. ஆதலால் இதனை நீ அறிந்து கொண்டு மனமே! பெண், அறுசுவை உணவு மற்ற போகங்களாகிய இவைகளை அனுபவிக்காமல் விடுத்தாயேல் பின்னர் யாவர்க்கும் மேலாகிய பரமசிவனது திருவடி நிழலாகிய அறிவுப்பிரகாசமாகிய ஆத்ம ஞானத்தை யாம் அடைவதற்குத் தடை வேறு ஒன்றும் இல்லை என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

பஞ்ச விஷயங்களில் செல்லுகின்ற மனமானது துன்பத்தையும், பிறவியையும் கொடுத்துக் கொண்டே இருக்கும். ஞானத்தைக் கொடாமல் அஞ்ஞானத்தை வளர்க்கக்கூடியது இந்தப் போகங்களாம். இந்தப் போகங்களில் செல்லாது சிவனது நாமங்களை மனதால் நினைத்தும் வாக்கால் சொல்லியும் சிவனது அனுக்கிரகம் பெற்று அவனது அருளைப் பெற்று உய்யலாம் என்பது கருத்து.

▲

46. இன்று சூழ்தரு வனிதையர் ஆதி
பல்போகமும் இத்தேகத்து
ஒன்று நோய் எனில் தோடமாய் நீங்கும்
ஆங்கு உயிர் பெயரினும் நீற்றை
நன்று எனா அணிந்து உறவினர் இறை
பெயர் நவிலுவர் எனில் நெஞ்சே
பொன்று நாள் துணையாக நீறுஆதிய
போற்று அவை போற்றேலே.

இதன் பதப்பொருள்

இத்தேகத்து - இந்தக் காயத்திற்கு, **ஒன்று நோயெனில்** - ஒரு வியாதி வந்து பொருந்துமாயின், **இன்று சூழ்தரு வனிதையராதி** - இப்போது நம்மைச் சூழ்ந்திருக்கின்ற மனைவியாதிய, **பல்போகமும்** - பல விதமான போகங்களும், **தோடமாய் நீங்கும்** - புசிப்பதற்கு முடியாமல்

Koviloor Digital Library

அன்னியமாய்ப் போகுமாதலால், **ஆங்கு உயிர் பெயரினும்** - இவ்வுடம்பினை விட்டு உயிர் நீங்கிய காலத்து, **உறவினர் நீற்றை** - சுற்றத்தாராயுள்ளோர் திருவெண்ணீற்றை நன்று என அணிந்தும்அவ்வுயிர்க்கு நல்லது என்று கருதித் தரித்தும், **இறை பெயர் நவிலுவர் எனின்** - சிவனது திருநாமமாகிய பஞ்சாட்சரத்தையும் ஓதுவார் எனின், **நெஞ்சே** - இனி நெஞ்சமே! **பொன்று நாள் துணையாக** - உயிர் நீங்கும் காலத்துத் துணையாகலின், **நீறுஆதிய** - அத்திரு வெண்ணீறு முதல் எட்டு வகையினையும், **போற்று** - இருக்கும் போதே பேணிக் கொள்வாய் என்றும், **அவை போற்றேலே** - மனைவி முதலாகிய எண்வகைப் பொருள்களை இருக்கும் போதே பேணாது ஒழிவாய் என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

இந்தத் தேகத்திற்கு ஒரு வியாதி வந்து சேருமாயின் இப்போது நம்மைச் சூழ்ந்திருக்கின்ற மனைவியாதிய(பெண், மெத்தை, சுகபோஜனம், வாசனைத் திரவியம், உடை, ஆபரணம், தைலம், தாம்பூலம்) பல விதமான போகங்களும் புசிப்பதற்கு முடியாமல் அன்னியமாய்ப் போகுமாதலால், இவ்வுடம்பினை விட்டு உயிர் நீங்கிய காலத்து சுற்றத்தாராயுள்ளோர் திருவெண்ணீற்றை அவ்வுயிர்க்கு நல்லது என்று கருதித் தரித்தும் சிவனது திருநாமமாகிய பஞ்சாட்சரத்தைக்காதில் ஓதுவார்கள் எனின் இனி நெஞ்சமே! உடம்பை விட்டு உயிர் நீங்கும் காலத்துத் துணையாகலின் அத்திரு வெண்ணீறு முதலிய (விபூதி, ருத்திராக்ஷம், பஞ்சாட்சரம், தீர்த்தம், பிரசாதம், குரு, லிங்கம், சிவன்) எட்டு வகையினை உடம்போடு வாழும்போது ஏற்றுக் கொள் என்றும், மனைவியாதிய எண்வகையினை விட்டு விடு என்றும் விவேகம் கூறிற்று.

விளக்கம்

உடம்புக்கு நோய் வருமாயின் உயிருடன் இருக்கும் போதே போகத்தை அனுபவிக்க முடியாது என்றும் உடம்பை விட்டு உயிர் பிரியுமாயின் அப்போதும் இந்தப் பெண்ணாதி போகங்களை அனுபவிக்க முடியாது. அஞ்ஞானிகளுக்கு இறப்பு உண்டாகும்போது உறவினர் வெண்ணீறு அணிந்தும்

Koviloor Digital Library

பஞ்சாட்சரம் ஓதுவித்தும் அச்சீவனுக்குப் புண்ணியம் சேரட்டும். நல்லகதி அடையட்டும் என்று செய்வர். அங்ஙனம் இருக்க, தானே தேகத்தோடு இருக்கும் போது விபூதி ருத்ராட்சம் ஆகிய எண் வகைகளைக் கடைப்பிடித்தால் மேலான நிலையினை அடையலாம்; நல்ல கதி உண்டாகும். புண்ணியம் உண்டாகும் என்பதில் என்ன சந்தேகம்! சந்தேகமே இல்லை. உறுதியாகக் கிடைக்கும் என்பதையும்உடன் வருவது இவைகளே என்றும் தெரிந்து கொண்டு மனைவியாதியை விடுத்து விபூதிஆதியைக் கடைப்பிடித்து உய்வாயாக என்று விவேகம் கூறிற்று.

லிங்கம் - *சிவலிங்கம்.*

▲

47. போற்றி நீறு அணிந்து ருத்திர சாதனம்
பூண்டிடு ஐந்தெழுத்துள்ளே
சாற்று நீ குருவாதி மூவுருவையும் தாழ்ந்து
இறைஞ்சு இவைசெய்தால்
மாற்றலாம் பிறப்பு இறப்பினை நெஞ்சமே
மன்றுளாடிய தாளும்
தோற்றும் உள்ளொளிக்கு உள்ளொளியாய்
அதைத் தொழுது வாழ்தலுமாமே.

இதன் பதப்பொருள்

நீ போற்றி - *நீ வணங்கி,* **நீறு அணிந்து** - *விபூதியை நிறையப் புனைந்து,* **ருத்திர சாதனம் பூண்டிடு** - *உருத்திராக்ஷங்களைச் சிரசாதி ஸ்தானங்களில் தரித்து,* **ஐந்தெழுத்துள்ளே சாற்று** - *பஞ்சாட்சரத்தை மானதமாய் உச்சரி,* **குருவாதி மூவுருவையும்** - *குரு லிங்கம் சிவனாகிய மூன்று வடிவினையும்,* **தாழ்ந்து இறைஞ்சு** - *தாழ்ந்து வணங்கு,* **இவை செய்தால்** - *இவ்வாறு செய்தாயானால்,* **பிறப்பு இறப்பினை மாற்றலாம் நெஞ்சமே** - *மனமே! நீ பிறப்பு இறப்பு என்ற சம்சாரக் கடலைத் தாண்டலாம்,* **மன்றுள் ஆடிய தாளும்** - *கனக சபைக்கண் நடிக்கின்ற சிவனது திருவடியானது,* **உள்ளொளிக்கு உள்ளொளியதாய்** - *ஜீவர்களிடத்துத் தோன்றும் அறிவுப் பிரகாசமாயிருக்கின்ற அறிவுக்கு அறிவைக் கொடுக்கின்ற,* **அதைத் தொழுது** - *அச்சிவத்தினது திருவடியைத் தொழுது,*

Koviloor Digital Library

வாழ்தலுமாமே - *அவ்விடத்து எக்காலமும் அழிவின்றி வாழவும் கூடும் என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

மனமே! நீ வணங்கி, பயபக்தியுடன் விபூதியை நிறையப்புனைந்து உருத்திராக்ஷங்களைச் சிரசு கழுத்துக் கரங்களில் தரித்துப் பஞ்சாட்சரத்தை மானதமாய் உச்சரி. குரு, சிவலிங்கம், சிவனாகிய மூவடிவினையும் பணிந்து வணங்கு. இவ்வாறு செய்வாயானால் மனமே! நீ பிறப்பு இறப்பு என்ற சமுசாரக் கடலைத் தாண்டலாம். அதாவது பிறப்பு இறப்பு என்று மாறி மாறி வரும் சுழற்சியிலிருந்து விடுபடலாம். ருத்திராட்சாதிகளை அணிந்தும் பஞ்சாட்சரத்தை ஜெபித்தும் குருஇலிங்கம், சிவனாகிய ஏதேனும் ஒன்றையாவது நினைத்துக் கொண்டு வருவாயாயின் சிதம்பரத்தின்கண் தாண்டவமாடுகின்ற சிவனது திருவடியானது ஜீவர்களின் அந்தக்கரணத்தின்கண் பிரகாசிக்கின்ற பிரதிபிம்ப அறிவுக்கு அறிவைக் கொடுக்கும் உள்ளொளியாய்த் தோன்றுவதாம். அத்திருவடியைப் பணிந்து வணங்கினோமானால் எக்காலமும் வாழ்வாங்கு வாழலாம் என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

மனம் வாக்கு காயத்தினால் சிவனை வழிபட்டால் சிவனது அருள் கிடைக்கும். ஆத்ம ஞானத்தினால் பிறப்பு இறப்பு அற்ற பிறவா நிலையான மோட்சத்தை அடையலாம் என்பது கருத்து. "உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டு சொல்வேன்" என்பது கைவல்ய நவநீதம். அதைப் போல் இங்கு மாற்றலாம் பிறப்பு இறப்பினை என்றார். பிறவி என்பது உண்மையில் பரமார்த்திகமாக இல்லை. இருந்தால் அதை நீக்க முடியாது. பிறப்பு இறப்பு என்ற பிறவிச் சுழலானது தன்னை யறியாத அறியாமையினால் உள்ளது போலவே தோன்றும். தன்னை அறிந்தால் பிறப்பு இறப்பு இல்லவே இல்லை என்பது தோன்றும். இதனையே இங்கு பிறப்பு இறப்பினை மாற்றலாம் என்று குறிப்பிட்டுள்ளார். நீக்கலாம் என்று சொல்லவில்லை. பிறவா நிலையானது தன்னை அறிந்து மாற்றலாமே தவிர, கர்மத்தைச் செய்து போக்க முடியாது என்பது கருத்து.

▲

Koviloor Digital Library

48. வாழலாம் அரன் புகழ்இனம் மலர்கவி
மாலை செய்து அவன்தாளில்
வீழுமாறு பொன் இதழிசேர் தோள்களின் மீது
அணிந்து இனிநெஞ்சே
தாழுவாய் அரிதேடு பொன் சரணமே
சரணம் என்று இது அன்றிப்
பாழிலே கருங்காக்கை போல் கதறிநாள்
பல கழித்து ஒழியேலே.

இதன் பதப்பொருள்

இனி நெஞ்சே வாழலாம் - *இனிமேல் நெஞ்சமே அத்திருவடியை அடைந்து வாழலாம்,* **அரன் புகழ்இனம் மலர் கவி மாலை செய்து அவன் தாளில் வீழுமாறு** - *சிவனது புகழ் பலவாறு இனமாகிய மலர்களாலே பாக்களாகிய மாலை புனைந்து சிவனது திருவடி மீது பொருந்துமாறு,* **பொன் இதழிசேர்** - *பொன் போன்ற கொன்றை மாலை பொருந்திய,* **தோள்களின் மீது அணிந்து** - *புயங்களின் மீது தரித்து,* **தாழுவாய்** - *வணங்குவாய்,* **அரிதேடு பொன் சரணமே** - *அரியாலும் தேடப்பட்ட பொன் போன்ற திருவடியே.* **சரணம் என்று** - *புகலிடம் என்று,* **இதுவன்றி** - *இங்ஙனம் செய்வதல்லால்,* **கருங்காக்கை போல்** - *கரிய காக்கை போன்று,* **கதறி நாள் பல** - *உலக நூல்களைக் கற்றுக் கதறிப் பல நாட்களை,* **பாழிலே கழித்து ஒழியேலே** - *வீணாகவே கழித்து நாசமாகாதே என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

நெஞ்சமே சிவனது திருவடியை அடைந்து வாழலாம்; சிவனது புகழ் இனமாகிய மலர்களாலே பாக்களாகிய மாலை புனைந்து சிவனது திருவடி மீது பொருந்துமாறு பொன்போன்ற கொன்றை மாலை அணிந்த புயங்களின் மீது தரித்து வணங்குவாய். திருமாலாலும் தேடப்பட்ட பொன்போன்ற திருவடியே அடைக்கலம் என்று இங்ஙனம் செய்வதல்லால் கரிய காக்கை போல் உலக நூல்களைக் கற்றுக்கதறிப் பல நாட்களை வீணாகவே கழித்து அழிந்து போய் விடாதே என்று விவேகம் கூறிற்று.

Koviloor Digital Library

விளக்கம்

திருவடி என்பது பிரம்மமே. பிரம்மத்தை ஆத்ம ஞானத்தின் மூலமாக அறியலாம். அதாவது ஆத்ம ஞானம் அறியாமையைப் போக்கும். அப்போது ஆத்மா தான் தானாக விளங்கும். விளக்கானது குடத்தைக் கொண்டு மூடப்பட்டிருக்கிறது. குடத்தை நீக்கினால் விளக்கு பிரகாசிப்பது போல ஆத்மாவை அஞ்ஞானம் மறைத்துள்ளது. அந்த அஞ்ஞானத்தை ஆத்ம ஞானத்தினால் போக்கினால் ஆத்மா விளங்கும் என்பது கருத்து. சிவனது புகழினை நம்மால் வாக்கினால் அளவிட்டுச் சொலற்கு அரியது ஆகலின் "புகழினம்" என்றார். அதனைக் கவியினால் சேர்த்துக் கூறுதலால் "மலர் கவி மாலை" என்றார். தீயோர்களைத் தண்டிப்பது சிவனது கரம். ஆதலால் புயத்தையும், நல்லோர்களைக் காப்பது சிவனது பாதமாதலால் தாளினையும் புகழ்கின்றார். "தோள்களின் மீது அணிந்து" என்றும் அவன் தாளில் வீழுமாறு" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

▲

49. ஒழித்திடும் பவப்பகை விரைந்து உள்ளமே
ஓது மூது உணர்வோர் முன்
பழிச்சு பாடலை அரற்கு அவை விடர்க்கு
இளம் பாவையர் உரைபோலும்
கழித்திடேல் உபச்சாரம் என்று இதனை
நீ கட்டுரை எனக்கொள்வாய்
விழித்து மாரனை எரித்ததே அருள்பெறும்
விருப்பினர் விருப்பு ஈதே.

இதன் பதப்பொருள்

உள்ளமே - நெஞ்சமே, **பவப்பகை விரைந்து** - பிறவியாகிய பகை அதிசீக்கிரத்தில், **ஒழித்திடும்** - ஒழிந்து போகும், **மூது உணர்வோர்** - மாணிக்கவாசகர் சுந்தரர் அப்பர் திருஞானசம்பந்தர் முதலிய! பேரறிவினை உடையவர்கள், **முன் பழிச்சு ஓது பாடலை** - முன்னாளிலே தோத்திரம் பண்ணிய பாடலை, **அரற்கு அவை** - சிவனுக்கு அத்தோத்திரங்கள்,

Koviloor Digital Library

விடர்க்கு இளம் பாவையர் - காமுகர்க்கு இளமையான பெண்ணினது, **உரை போலும்** - கொஞ்சிக் கூறும் வசனம் போல் சிவனுக்குப் பிரியமாயிருக்கும், **நீ உபசாரம் என்று இதனை** - நீ உபசாரமொழி என்று கருதி, **கழித்திடேல்** - இம்மொழியை விட்டு விடாதே, **கட்டுரை எனக்கொள்வாய்** - உறுதிமொழி என்று அறிந்து கொள்வாய், **விழித்து மாரனை** - நெற்றிக்கண்ணை விழித்து மன்மதனை, **எரித்ததே** - எரித்த கடவுளது, **அருள்பெறும் விருப்பினர்** - திருவருளைப் பெறும் விருப்பத்தினையுடைய மெய்யடியாரது, **விருப்பு ஈதே** - விருப்பமும் இத்தோத்திரங்களே என்று விவேகம் கூறிற்று.

பொழிப்புரை

நெஞ்சமே திருஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர் மாணிக்கவாசகர் முதலிய பேரறிவினையுடையவர்கள் முன்னாட்களில் தோத்திரம் பண்ணிய பாடலை நீயும் தோத்திரம் பண்ணுவாய். துதி செய்வாய். அங்ஙனம் செய்தாயாகில்பிறவியாகிய பகை அதி சீக்கிரத்தில் ஒழிந்து போகும். பெண்ணிடம் காமம் கொண்டவன் கொஞ்சிக் கூறும் வசனம் போல அத்தோத்திரங்கள் சிவனுக்குப் பிரியமாயிருக்கும். இதனை நீ வெறும் சொற்கள் என்று கருதி இம்மொழியை விட்டுவிடாதே. உறுதி மொழி என்று அறிந்து கொள்வாய். நெற்றிக்கண்ணை விழித்து மன்மதனை எரித்த கடவுளது திருவருளைப் பெறும் விருப்பத்தினையுடைய மெய்யடியாரது விருப்பம் இத்தோத்திரங்களே என்று விவேகம் கூறிற்று.

விளக்கம்

இறைவனது புகழினைத் தோத்திரம் செய்தால் ஜீவர்களது பாப தோஷமும் விட்சேப தோஷமும் நீங்கும்; இறைவன் ஞானசற்குருவினிடம் சேர்ப்பிப்பார்; ஞானசற்குரு ஞான உபதேசம் செய்து மோட்சத்தைச் சேர்ப்பிப்பார். அதனையே இங்கு "பவப்பகை ஒழித்திடும்" என்றார். இறைவனது புகழைத் தோத்திரம் பண்ணுவது மகிமை பொருந்தியது. மேலான நிலையைச் சேர்க்கக்கூடியது. இதனை உபசாரத்திற்காகச் சொல்லப்பட்டது என்று எடுத்துக் கொள்ளாமல் உறுதி மொழியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது கருத்து.

Koviloor Digital Library

இதற்கு உதாரணம் திருக்குறள்

"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர்புகழ் புரிந்தார் மாட்டு"

▲

50. விருப்பமாய் இது கேட்டி நல் நெஞ்சமே
விமலனுக்கு ஆள் அல்லார்
பொருப்பை நேர்தனம் சொரியினும் அவர்கண்ஓர்
புல்நுனித் துணை அன்பும்
திருப்பிடேல் அரன் தொழும்பர்தம் தொழும்பனாய்த்
திரிந்து அவர்பணி செய்து ஈண்டு
இருப்பை யேல் மிக நல்லை இச்சொல்லை நம்பு
இல்லையேல் பொல்லாயே.

இதன் பதப்பொருள்

நல் நெஞ்சமே விருப்பமாய் இது கேட்டி - *நல்ல நெஞ்சமே இவ்வார்த்தையைச் சந்தோஷமாகக் கேட்பாயாக,* **விமலனுக்கு ஆள் அல்லார்** - *நிர்மலமான சிவனுக்கு அடிமையல்லாதவர்,* **பொருப்பை நேர்தனம்** - *பொன்மலை போன்ற செல்வத்தை,* **சொரியினும்** - *பொழிந்தாலும்,* **அவர்கண் ஓர்புல் நுனி துணை** - *அவர்களிடத்துப் புல்லினது நுனி அளவாயினும்,* **அன்பும் திருப்பிடேல்** - *அன்பு வைக்காதே,* **அரன் தொழு உம்பர்** - *சிவனது அடியாருக்கு,* **தம் தொழும் பனாய்** - *தான் அடியேனாக,* **திரிந்து அவர் பணி செய்து** - *திரிந்து அவரது பணிவிடைகளைச் செய்து,* **ஈண்டு இருப்பையேல்** - *இவ்விடத்து இருப்பாயாகில்,* **மிக நல்லை** - *மிகவும் நன்மை உடைத்தாய் இருப்பாய் நீ,* **இச்சொல்லை நம்பு** - *யான் இங்ஙனம் கூறிய சொற்களை உண்மையாக நம்பு,* **இல்லையேல் பொல்லாயே** - *இவைகளை நம்பாது விட்டுவிடுவாயாகில் நீ எனக்குக் கொடியவனே என்று விவேகம் கூறிற்று.*

பொழிப்புரை

நல்ல நெஞ்சமே இவ்வார்த்தைகளைச் சந்தோஷமாகக் கேட்பாயாக. மலமற்ற பரிசுத்தமான சிவனுக்கு அடிமையல்லாதவர். பொன்மலை போன்ற செல்வத்தை

Koviloor Digital Library

பொழிந்தாலும் அவர்களிடத்துப் புல்லினது நுனி மாத்திரமாயினும் அன்பு வைக்காதே. சிவனது அடியாருக்குத் தான் அடியேனாகத் திரிந்து அவரது பணிவிடைகளைச் செய்து இவ்விடத்து இருப்பாயாக. இதுவே உனக்கு மிகவும் நன்மை உடைத்தாய் இருக்கும். யான் இங்ஙனம் கூறிய சொற்களை உண்மையாக நம்பு. இவைகளை நம்பாது விட்டு விடுவாயாகில் நீ பொல்லாதவனே. கொடியவனே என்று மனதிற்கு விவேகம் கூறிற்று.

விளக்கம்

பொருளைக் கொடுப்பவரிடத்து எவ்வளவு ஆயினும் அன்பு வைக்கக்கூடாது. மலைக்கு நிகராகப் பொருளைக் கொடுப்பவரிடத்தும் விருப்பம் கொள்ளக் கூடாது. அருட்செல்வம் தான் செல்வத்துள் செல்வம். அருட்செல்வமானது சிவனடியாருக்குத் தொண்டு செய்வதால் கிடைக்கும்.

சிவனைப் பக்தி செய்தால் ஜீவர்களுடைய பாபமும் மனதினது சஞ்சலமாகிய மனம் அலைதலும் நீங்கும். சிவனது அனுக்கிரகத்தினால் ஞானகுரு கிடைப்பார். குருவின் ஞான உபதேசத்தினால் ஆத்ம ஞானம் உண்டாகும். ஆத்ம ஞானத்தினால் ஞான நிலை அடைந்து ஞானியாகி வாழ்ந்து கொண்டு இருக்கும் போது பேரானந்தத்தில் இருந்து பிறவா நிலையாகிய மோட்சத்தை அடைவர் என்பது திண்ணம்.

"அன்பர் பணி செய்து என்னை ஆளாக்கிவிட்டால்
இன்ப நிலைதானே எய்தும் பராபரமே"


என்கிறார் தாயுமானவர்.

வைராக்கிய சதகம் சாத்திரம் முற்றிற்று.

Koviloor Digital Library

Koviloor Digital Library

கோவிலூர் மடாலயத்தின் பன்னிரண்டு மடாதிபதிகள்




ஸ்ரீ ல ஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர்
(கோவிலூர் ஆண்டவர்) முதற் பட்டம்




ஸ்ரீ ல ஸ்ரீ அருணாசல ஞானதேசிகர்
(துறவு ஆண்டவர்) இரண்டாவது பட்டம்



ஸ்ரீ ல ஸ்ரீ சிதம்பர ஞானதேசிகர்
மூன்றாம் பட்டம்




ஸ்ரீ ல ஸ்ரீ இராமசாமி ஞானதேசிகர்
நான்காவது பட்டம்



ஸ்ரீ ல ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர்
(திருக்களர் ஆண்டவர்) ஐந்தாவது பட்டம்




ஸ்ரீ ல ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகர்
ஆறாவது பட்டம்




ஸ்ரீ ல ஸ்ரீ மகாதேவ ஞானதேசிகர்
ஏழாவது பட்டம்




ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிகர்
எட்டாவது பட்டம்




ஸ்ரீ ல ஸ்ரீ இராமநாத ஞானதேசிகர்
ஒன்பதாவது பட்டம்



ஸ்ரீ ல ஸ்ரீ இராமநாத ஞானதேசிகர்
பத்தாவது பட்டம்



ஸ்ரீ ல ஸ்ரீ காசி விஸ்வநாத ஞானதேசிகர்
பதினொன்றாவது பட்டம்



ஸ்ரீ ல ஸ்ரீ நாச்சியப்ப ஞானதேசிகர்
பன்னிரண்டாவது பட்டம்

கோவிலூர் மடாலயம், கோவிலூர் - 630307